www.padippakam.com

செப் '97
ம.க.இ.க மாத இதழ்
ரூ. 5.00

# புதிய கலாச்சாரம்



ப் இசையில்
ண்டே மாற்றம்!



தி ஒழிப்பு:
ண்மையும் மாயையும்



ன் இனிய
மிழ் முதலாளிகளே




## தேசிய நாமம்

படிப்பகம்

# சி.பி.எம். பெருமையுடன் வழங்கும்:

# தீண்டாமை எதிர்ப்பு மாநாடு

## (இது ஒரு குறுகிய காலத் தயாரிப்பு)

காலாகாலத்தில் செய்ய வேண்டிய கடமைக்களை மறக்காமல் நிறைவேற்றும் 'மார்க்சிஸ்டு' கட்சியினர் ஜூன் மாத சனிக்கிழமை ஒன்றில் 'தீண்டாமை எதிர்ப்பு' மாநாட்டை ஆயிரம் பேரைத் திரட்டி சென்னையில் நடத்தினர். ''முத்துராமலிங்கத் தேவர் சாதியத் தலைவரில்லை!'' என்ற பாடலுடன் மாநாடு துவங்கியது.

இந்திய மனித உரிமைக் கட்சியின் இளையபெருமாள் பேசியபோது. ''தீண்டாமையை ஒழிப்பதற்குப் பதில் எதிர்ப்பது என்பது நடைமுறைக்கு உதவாது. (பின்னர் போலிகளின் தலைவர்கள் இது தீண்டாமை ஒழிப்பு மாநாடு தான் என்பதை கைதட்டலுக்கிடையில் அறிவித்தனர்.) 50 வருசமா காங்கிரஸ் உட்பட பல கட்சியில் இருந்து பார்த்துட்டேன். தீண்டாமை ஒழியவில்லை! இஸ்லாத்திற்கு மாறினால்தான் சமத்துவம் என்றால் வேறு வழியில்லை. (மேடையில் தலைவர்களை திரும்பிப் பார்த்து) நீங்களும் சீக்கிரம் முடிவு செய்யணும்'' என்றார்.

அடுத்து சர்வோதயத் தலைவர் முதியவர் ஜெகந்நாதன் பேசினார். உழுபவனுக்கு நிலமில்லாமல் சாதிப் பிரச்சனை தீராது என்று துவங்கி கீழத் தஞ்சையில் இறால் பண்ணை பாதிப்புகளை விவரித்தார். பண்ணை வைத்து ஆதாயம் அடையும் அரசியல்வாதிகளில் மு.க. அழகிரி-யைக் குறிப்பிட்டபோது கைதட்டிய தோழர்கள், ஜோதி பாசு மகனைச் சொன்னபோது விழித்தனர். நீதி மன்றமும், அரசும் பண்ணைகளுக்கு ஆதரவாக இருப்பதினால் ஆகஸ்ட் 15ல் - இறால் பண்ணைகளை இடிக்கும் போராட்டம் துவங்க தலைவர்களின் ஆதரவைக் கோரினார்.

93ல் இறால் பண்ணை அழிப்புப் போராட்டத்தை நாம் நடத்தியபோது, அதை எதிர்த்து அரசு கொணர்ந்த மசோதாவை ஆதரித்து பேச்சுவார்த்தையில் கலந்துகொண்டு போராட்டத்தைக் காட்டிக் கொடுத்த ஜெகந்நாதனும், போலிக் கம்யூனிஸ்டுகளும் இன்றைக்கு அதை வசதியாக மறைத்து விட்டுப் பேசினர்.

பின்னர் திரைப்பட இயக்குநர் வி. சேகர் பேசும் போது, ''சாதிக் கலவரம் என்றால், தாழ்த்தப்பட்டவர்கள் மேலும் ஒடுக்கப்படுவார்கள் எனும் நிலை மாறி தென் மாவட்டக் கலவரங்களில் தாழ்த்தப்பட்ட மக்கள் மேல்சாதி ஆதிக்கத்தை எதிர்த்துப் போராடுவது வரவேற்க வேண்டிய ஒன்று'' என்றார். அரங்கம் திடுக்கிட்டு அமைதி காத்தது.

'நாமெல்லாம் மிதவாதிகள் என்பதால் சென்னையில் மாநாடு நடத்துகிறோம். ஆனால் பிரச்சனை உள்ள கிராமங்களில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஆதரவாக மாநாடு நடத்துவதுதான் சரியானது'' என்றார் சேகர். தஞ்சையில் கம்யூனிஸ்டு கட்சி பள்ளன் - பறையன் கட்சி என பெயர் பெற்றதைச் சொல்லி அந்தப் பெயர் தமிழ்நாடு முழுவதும் கிடைத்தால் என்ன தப்பு என்றதும் 'தோழர்கள்' தரப்பில் ஆரவாரம் ஏதுமில்லை.

வி. சேகர் பேசி முடித்ததும் இறுதியாக பலத்த ஆரவாரங்களுக்கிடையில் சி.பி.எம்.மின் மாநில செயலர் சங்கரய்யா பேசினார். 1930 களில் மதுரை மீனாட்சியம்மன் கோவில் நுழைவுப் போராட்டத்தை எதிர்த்து, ஆயிரக்கணக்கான பிராமணப் பெண்கள் தங்களை சபித்தபோது பொறுமையுடன் விளக்கியதை நினைவுகூர்த்து, சாதி காலத்தில் மறைந்து விடும் என்றார்.

'இருப்பினும் தமிழகத்தில் 7000 கிராமங்களில் தேநீர்க் கடைகள், கோவில்கள், குளங்கள் மூலமாக தீண்டாமை கடைபிடிக்கப்படுகிறது. இது போன்ற கிராமங்களில் 20ம் நூற்றாண்டில் இந்த அநாகரீகம் தேவையா என்று தட்டிகள், பிரசுரங்கள், கூட்டங்கள், மேல்சாதி பெரியவர்களிடம் நேரில் பொறுமையாக விளக்குதல் மூலமாக விரிவான பிரச்சாரம் மேற்கொள்ளப்படும்.''

''இதன் பின்னரும் தீண்டாமை மறையவில்லை என்றால், இடதுசாரியினர், முற்போக்காளர்கள் மற்றும் ஜனநாயக சக்திகளைத் திரட்டிக் கொண்டு மார்க்சிஸ்டு கட்சியினர் (தேநீர்க் கடைகளை நடத்தவிட மாட்டோம், கோவில்களில் நுழைவோம், குளங்களில் தடைமீறி நீரெடுப்போம் என்று முடிப்பார், என இருக்கையின் நுனிக்கு வந்தபோது) அமைதியான முறையில் ஆர்ப்பாட்டம் நடத்துவோம், உண்ணாவிரதம் இருப்போம், அரசு எங்கள் கோரிக்கையை நிறைவேற்றும் வரை சாத்வீகப் போராட்டம் தொடரும்'' என்று முடித்தார் சங்கரய்யா. கையொலி அடித்து ஓய 5 நிமிடம் ஆனது. மாநாடு முடிந்தது.

சாதி ஆதிக்கத்திற்கு எதிராக மக்களைத் திரட்டி கீழிருந்து போராடிய வரலாறு வேறு எவரையும் விட ஆரம்ப கால பொதுவுடைமை இயக்கத்திற்கு உண்டு. ஆனால் ஆரம்பம் முதலே போலிகளின் சித்தாந்தம் இந்துமத சீர்திருத்தம் மட்டுமே. ஆதி சங்கரன் மாபெரும் ஞானி, விவேகானந்தர் மாபெரும் சீர்திருத்தவாதி என்று இ.எம்.எஸ். முதல் பி.ஆர். பரமேஸ்வரன் வரை பகிரங்கமாக கொண்டாடுவது அனைவரும் அறிந்த ஒன்று.

வருணாசிரம தர்மத்தை விமர்சிப்பது போல ஆதரிக்கும் போலிகள், நடைமுறையில் கட்சியின் கீழ்மட்ட அளவுகளில் கூட சாதி ஆதிக்கத்தை ஏற்றுக் கொண்டவர்கள்தான். 'காந்தியின் அரிஜன சேவை'க்கும் இவர்களது தலித் உச்சாடனத்திற்கும் வேறுபாடு இல்லை.

பாராளுமன்ற அரசியலில் கரைந்து கழுதையாகிவிட்ட போலிக் கம்யூனிஸ்டுகள் இன்று தலித், சாதிப் பிரச்சனை, தீண்டாமை எதிர்ப்பு பேசுவது தாழ்த்தப்பட்ட மக்களின் ஓட்டுக்களை குறிவைத்துத்தான்.

இந்தப் பெயரளவு சவடாலைக் கூட திருத்தமாக செய்யத் தெரியவில்லை போலிகளுக்கு. பாருங்கள், தீண்டாமை எதிர்ப்பு மாநாட்டின் துவக்கத்தில் உளமுருகி அஞ்சலி செலுத்தியது தஞ்சை பெரிய கோவில் தீ விபத்தில் பலியான பக்தர்களுக்குத்தான், தென் மாவட்டக் கலவரங்களில் கொல்லப்பட்டவர்களுக்கு அல்ல! ■

சி.பி.எம். கலைக்குழுவினர் எமது பாடல்களைத் தமது பாடல்களாகச் சித்தரித்தும், வரிகளை மாற்றியும் பாடுகின்ற நேர்மையற்ற செயலை பலமுறை அம்பலப்படுத்தியும் திருடர்கள் திருந்துவதாக இல்லை. நமது பேரம்பலூர் வாசகர் ஸ்டாலின், அவர்களைக் கையும் களவுமாய்ப் பிடித்துக் கேட்ட போது மக்களுக்காக [திருடி] பாடுவதில் தவறில்லை என்றனராம். நல்லது. 'அரிசனன்னு பேரு வைக்க யாரடா நாயே' என்ற [மக்களுக்கான] நமது பாடலை திருடியோ திருடாமலோ பாடலாம் என்பதற்கு உரிமை தருகிறோம்.



படிப்பகம்

www.padippakam.com

கலை இலக்கியம்
யாவும் மக்களுக்கே

• போர்: 15
• குரல்: 1-4
• ஜூன் - செப். '97

உள்நாடு:
தனி இதழ்: ரூ. 5.00
ஆண்டு சந்தா: ரூ. 60.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 9

படைப்புகள் அனுப்பவும்
தகவல்களுக்கும்

இரா. சீனிவாசன்,
3, நான்காவது தெரு,
செகந்நாதபுரம்,
சேத்துப்பட்டு,
சென்னை - 600 031.

# போலி சுதந்திரத்திற்குப் பொன் விழா ஒரு கேடா?

போலி சுதந்திரத்திற்கு இது பொன்விழா ஆண்டு. அந்தப் போலி சுதந்திரமும் 1994, ஏப்ரல்-15-ஆம் தேதியன்று விலை பேசப்பட்டு விட்டது. நூறாண்டு காலம் போரிட்டு சிறிது சிறிதாக வெள்ளையன் கைப்பற்றிய இந்தியாவை, விள்ளாமல் விரியாமல் வல்லரசுகளின் கைகளில் ஒப்படைத்துவிட்டன இந்திய ஆளும் வர்க்கங்கள். இப்போது நடைபெறுவது உலக வர்த்தகக் கழகத்தின் ஆட்சி; அமெரிக்கா, ஜெர்மனி, ஜப்பான் போன்ற மேல்நிலை வல்லரசுகளின் ஆட்சியின் கீழ் இந்தியா மீண்டும் காலனியாகிக் கொண்டிருக்கிறது. இருந்தாலும் பொன்விழா கொண்டாடுவதற்கு ஆட்சியாளர்கள் வெட்கப்படவில்லை.

பேச்சுரிமை, எழுத்துரிமை, ஓட்டுரிமையைக் கண்டு இதுதான் சுதந்திரம் என்று சிலர் இன்னமும் மயங்குகிறார்கள். நாம் பேசலாம் - ஆனால் பன்னாட்டு முதலாளிகளின் பேச்சுக்கு மட்டும்தான் அரசு காது கொடுக்கும். நாம் எழுதலாம் - ஆனால் கிளின்டனின் கையெழுத்துதான் நம் தலையெழுத்தைத் தீர்மானிக்கும். நாம் ஓட்டளிக்கலாம் - ஆனால் பாராளுமன்றம் பன்னாட்டு முதலாளிகளின் சொற்படிதான் ஆடும். ஒரு இந்தியக் குடிமகன் இந்த நாட்டில் பெற்றிருக்கும் உரிமைகளைக் காட்டிலும், அந்நிய முதலாளி பெற்றிருக்கும் உரிமைகளே அதிகம். யாருடைய சுதந்திரத்தை நாம் கொண்டாடுவது?

கோடிக்கணக்கான நிலமற்ற கூலி விவசாயிகளில் எத்தனை பேருக்கு நிலம் வழங்கியிருக்கிறது இந்த சுதந்திரம்? எத்தனை பண்ணையார்களின் உபரி நிலங்கள் பறிமுதல் செய்யப்பட்டிருக்கின்றன?

பழைய பண்ணைகள் போதாதென்று புதிய பண்ணைகளையும் உருவாக்குகிறது புதிய பொருளாதாரக் கொள்கை. பல ஆயிரம் ஏக்கர் விளை நிலத்தில் பழத்தோட்டம், தேக்குப் பண்ணை, இறால் பண்ணைகளைத் துவக்குகிறார்கள் பன்னாட்டு முதலாளிகள். பாசனத்திற்கு நீரின்றி, குடிக்கவும் நீரின்றி, ஆடு மாடு மேய்க்க நிலமின்றி பிறந்த மண்ணிலேயே அநாதையாகிறார்கள் விவசாயிகள். இந்த அநாதைகள் யாருடைய சுதந்திரத்தைக் கொண்டாடுவது - பண்ணைகளின் சுதந்திரத்தையா?

பொதுத்துறை நிறுவனங்களான தொலைபேசி, மின்சாரம், எண்ணெய் வயல்கள், சுரங்கங்கள், வங்கிகள், ஆயுள் காப்பீட்டுக்கழகம் போன்ற அனைத்தும் கறிக்கு வளர்த்த ஆடுகளைப் போல உலகச் சந்தையில் ஏலம் கூறப்படுகின்றன. தமது உழைப்பால் இவற்றை உருவாக்கிய தொழிலாளர்களின் கழுத்தில் வெட்டுக் கத்தியாக இறங்குகிறது ஆட்குறைப்பு. தொழிலாளி வர்க்கம் எந்தச் சுதந்திரத்தைக் கொண்டாடுவது - வெட்டுக் கத்தியின் சுதந்திரத்தையா?

கடந்த 50 ஆண்டுகளில் சாதிவெறியர்களால் கொல்லப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்கள் எத்தனை ஆயிரம் பேர்? கொலைகாரர்களில் ஒருவன் கூடத் தூக்கிலிடப்பட்டதில்லை. குடியிருக்கவும், குடிநீர் எடுக்கவும், பிணம் எரிக்கவும் கூடச் சுதந்திரம் மறுக்கப்படும் மக்கள் யாருடைய சுதந்திரத்திற்குப் பொன்விழா கொண்டாடுவது - சாதிவெறியர்களின் சுதந்திரத்திற்கா?

கடந்த 50 ஆண்டுகளில் காஷ்மீரிலும், வடகிழக்கிந்திய மாநிலங்களிலும் ராணுவம் இல்லாமல் ஆட்சி நடந்த ஆண்டொன்று உண்டா? ஒருமைப்பாட்டின் பெயரால் தேசிய இனப் போராளிகளும், மக்களும் இந்திய ராணுவத்தின் துப்பாக்கிக்கு இரையாகாத நாள் ஒன்று உண்டா? அந்த மக்கள் எதைக் கொண்டாடுவது - தோட்டாக்களின் சுதந்திரத்தையா?

நீதிமன்றங்கள் இருக்கின்றன. ஆனால் கோடிக்கணக்கில் மக்கள் பணத்தைக் கொள்ளையடித்த இந்திரா முதல் ஜெயலலிதா வரை யாரிடமிருந்தும் கொள்ளையடித்த பணத்தில் ஒரு சதவீதம் கூடப் பறிமுதல் செய்யப்பட்டதில்லை; டெல்லியில் 5000 சீக்கியர்களைக் கொன்ற காங்கிரசு காலிகளோ, பம்பாயில் 2000 முஸ்லீம்களைக் கொன்ற சிவசேனா குண்டர்களோ, போபாலில் 5000 பேரின் உயிரைக் குடித்த அமெரிக்க யூனியன் கார்பைடு முதலாளியோ யாரும் இதுவரை தண்டிக்கப்படவில்லை. பாதிக்கப்பட்ட மக்கள் எதைக் கொண்டாடுவது - கிரிமினல்களின் சுதந்திரத்தையா?

உழைக்கும் மக்களின் எந்தப் பிரிவினரும் இந்தச் சுதந்திரத்தைக் கொண்டாட முடியாது. இது மக்கள் விரோதிகள் நடத்தும் பொன்விழா. விடுதலை விரும்பும் உழைக்கும் மக்களின் திருவிழா - நக்சல்பாரிப் புரட்சியாளர்களின் தலைமையிலான புதிய ஜனநாயகப் புரட்சி!

படிப்பகம்

www.padippakam.com

# தேசங் கடக்குது தேசபக்தி!

## பாப் இசையில் வ.ந்.தே-மா.த.ர.ம்.

''வந்தே மாதரம். ஏழெட்டு தடவை சொல்லிப் பாருங்கள், நாவினிக்கும், தொண்டை இனிக்கும்'' என்று ஒரு தனியார் தொலைக்காட்சியில் விளம்பரம் செய்து கொண்டிருந்தார் எழுத்தாளர் சிவசங்கரி. அதென்ன சர்க்கரை வியாதிக்கு மாற்று மருந்தா என்று வாசகர்கள் தேடியலைய வேண்டாம். ''சொல்லச் சொல்ல இனிக்குதடா... முருகா'' மாதிரி இதுவும் ஒரு இனிப்பு மந்திரம்.

வந்தேமாதரம். ஆனந்தமடம் நாவல் வாயிலாக பங்கிம் சந்திரரால் அறிமுகப்படுத்தப்பட்ட பாடல். தற்போதுள்ள ''ஜன கண மன'' வுக்குப் பதிலாக இதையே தேசிய கீதமாக அறிவிக்க வேண்டுமென்பது பாரதீய ஜனதாவின் கோரிக்கை. பார்ப்பன இந்து தேசியத்தை உத்திரவாதம் செய்யும் பாடல் இது என்பதை நிரூபிக்க இதை விட வேறு சான்று தேவையில்லை.

கசையடியையும், தடியடியையும், சிறைவாசத்தையும் சகித்துக் கொள்வதற்கு காந்தியவாதிகளுக்கு அருமருந்தாகப் பயன்பட்ட 'வந்தேமாதரம்' சுதந்திரத்தின் பொன்விழாவையொட்டி மலிவு விலையில் விற்பனைக்கு வந்திருக்கிறது.

சோனி நிறுவனம் வழங்கும் ஏ.ஆர். ரகுமானின் ஒரிஜினல் வந்தே மாதரம் விலை அறுபதே ரூபாய். டூப்ளிகேட் வந்தேமாதரம் இன்னும் மலிவு விலையில் கிடைக்கலாம்.

ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னால் பிறக்கும் பாக்கியம் பெறாதவர்களும், பிறந்தும் டெல்லி சென்று சுதந்திரம் 'கை மாறுவதை'க் காணக் கொடுத்து வைக்காதவர்களும், 1997 ஆகஸ்டு - 14 நள்ளிரவில் தொலைக்காட்சிப் பெட்டியின் முன்னால் கண் விழித்து அமர்ந்திருந்தோம்.

தூர்தர்ஷன் மட்டுமின்றி, பி.பி.சி., சி.என்.என், ஸ்டார் போன்ற அந்நியத் தொலைக்காட்சிகளும் பொன்விழாக் கொண்டாட்டத்தை நேரடியாக ஒளிபரப்பின; எம்.டி.வி., வி.சானல் போன்ற சர்வதேசத் தொலைக்காட்சிகள் திரையில் தோன்றும் தங்கள் நிறுவனத்தின் பெயருக்கே மூவண்ணம் தீட்டிவிட்டன. கத்தியின்றி ரத்தமின்றி உலகத்தையே இந்தியா வென்றடக்கி விட்டதோ என்ற ஐயம் ஒரு கணம் எழத்தான் செய்தது!

''1947 ஆகஸ்டில் பெற்றது போலி சுதந்திரம்; இப்போது உலக வர்த்தகக் கழகத்தின் கீழ் இன்னொரு சமஸ்தானமாக இணைந்திருக்கும் இந்தியா, பெயரளவிலான இறையாண்மையையும் இழந்து மீண்டும் காலனியாகி வருகிறது'' என்ற உண்மையை ஏகப்பட்ட ஆதாரங்களுடன் சிரமப்பட்டு நிறுவ வேண்டிய அவசியமின்றி மிக எளிதாகப் புரிய வைத்தது இந்தப் பொன்விழாவின் நேரடி ஒளிபரப்பு.

டெல்லி விஜய் சதுக்கத்தில் அமைக்கப்பட்டிருந்த பிரம்மாண்டமான மேடையின் பின்புறம் லேசர் வாண வேடிக்கை. முன்புறம் அதை வாய்பிளந்து பார்க்க வந்த இந்தியர்கள். பல்வேறு 'பிராந்தியங்களின்' கலைக்குழுக்கள் ஆடிக் களைத்து இறங்கியபின் ரகுமானின் வருகையை அறிவித்தார் அறிவிப்பாளர்.

''சுதந்திரத்தின் பொன்விழாவையொட்டி தான் இசையமைத்திருக்கும் 'வந்தே மாதரம்' என்ற தொகுப்பிலிருந்து சில பாடல்களைப் பாடவிருக்கிறார் ரகுமான். அவரை அறிமுகப்படுத்தத் தேவையில்லை. ரகுமானைத் தெரியாதவர்கள் இசையைத் தெரியாதவர்கள்'' என்றார்.

ஜீன்ஸ் பாண்ட், தொள தொளப்பான வெள்ளை சட்டை, பிய்த்து விடப்பட்ட தலைமுடியுடன் மேடையேறினார் ரகுமான். லேசான ஹம்மிங்கில் தொடங்கியது பாடல். சாமியாடியைப் போல சற்று நேரம் கண்களை இறுக மூடிக் கொண்டு 'தேசபக்தி'யை வரவழைத்துக் கொண்ட பின்னால் லேசாக வலிப்பு வந்தவரின் தோரணையில் வந்தே மாதரத்தைத் தொடங்கினார் ரகுமான்.

> ''இந்தியா, பெயரளவிலான இறையாண்மையையும் இழந்து மீண்டும் காலனியாகி வருகிறது' என்ற உண்மையை ஏகப்பட்ட ஆதாரங்களுடன் நிறுவ வேண்டிய அவசியமின்றி எளிதாகப் புரிய வைத்தது பொன்விழாவின் நேரடி ஒளிபரப்பு''

வந்தே மாதரம் ஒளிப்பேழையாகவும் (வீடியோ காசெட்) விரைவில் வெளிவருமாம். தற்போது 'வந்தே மாதரம்' என்ற பாடல் மட்டும் காட்சியமைப்புடன் பதிவு செய்யப்பட்டுள்ளது. எனவே அது மீண்டும் மீண்டும் ஒளிபரப்பப் படுகிறது. (இந்த தேசபக்திப் பிரச்சாரத்தில் தூர்தர்ஷனை விஞ்சுகிறது சன் டி.வி.)

பாலைவனத்தில் மூவண்ணக் கொடி பறக்கிறது. பாலைவன மணலின் மஞ்சள் நிறத்துக்குத் தோதான எதிர் நிறத்தில் உடையணிந்த இந்தியர்கள் திட்டுத் திட்டாகக் கீழே நிற்கிறார்கள். கொடியின் மறைவிலிருந்து ஹெலிகாப்டர்கள் வெளியே வருகின்றன. கீழே அண்ணாந்து பார்த்து நிற்கும் இந்தியர்களுக்கு சோத்துப் பொட்டலம் போடவா, குண்டு போடவா என்று தெரியவில்லை.

அப்புறம், மணிரத்தினம் - சுகாசினியின் 'இந்திரா' படத்தில் தாழ்த்தப்பட்ட சிறுமிகள் பட்டுப் பாவாடை சட்டையுடன் சந்தோஷமாகத் துள்ளிக் குதிப்பதைப் போல, கையில் தேசியக் கொடியுடன் சிறுவர்களும், சிறுமிகளும் குறுக்கு நெடுக்காக ஸ்லோமோஷனில் ஓடுகிறார்கள். எல்லோரும் மகிழ்ச்சியையும், வெகுளித்தனத்தையும், வெட்கத்தையும் மட்டுமே வெளிப்படுத்தும் ஆபத்தில்லாத, தொல்லையில்லாத இந்தியச் சிறுவர்கள், சிறுமிகள்.

தனக்கு மெட்டுக்களை வாரி வழங்கும் ராஜஸ்தான் விசயத்தில் ரகுமான் நன்றி மறக்கவில்லை. பள்ளிகள் நடத்தும் சுதந்திரதின அணிவகுப்பு போல இரண்டிரண்டு பேராக பாலைவனத்தில் ஒரு நீண்ட வரிசையை ஊர்வலம் விட்டுவிட்டார். என்ன, சுதந்திரத்தின் சூடு பொறுக்காமல் அவர்கள் கொஞ்சம் கஷ்டப்பட்டிருப்பார்கள் - அவ்வளவுதான்.

பிறகு யானை மீது தேசியக் கொடி; கதகளி நடனம்... அவ்வளவுதான்.

இந்தக் காட்சிகளின் பின்னணியில், தொலை தூரத்தில், கால்களைக்


படிப்பகம்

www.padippakam.com

கொஞ்சம் முன்னால் மடக்கி, கைகளை உயர்த்தி, இதயத்திலிருந்தோ - வயிற்றிலிருந்தோ அல்லாமல் தொண்டையிலிருந்து ''வந்தே... மாதரம்'' என்று ரகுமான் பாடுகிறார். பம்பாய் படத்தில் பாறை மீது நின்று கொண்டு விரக வேதனையுடன் ''உயிரே... உயிரே'' என அரவிந்தசாமி அரற்றும் காட்சி நினைவுக்கு வந்தது.




கதர்க் குல்லாய்க்காரர்கள் போராடியதையும், தடியடிபட்டதையும், சூடு பட்டுச் செத்ததையும் காட்சிகளாக வடிவமைத்து 'வந்தே மாதரம்' பாடுவதை விட்டு பாலைவனத்தில் ஏன் கொடியேற்றவேண்டும் என்று கலாரசனையற்ற பாமரர்கள் சிந்திக்கலாம்.

சோனி எனும் ஏகாதிபத்தியத் தொழில் நிறுவனத்தால் உலகெங்கிலுமுள்ள 27 நாடுகளில் ஒரே நேரத்தில் வெளியிடப்படும் தேசங்கடந்த தேசபக்திப் பாடல் ஒலிப்பேழை - வந்தே மாதரம். அவ்வாறிருக்க அதில் குறுகிய தேசிய உணர்வைத் தூண்டும் விவகாரங்களும், எதிர்கால சந்தையைப் பாதிக்கக் கூடிய கடந்த கால வரலாறும் கிளறப்படாமல் இருப்பது நல்லது என அவர்கள் கருதியிருக்கக் கூடும்.

விஜய் சதுக்கத்தின் மேடையில் ரகுமான் இரண்டு பாடல்களைப் பாடிய பின் கிடைத்த இடைவேளையில் இந்தியாவின் இந்நாள் பிரதமரும் முன்னாள் பிரதமர்களும் மேடையேற்றப்பட்டார்கள். மைனாரிட்டி அதிசயமான சந்திரசேகர் முதல் 13 நாள் அற்புதமான வாஜ்பாயி வரை அனைவரும் பிடிபட்ட குற்றவாளிகள் போல சிறிது நேரம் மேடையில் வரிசையாக நிறுத்தப்பட்டபின், தொலைக்காட்சிக் காமெரா ரகுமானிடம் பிரியாவிடை பெற்று பாராளுமன்றம் சென்றது.

மின்னணு இசைக்கருவிகளுடன் மக்கள் மன்றத்தில் ரகுமானின் 'வந்தே மாதரம்' தொடர, மக்கள் பிரதிநிதிகள் மன்றத்தில், பழைய ஆர்மோனியப் பெட்டியின் துணையுடன் பீம்சேன் ஜோஷி நடுங்கும் குரலில் தனது வந்தே மாதரத்தைத் துவங்கினார்.

இந்துஸ்தானி வந்தேமாதரம், பாப் வந்தேமாதரமாக உருமாறியதெப்படி?

''புதிய ஒலிகளைப் பயன்படுத்தி வந்தே மாதரம் பாடலுக்குப் புத்துயிர் கொடுக்கலாம், எல்லோரும் பாடத்தக்க பாடலாக அதை மாற்றலாம் என்ற யோசனையுடன் என் நண்பன் பாலா என்னை அணுகினான்.. ஒரிஜினல் மெட்டு மிகவும் ஆன்மீகத்தன்மை கொண்டதாக இருந்ததால் (அதை மாற்றி) புதிதாக இசையமைக்க எனக்கு 3 மாதங்கள் பிடித்தது'' என்கிறார் ரகுமான்.

வந்தே மாதரம் என்பதைத் 'தாய் மண்ணே வணக்கம்' என்று மொழியாக்கம் செய்து பாட்டெழுதிக் கொடுத்திருக்கிறார் கவியரசு வைரமுத்து. வால்மீகிக்குத் திருத்தம் செய்து ராமாயணத்தைத் தமிழாக்கிய கவிச் சக்கரவர்த்தி கம்பனை இனத் துரோகி என்றார் பெரியார். இந்தக் கவியரசரை என்னவென்று அழைப்பது?

இந்த ஒலி, ஒளிப் பேழைகளை நாம் இன்னும் முழுமையாகக் காண, கேட்கவில்லை. எனினும் பானைச் சோறு எப்படி இருக்கும் என்பதை ஒரு சோறே காட்டுகிறது.

முற்றிலும் லண்டனில் பதிவு செய்யப்பட்ட இந்த வந்தேமாதரம் பாடல் ஒலி / ஒளிப் பேழையில் லெக் வாலேசா, அன்னை தெரசா, தலாய் லாமா, மாதுரி தீட்சித் போன்ற பலர் வந்தே மாதரத்திற்கு உதட்டசைத்திருக்கிறார்களாம். கிளிண்டனை அணுகினார்களா என்று தெரியவில்லை.

**''வந்தே மாதரத்தின் இசையை மட்டுமல்ல, பாடகனையும் சர்வதேசத் 'தரத்திற்கு' மாற்றியமைத்து விட்டது சோனி நிறுவனம். மைக்கேல் ஜாக்சன் போன்ற பாப் பாடகர்களின் 'ரகே' பாணியில் ரகுமானின் தலைமுடியையும் பிய்த்துத் தொங்கவிட்டு விட்டது.**

''ஒரு முற்றிலும் புதிய தலைமுறை என் இசையை ரசித்துக் கொண்டிருக்கிறது. 15 ஆண்டுகளுக்குப் பின் நான் திரும்பிப் பார்க்கும் போது அவர்கள் 'முக்காபுலா', 'சிக்கு புக்கு ரயிலே' என்று மட்டும் பாடிக் கொண்டிருக்கக் கூடாது. வந்தேமாதரம் போன்ற பாடல் ஒலிப் பேழைகளை நான் வெளியிடும் காரணம் இதுதான்'' என்கிறார் ரகுமான்.

''இனி வரும் வருடங்களுக்கு இந்திய இளைஞர்களுக்கு ஒரு இசை உற்சாகத்தை அளிக்கத்தான் வந்தேமாதரம்'' என்கிறார் சோனி நிறுவனத்தின் இயக்குநர்.

வந்தேமாதரத்தின் இசையை மட்டுமல்ல, பாடகனையும் சர்வதேசத் 'தரத்திற்கு' மாற்றியமைத்து விட்டது சோனி. மைக்கேல் ஜாக்சன் போன்றோரைப் போல ரகுமானின் தலைமுடியையும் பிய்த்துத் தொங்கவிட்டு விட்டது. உலக வர்த்தகக் கழகத்தின் ஆணைக்கு ஏற்ப இந்திய அரசியல் சட்டத்தையே திருத்தியமைக்கலாம் என்னும் போது முடியைத் திருத்துவதொன்றும் பெரிய விவகாரமில்லை.

பொன்விழாவையொட்டி இந்திய இளைஞர்களிடம் சுதந்திரம் பற்றி கருத்து கேட்டது ஸ்டார் ப்ளஸ் தொலைக்காட்சி.

''முன்பு சன்னி மொபெட்டில் சென்று கொண்டிருந்தேன்; இப்போது சுசுகி வாங்கியிருக்கிறேன். வேகமாக சுதந்திரமாகச் செல்கிறேன்'' என்றார் ஒரு இந்திய இளைஞர்.

ஆகஸ்டு - 14 பாகிஸ்தான் சுதந்திரத்தைக் கொண்டாடும் முகமாக வி - சானல் தொலைக்காட்சியில் ஜீன்ஸ் பாண்ட் அணிந்த பாப் பாடகி மேடையில் வந்து குதித்து 'அஸ்ஸலாமு அலைக்கும்' என்றவுடன் அரங்கமே விசிலடித்து ஆர்ப்பரித்தது.

ஆகஸ்டு - 15 இந்தியப் பொன் விழா கொண்டாட்டத்தையொட்டிய வி.சானலின் சிறப்பு நிகழ்ச்சியில் ஒரு பாப் பாடகி மேடையில் தோன்றினார். நாற்காலியில் அமர்ந்து குனிந்து நிமிர்ந்தார். அவரது மேற்சட்டையின் முன்புறம் டர்ர்ரென்று கிழிந்தது - வந்தே மாதரம்!

■ புதூர் இராசவேல்

படிப்பகம்

www.padippakam.com

# திரைப்படத் தொழிலாளர் போராட்டம் வெல்லட்டும்

தமிழ்த் திரையுலகத் தொழிலாளர்களின் வேலை நிறுத்தம் தொடர்கிறது. இக் கட்டுரை எழுதத் துவங்கும் வரை இது தான் நிலை.

அரசு ஆதரவு, பத்திரிகைகளின் ஆதரவு, பண பலம் அனைத்தையும் பெற்றிருக்கும் பட முதலாளிகளுக்கெதிராக ஃபெப்சி தொழிலாளர்கள் நடத்தும் விடாப் பிடியான போராட்டம் நெஞ்சை நிமிர்த்துகிறது.

''மாதக் கணக்கில் போராடினால் பட்டினி கிடக்க வேண்டியிருக்குமே'' என்று கேட்ட போது ''சினிமாத் தொழிலாளிக்கு பட்டினி என்பது பழக்கமான விசயம்'' என்றார் ஒரு தொழிலாளி. தங்களது ஒன்று பட்ட சங்கத்தை உடைக்க அனுமதித்துவிட்டால் சூதாடிகளும், மோசடிப் பேர்வழிகளும், நாணயம் கெட்டவர்களுமான பட முதலாளிகளின் கையில் சிக்கி என்ன பாடுபட வேண்டியிருக்கும் என்பதைத் தொழிலாளிகள் உணர்ந்திருப்பதால்தான் இந்த உறுதி!

தொழிற்சங்கப் போராட்டங்களில் வெற்றி தோல்விகள் சகஜம். சொல்லப் போனால் வெற்றியைவிடத் தோல்விகள் தான் அதிகமிருக்கும். எனவே முடிவு என்னவாக இருந்தாலும், திரையுலகின் நிழல் மனிதர்களையும், நட்சத்திரங்களையும், அவர்களுடைய அரிதாரத்தையும் கலைத்து சந்திக்கு இழுத்து வந்துவிட்டது இந்தப் போராட்டம். அந்தவகையில் தமிழ் மக்கள் ஃபெப்சி தொழிலாளர்களுக்கு நன்றி சொல்லத் தான் வேண்டும்.

**பிரச்சினையின் பின்னணி என்ன?**

ஒரு ஆண்டில் வெளியாகும் சுமார் 150 தமிழ்ப் படங்களில் 5 படங்கள் மட்டுமே போதிய லாபம் தருகின்றன. மற்ற தோல்வியடையும் படங்களுக்கு முன்பணம் கொடுத்து சூதாட விநியோகஸ்தர்கள் தயாராக இல்லை.

தயாரிப்புச் செலவில் கதாநாயகன், நாயகி மற்றும் முன்னணி நட்சத்திரங்களின் சம்பளம் சுமார் 30 சதவீதம்; இயக்குநருக்கு 10 சதவீதம்; தயாரிப்பு செலவு 50 சதவீதம்; தொழிலாளிகள் அனைவரின் சம்பளம் 10 சதவீதம் - இதுதான் உத்தேசமாக தமிழ் சினிமா ஒன்றின் தயாரிப்புச் செலவு கணக்கு என்று கூறப்படுகிறது.

இருந்தாலும் தயாரிப்புச் செலவைக் குறைக்க வேண்டும். என்ன செய்யலாம்? ரசிகர்களாகிய மக்கள் தலையில் கைவைக்கலாம், அல்லது திரையுலகத் தொழிலாளர்கள் தலையில் கைவைக்கலாம். டிக்கெட் விலையேற்றி மக்களை சமீபத்தில்தான் மொட்டையடித்திருக்கிறார்கள் என்பதால் கத்தியை இப்போது தொழிலாளர்களை நோக்கித் திருப்பியிருக்கிறார்கள்.

**தொழிலாளி வேடத்தில் முதலாளிகள்**

பட முதலாளிகளுக்கும் தொழிலாளர்களுக்கும் இடையிலான இந்தப் பிரச்சினை இயக்குநர்களுக்கும் தொழிலாளர்களுக்கும் இடையிலான மோதலாக மாறிய மர்மம் என்ன?

இயக்குநர்கள் என்ற பெயரில் இப்போது களத்தில் நிற்பவர்களில் மனோஜ் கிரியேஷன்ஸ் பாரதிராஜா, கவிதாலயா பாலசந்தர் போன்ற பெரும்பான்மையோர் முதலாளிகள். மற்றவர்களோ தயாரிப்பாளர்களிடம் உள்குத்தகை எடுத்து அதில் லாபம் பார்க்கும் இயக்குனர்கள். எடுத்துக்காட்டாக 3 கோடி ரூபாயில் ஒரு 'விஜயகாந்த் படம்' முடித்துத் தருகிறேன் என்று தயாரிப்பாளரிடம் பணம் வாங்கிக் கொண்டு அதில் இயன்றவரை லாபம் பார்ப்பவர்கள்.

முதலாளிகள் என்று சொல்லிக் கொண்டு களத்தில் நின்றால் தங்கள் ''சுரண்டும் உரிமை'' பற்றிப் பேச வேண்டியிருக்கும். மக்கள் ஆதரவும் கிடைக்காது. எனவேதான் இயக்குநர் வேடத்துக்கு மாறிக் கொண்டு ''படைப்புரிமை, கலைஞனின் சுதந்திரம், தமிழுணர்வு'' என்று வசனம் பேசுகிறார்கள்.

**பிற தொழில்களைப் போன்றதல்ல திரைப்படத் தொழில்**

சினிமா தொழிலாளர்களின் வேலை நிலைமைகளும், அவர்களது பிரச்சினைகளும் மிகச் சிக்கலானவை.

முதலாளிகள் பலர் முகவரி இல்லாதவர்கள். சூது, மோசடி, வாய் ஜாலம் ஆகியவற்றையே மூலதனமாக வைத்துப் படப்பிடிப்பைத் தொடங்கும் பல முதலாளிகள் எப்போது ஓடுவார்கள் என்பதைச் சொல்லவே முடியாது.

ஃபெப்சி என்ற திரைப்பட ஊழியர் சம்மேளனம், இயக்குநர்கள் சங்கம் முதல் சமையல் தொழிலாளர்கள் சங்கம் வரையிலான 24 சங்கங்களை உள்ளடக்கிய சம்மேளனமாகும். இயக்குநர் முதல் கடைநிலைத் தொழிலாளி வரை ஒவ்வொரு பிரிவினருக்கும் ஊதிய ஒப்பந்தப்படி சம்பளம் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. தொழிலாளிகளுக்கு இந்த நிர்ணயிக்கப்பட்ட கூலி மட்டுமே கிடைக்கும்.

ஆனால் இயக்குநர் போன்றோரின் சம்பளம் அவர்களது மார்க்கெட்டைப் பொருத்து கருப்பு நிறத்தில் தீர்மானிக்கப்படும். நட்சத்திர இயக்குநராக உயர்ந்துவிட்டவர்கள் இன்னும் ஒருபடி மேலே போய் தயாரிப்பாளராக மாறி சொந்தப் படம் எடுக்கிறார்கள்.

எனவே ஃபெப்சியை உடைப்பதற்குக் காரணமான பிரச்சினை படைப்பாளி - தொழிலாளி பிரச்சினை அல்ல; முதலாளி - தொழிலாளி முரண்பாடுதான் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். இதைப் புரிந்து கொண்டால்தான், தொழிலாளிகள் தரப்பின் நியாயத்தை புரிந்து கொள்ள முடியும். கருங்காலிகள் தரப்பின் மோசடியையும் புரிந்து கொள்ள முடியும்.

• • •

# பாரதிராஜாவுக்கு ஒரு பகிரங்கக் கடிதம்

இயக்குநர் இமயம் பாரதிராஜா அவர்களே, மற்றும் சிகரங்களே, குன்றுகளே,

'ஜனநாயகம் என்றால் என்ன' என்ற தத்துவக் கேள்வியை எழுப்பியிருக்கிறார்கள் உங்கள் சகோதர இயக்குநர்கள்.

''பல லட்சம் சம்பாதிக்கும் எனக்கும் ஒரு ஓட்டு, நூறு ரூபாய் சம்பளம் வாங்கும் லைட்மேனுக்கும் ஒரு ஓட்டா? '' என்பதுதான் உங்கள் உண்மையான உள்ளக் குமுறல்.

இதை வெளிப்படையாகக் கேட்க வேண்டியதுதானே! ''படைப்பாளி - கலை - எதார்த்தம்'' என்று எதற்காக குப்பையைக் கிளற வேண்டும்?

**படைப்பாளியா வியாபாரியா?**

கலைத் தாய், கலைச் சேவை போன்ற 40 வருடங்களுக்கு முந்தைய வசனங்களையெல்லாம் எடுத்து விடுகிறீர்களே, எந்தத் தேதியிலிருந்து நீங்கள் படைப்பாளிகள் ஆனீர்கள்?

''சோப்பு வியாபாரி சோப்பு விற்கிறான்; நான் சினிமா விற்கிறேன்'' என்று ஒருமுறை சொன்னார் மணி ரத்தினம். வியாபாரி என்ற சொல்லுக்குப் பன்மை -

www.padippakam.com

வியாபாரிகள். தனியாளாக இருந்தால் வியாபாரி; கூட்டமாய்ச் சேர்ந்தால் படைப்பாளிகளா?

ராமன் - அப்துல்லா படப்பிடிப்பில் நடந்த பிரச்சினை என்ன? வசனம் இல்லாத பாத்திரங்களில் துணை நடிகர்களைத்தான் பயன்படுத்த வேண்டும் என்பது நீங்கள் அனைவரும் ஏற்றுக் கொண்ட விதி. அதைக் கடைப்பிடிக்கச் சொல்லி கேட்பதில் என்ன தவறு?

**கவர்ச்சிக்கு பம்பாய்**
**கலைக்கு கிராமத்து ஆள்!**

'கிழக்குச் சீமையிலே' திரைப்படத்தின் கிளைமேக்ஸ் காட்சியில் கிராமத்து ஆட்கள் கட்டிப்புரண்டு சண்டை போடும் காட்சி யதார்த்தமாக இருக்க வேண்டும் என்பதற்காக ஒரிஜினல் கிராமத்து ஆட்களை, ஒரிஜனல் வயலில், ஒரிஜினலாக கட்டிப் புரண்டு சண்டைபோட வைத்து படமெடுத்ததாகவும் 'அந்தக் காட்சியில் சண்டை நடிகர்களாகிய எங்களை ஏன் பயன்படுத்தவில்லை?' என்று தொழிலாளர்கள் சண்டைக்கு வந்ததாகவும் கூறியிருக்கிறீர்கள்.

சினிமா என்கிற உன்னதமான கலையை வாழ வைப்பதற்காக எத்தனை இன்னல்களையும், அவமானங்களையும் நீங்கள் மௌனமாக சகித்துக் கொண்டு வந்திருக்கிறீர்கள் என்ற உண்மை இப்பொழுதல்லவா தெரிய வருகிறது!

அட உத்தமபுத்திரர்களே! கிளைமேக்ஸ் சண்டையில் கட்டிப் புரள ஸ்டண்டு நடிகர்களைச் சேர்த்தால் யதார்த்தம் கெட்டு விடும். ஆனால் படம் முழுவதும் கதாநாயகனுடன் கட்டிப் புரள கதாநாயகி மட்டும் பம்பாயில் இருந்து வர வேண்டுமோ? ஏன் அதற்கு அல்லி நகரம், ஆண்டிப்பட்டி, உசிலம்பட்டியில் ஒரிஜினல் முத்துப்பேச்சிகள் யாரும் கிடைக்கவில்லையா?

நக்மா நாத்து நட்டதையும், குஷ்பூ கரகாட்டம் ஆடியதையும், பால்காரன் பவர் ஷூ போட்டுக் கொண்டு பால் கறப்பதையும், காசு கொடுத்துப் பார்த்துச் சகித்துக் கொண்டிருப்பவர்கள் நாங்கள்.

தாத்தாவும் பேத்தியும் டூயட் பாடலாம்; புகைக்குப் பின்னால் ஆடும் பெண்கள் மட்டும் பருவக் குமரிகளாக இருக்க வேண்டுமோ? டோப்பா தலையர்கள் கல்லூரி மாணவனாக நடிக்கலாம்; அவனைச் சுற்றி வரும் துணை நடிகர்கள் கூட்டம் மட்டும் கட்டிளங் காளைகளாக இருக்க வேண்டுமோ?

தங்கள் வயிற்றுப்பாட்டுக்கு இந்தத் தொழிலையே நம்பியிருக்கும் துணை நடிகர்களும் தொழிலாளிகளும் இதைக் கேட்கக் கூடாதா? அவர்கள் கதையை மாற்றச் சொன்னார்களா, காட்சிகளைத் திருத்தச் சொன்னார்களா? ''இருக்கின்ற வேலை வாய்ப்பையும் பறித்து வயிற்றில் அடிக்காதே'' என்கிறார்கள். இதில் என்ன குற்றம்?

**படைப்புக்காக உயிர் கொடுத்த**
**படைப்பாளி யார்?**

பாலு மகேந்திராவின் 'மறுபடியும்' திரைப்படத்தில் ஒரு காட்சி வருகிறது. பாடல் காட்சியை ஆபாச நடனமாக மாற்ற முடியாது என்று மறுத்து விநியோகஸ்தர்களுடன் கட்டிப் புரளுவார் இயக்குநராக நடிக்கும் நிழல்கள் ரவி.

**'முற்போக்கும், தமிழுணர்வும்' முதலாளிகளுக்கு ஆதரவு**

*தொழிலாளர்களை ஆதரித்து ஆகஸ்டு - 6-ம் தேதியன்று வடபழனியில் ஒரு பொதுக்கூட்டம் நடத்தியது முற்போக்கு எழுத்தாளர் சங்கம். கூட்டத்தின் தலைப்பு ":பெப்சி தொழிலாளர்களுக்காக உரக்கப் பேசுவோம்". என்ன பேசினார்கள் என்பது ஒருபுறமிருக்கட்டும்.*

*அன்றைக்குக் காலையில் வெளிவந்த தீக்கதிரில், படைப்பாளிகளுக்குத் தங்கள் விசுவாசத்தை அதைவிட 'உரக்கத்' தெரிவித்து விட்டார்கள். ம.க.இ.க.வின் வெளியீட்டை சாடி, பாரதிராஜா முதல் விசு வரையிலான அனைத்து 'முற்போக்கு' இயக்குநர்களையும் ஆதரித்து ஒரு கட்டுரை வெளியிட்டு மாலையில் நடத்தவிருக்கும் கூட்டத்திற்கு, காலையிலேயே 'பாவமன்னிப்பு' கேட்டு விட்டார்கள்.*

• ° •

*படைப்பாளிகளிடம் மார்க்சிஸ்டுகள் கண்டது முற்போக்கு. பேரா. சுப. வீரபாண்டியனை சிறப்பாசிரியராகக் கொண்டு வெளிவரும் 'நந்தன்' பத்திரிகை கண்டதோ தமிழுணர்வு.*

*"1. தொழிற்சங்கம் வரம்பு மீறும்போது ஏற்படக்கூடிய உட்சண்டை, 2. திரைப்படத் துறையிலும் மெதுவாக அரும்பத் தொடங்கியிருக்கும் 'தமிழர்' எனும் உணர்வு" - இவைதான் திரைப்படத்துறையினரின் போராட்டத்தில் 'நந்தன்' கண்டுள்ள இரண்டு கூறுகள்.*

*உலகத் தொழிலாளர் ஒற்றுமை பேசும் தீக்கதிரும், 'உலகத் தமிழர்களை ஒன்றிணைக்கும் ஏடு' என அறிவித்துக் கொண்டுள்ள நந்தன் ஏடும் ஒரே அணியில் நிற்கின்றன. இந்த 'அதிசய' ஒற்றுமையின் ரகசியம் குறித்த கட்டுரை, அடுத்த இதழில் வெளிவரும்.*

பாரதிராஜா அவர்களே, உங்கள் படைப்பாளிகள் கூட்டமைப்பில் இப்படி படைப்புக்காகப் போராடி உயிர்நீத்த இயக்குநர்கள் எத்தனை பேர்? தியாகிகள் பட்டியலைக் கொஞ்சம் வெளியிடுவீர்களா?

நாங்கள் வெளியிடுகிறோம். உங்கள் மயிர்க் கூச்செறியும், பயங்கரமான சண்டைக் காட்சிகளில் அடிபட்டு எலும்பு நொறுங்கிய சண்டை நடிகர்கள், கேட்பாரின்றி இறந்துபோன சண்டை நடிகர்கள், எலக்ட்ரிசியன்கள், லைட் மேன்கள் போன்ற சாதாரண தொழிலாளிகளின் பட்டியலை நாங்கள் வெளியிடுகிறோம்.

**பணத்துக்குத் தலைவணங்கும்**
**படைப்பாளிகள்!**

சன் டி.வி.யில் பாலு மகேந்திரா கொடுத்த 'உருக்கமான' பேட்டியை நீங்கள் பார்க்கத் தவறியிருக்க மாட்டீர்கள். தான் எடுத்த படங்களில் இரண்டைத் தவிர மற்றவைகளிலெல்லாம் பல சமரசங்கள் செய்து கொண்டதை அவர் நாணயமாக ஒப்புக் கொண்டார். யாருடன் சமரசம் செய்து கொண்டார்? ஃபெப்சியுடனா, அல்லது தயாரிப்பாளருடனா?

காசுக்காகத் தன்னை விற்றுக்கொள்ளும் பெண்ணை 'விபச்சாரி' என்று சமூகம் அழைக்கிறது. அதுவே, ஆணாய் இருந்தால் அவனை என்ன சொல்லி அழைப்பது என்று கேட்டார் பெரியார். 'படைப்பாளி'களே பதில் சொல்லுங்கள்!

**தொப்புளில் ஆம்லெட் போடச்**
**சொன்னவன் தொழிலாளியா?**

தமிழ் ரசிகர்களுக்கு கிராமங்களை அறிமுகப்படுத்தியது மட்டுமல்ல, தமிழ்க் கதாநாயகிகளுக்கு டூ பீஸ் நீச்சல் உடையை அறிமுகம் செய்ததும் பாரதிராஜாதான் என்கிறார்கள். 'டிக் டிக் டிக்' திரைப்படத்தின் கதாநாயகிகளுக்கு நீச்சல் உடை தவிர வேறெதுவும் தைத்துத் தர மாட்டோம் என்று கட்டாயப்படுத்தியவர்கள் யார், தையற் கலைஞர்களா?

கதாநாயகிகளின் தொப்புளில் ஆம்லெட் போடுவது போன்ற கற்பனை செய்ய முடியாத காட்சிகளை உருவாக்கியிருக்கிறார்களே, உங்கள் படைப்பாளி சகோதரர்கள், அத்தகைய காட்சிகளைத் திணித்தவர்கள் யார், சமையற் கலைஞர்களா?

ஹீரோவுக்குத் தகுந்தமாதிரி கதை தயார் செய்து, கதாநாயகிக்கும், பிற நடிகர்களுக்கும் அவர்களுக்கு ஏற்ற மாதிரி கதை சொல்லி, படப்பிடிப்பின் போது ரிலீசாகும் வேறு படங்களைப் பார்த்து அதற்கேற்ப கதையைத் திருத்தி, கடைசியில் விநியோகஸ்தரின் ஆசைக்கேற்ப சில காட்சிகளை சேர்த்து / நீக்கி ஒருவழியாக நீங்கள் தயார் செய்யும் படத்தைப் 'படைப்பு' என்கிறீர்கள்.

**படைப்பாளியா அழிப்பாளியா?**

சன் டிவியில் உங்கள் பேட்டியைப் பார்த்தோம். சத்தமே வராமல் ஏதோ கையைக் காட்டிக் கொண்டிருந்தீர்கள். சரி. ஊமை நியூஸ் போலிருக்கிறது என்று நினைத்தோம். ''விஷுவலாகவே திங்க் பண்ணிப் பழகியவர் பாரதிராஜா'' என்ற


படிப்பகம்

www.padippakam.com

உண்மை அப்புறம்தான் எங்கள் மண்டையில் உறைத்தது.

சிந்திப்பதை வார்த்தைகளில் சொல்வதற்கே இவ்வளவு கஷ்டப்படுகிறீர்களே, அதைப் புரிந்துகொண்டு அதற்குச் செயல்வடிவம் கொடுப்பதென்ன அத்தனை சுலபமா?

'சந்தையில் ஹீரோ அறிமுகம்' என்று ஒரு சீட்டில் உங்கள் இயக்குநர்கள் எழுதிக் கொடுத்தவுடனே டீக் கடை, மளிகைக் கடை, ஜவுளிக் கடை, கசாப்புக் கடை, பழ வண்டி, ஐஸ் வண்டி முதல் வில்லன் விழுந்து உடைப்பதற்குப் பூசணிக்காய், பானை, கட்டை வண்டி, சர்பத் கடை ஈறாக அனைத்தையும் தயார் செய்து வைப்பவர்களும், எதன்மீது எப்படி உருண்டு விழுவது என்று விழுந்து பார்த்து ரெடியாக இருக்கும் சண்டை நடிகர்களும், லைட் மேன்களும் இன்ன பிற தொழிலாளிகளும் உங்கள் படைப்புக்கு எள்ளளவும் சம்பந்தமில்லாதவர்கள்! நீங்கள்தான் படைப்பாளிகள்!

ஒவ்வொரு காட்சி அமைப்பிலும் 'அழிப்பது எப்படி' என்பதை நட்சத்திர ஓட்டல்களில் ரூம் போட்டு டிஸ்கஷன் நடத்தும் இயக்குநர்கள் படைப்பாளிகள் என்று சொன்னால் சிரிக்கத்தான் தோன்றுகிறது. பூவாலே சாலை போட்டு அதன்மீது நடந்து சென்ற புரட்சித் தலைவி, இத்தகைய வக்கிரங்களை எல்லாம் தமிழ் சினிமாவைத் தவிர வேறு எதிலிருந்து கற்றுக் கொண்டிருக்க முடியும்?

**உரிமைக் குரலெல்லாம் உழைப்பாளியை எதிர்த்துத்தான்!**

படைப்பு உரிமைக்காக சங்கம் கட்டிக் குரல் கொடுக்கும் படைப்பாளிகளே! அரசாங்கத்தால் தடைசெய்யப்பட்ட, தணிக்கை செய்யப்பட்ட யோக்கியமான திரைப்படங்கள் பலவற்றில் ஒன்றையாவது ஆதரித்து உங்களில் ஒரு படைப்பாளியாவது குரல் கொடுத்ததுண்டா?

**எச்சரிக்கை தமிழர்கள் வருகிறார்கள்!**

உங்கள் கருங்காலித் தனத்திற்குத் தமிழ் முகமூடி வேறு. முப்பந்தைந்து ஆண்டுகளாக திராவிட இயக்கங்கள் மென்று துப்பிய தமிழை இப்பொழுது நீங்கள் எடுத்துக் கொண்டிருக்கிறீர்கள். படத்தின் பெயர் ஆங்கிலத்தில், கதாநாயகியோ இந்தி, பாட்டு கதம்ப மொழி, பணம் கொடுப்பவன் சேட்டு — ஆனால் உங்கள் பெயரோ, தமிழ்ப் படைப்பாளிகள்!

சின்னக் கவுண்டர், பெரிய கவுண்டர், கவுண்டர் பொண்ணா கொக்கா, தேவர் மகன், பசும்பொன், மண்வாசனை.... என்று படமெடுத்து சாதித் திமிரையும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கெதிராகச் சாதிவெறியை தூண்டிவிட்டவர்களும், 'வானமே எல்லை' படத்தில் இடஒதுக்கீட்டிற்கு எதிராகக் குரலெழுப்பிய பாலசந்தரும், குஞ்சுமோனும், ஆர்.பி. சவுத்ரியும், மார்வாடிகளும், சேட்டுகளும்.... நீங்கள் எல்லோரும் 'தமிழ்' படைப்பாளிகள்!

> **சின்னக் கவுண்டர், பெரிய கவுண்டர், தேவர்மகன், பசும்பொன், மண்வாசனை... என்று படமெடுத்து சாதித்திமிரையும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கெதிராக சாதிவெறியைத் தூண்டி விட்டவர்களும், 'வானமே எல்லை' படத்தில் இடஒதுக்கீட்டிற்கு எதிராகக் குரலெழுப்பிய பாலச்சந்தரும், குஞ்சுமோனும், ஆர்.பி. சவுத்ரியும், மார்வாடிகளும், சேட்டுகளும்... நீங்கள் எல்லோரும் 'தமிழ்' படைப்பாளிகள்!**

சாதி, மதம், இனம் கடந்து வர்க்க ரீதியாக ஒன்றுபட்டிருக்கும் நீங்கள், தொழிலாளிகளின் வர்க்க ஒற்றுமையைக் கண்டு வயிறெரிகிறீர்கள். சினிமா சென்டிமெண்டால் அடிக்கப் பார்க்கிறீர்கள்.

''பத்து வருஷமா எங்கிட்ட வேல பார்த்த பையனே என்ன மோசமா பேசிட்டான்'' என்று கண் கலங்குகிறீர்கள்.

பத்து வருஷமென்ன, முப்பது வருடமாக இந்தத் துறையில் குப்பை கொட்டி வரும் தொழிலாளிகள் இன்னும் தொழிலாளிகளாகத்தான் இருக்கிறார்கள். ''இதுதான் ஸ்டுடியோ'' என்று உங்களை உள்ளே அழைத்துச் சென்று காட்டிய தொழிலாளிகள் இன்னும் சைக்கிளில் தான் வருகிறார்கள். கார், பங்களா, செல்லுலார் ஃபோன் போன்ற வசதிகள் அவர்களுக்கு வாய்க்கப் பெறவில்லை.

வெற்றிப் படமோ, வெள்ளி விழாவோ அவர்களுக்கு நீங்கள் கொடுப்பது நிச்சயிக்கப்பட்ட கூலிதான். மாதத்தில் பாதி நாள் வேலை இல்லாமல் கிடக்கும் தொழிலாளி எப்படி சாப்பிடுவான் என்பதை அப்பொழுது சிந்தித்திருக்கிறீர்களா? இப்போது சிந்திப்பதில் வியப்பில்லை.

போராட்டம் நடக்கும்பொழுது தான் தொழிலாளிகளின் மீது முதலாளிகளுக்குக் கரிசனம் அதிகமாகும். நீங்கள் வள்ளல்களாக இருக்க விரும்புகிறீர்கள்; ஆனால் தொழிலாளிகள் அடிமைகளாக நீடிக்கத் தயாராக இல்லையே - என்ன செய்வது?

**வாலாட்டுகின்றன பத்திரிகைகள்!**

ஆனால் பத்திரிகைகள் உங்களுக்குத்தான் வாலாட்டுகின்றன. மனோரமா திரையரங்கில் தாக்கப்பட்ட தொழிலாளர்களை யாரும் படமெடுக்கவில்லை. மறியல் செய்த உங்களைப் படமெடுக்கிறார்கள். பேட்டி எடுக்கிறார்கள். ''பாத்திரம் கழுவுகிறவனுக்கு இயக்குநர் அடிமையா'' என்று கொதிக்கிறார்கள்.

நட்சத்திர ஓட்டல்களில் தின்றதற்கும் குடித்ததற்கும் வாங்கின 'கவர்'களுக்கும் விசுவாசமாக 'கவரேஜ்' கொடுக்க வேண்டாமா, அதுதான் வாலாட்டுகிறார்கள்.

அரசாங்கமும் உங்கள் பக்கம். படைப்பாளிகள் கூட்டமைப்புக்கு போலீசு காவல், படைப்பாளிகள் வீட்டுக்கு போலீசு காவல், படப்பிடிப்புக்கு போலீசு காவல், காமெராவை எடுத்துச் செல்ல போலீசு காவல்... அடேயப்பா! போலீஸ்காரர்களுக்கு மட்டும் லைட் மேன் வேலை பார்க்கத் தெரிந்திருந்தால் உங்கள் பாடு கொண்டாட்டம்தான்.

**'கம்யூனிஸ்டு'களின் ஆதரவு பெற்ற பாரதிராஜா - தொழிலாளியே!**

வலது, இடது கம்யூனிஸ்டு கட்சிகளும்கூட உங்கள் பக்கம்தான். ''நாங்கள் முதலாளிகளாக இருந்தால் கம்யூனிஸ்டுகள் எங்களை ஆதரிப்பார்களா?'' என்று ஒரு கேள்வியை தினமணிக் கதிர் பேட்டியில் எழுப்பியிருக்கிறீர்கள்.

''எங்கள் சங்கம் வேலை நிறுத்தமே செய்யாது'' என்று அடுத்த வரியிலேயே கொள்கைப் பிரகடனம் செய்து உங்களை ஆதரிக்கும் போலி கம்யூனிஸ்டுகளின் முகத்திரையை நீங்களே கிழித்து விட்டீர்கள்.

**பண்பாட்டைச் சீரழிக்கும் நச்சுக் கிருமிகள்!**

அரசும், போலீசும், பத்திரிகைகளும், கட்சிகளும் உங்கள் பக்கம் என்று இறுமாந்து இருக்கிறீர்கள். இவர்களைப் பற்றிய மூடநம்பிக்கைகளைத் தொழிலாளர்கள் உதிர்த்து வருகிறார்கள் என்பதற்காக நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம்.

மக்கள் உங்கள் பக்கம் என்று எண்ணிக் கொண்டிருக்கிறீர்கள். இல்லை. மனோரமா திரையரங்கில் நீங்கள் அடிபட்டு விட்டது போல பொய்ச் செய்தி பரப்பினீர்களே, அதைக் கேட்டு மக்கள் யாரும் மனம் பதறவில்லை; மாறாக மகிழ்ச்சியடைந்தார்கள்.

அரசியல், சமூகம், பண்பாடு ஆகிய அனைத்துத் துறைகளிலும் தமிழகத்தைச் சீர்குலைத்திருக்கிறீர்கள். படைப்பாளிகள் என்ற முறையில் நீங்கள் படைத்தவை ஏதாவது உண்டென்றால் அவை பண்பாட்டைச் சீரழிக்கும் நச்சுக் கிருமிகள்தான்.


படிப்பகம்

www.padippakam.com

பண்பாட்டை மாசுபடுத்தும் நச்சுக் கிருமிகளுக்கெதிராக நாங்கள் வெளியிலிருந்து போராடுகிறோம். 'உள்ளிருந்தே போராடுங்கள்' என்று தொழிலாளர்களுக்கு அறைகூவல் விடுகிறோம்.

''படைப்பாளிகளின் விசயத்தில் தொழிலாளி தலையிடவே கூடாது'' என்று நீங்கள் கூச்சலிடுகிறீர்கள். ''மேலும் தலையிடுங்கள்'' என்று நாங்கள் கோருகிறோம்.

''ஆபாசக் காட்சிகளுக்குப் பணியாற்ற மாட்டோம்; ஆங்கிலப் பெயர் வைத்த படங்களுக்குப் பணியாற்ற மாட்டோம்; சாதி வெறியைத் தூண்டும் படங்களுக்குப் பணியாற்ற மாட்டோம்'' என்று தொழிலாளர்கள் குரல் கொடுக்க வேண்டுமெனக் கோருகிறோம்.

பேசட்டும். இதுவரை வசனம் தரப் படாதவர்களெல்லாம் பேசட்டும். தொழிலாளர்கள் பேசட்டும். லைட் மேன்களும், ஒட்டுனர்களும், தையல்காரர்களும், சண்டை நடிகர்களும், துணை நடிகர்களும் இன்ன பிறரும் பேசட்டும்.

''எங்கள் படைப்புரிமையில் தொழிலாளர்கள் தலையிடுகிறார்கள்'' என்று நீங்கள் கூவுவீர்கள். தெருவுக்கு வருவீர்கள்.

அப்போது மந்திரி வந்தாலும் வரா விட்டாலும் மக்கள் வருவார்கள்.

'படைப்பு எது, படைப்பாளிகள் யார், படைப்பாளிகளின் உரிமை என்ன என்ற கேள்விகளுக்கான விடை வீதியில் அளிக்கப்படும்.

— 'திரைப்படத் தொழிலாளர் போராட்டத்தை ஆதரிப்போம்' மகஇக வெளியீட்டிலிருந்து.

**கிடைக்குமிடம்:**
**கீழைக்காற்று,**
**10, அவுலியா சாகிபு தெரு,**
**எல்லீசு சாலை, சென்னை - 2.**

# தொழிலாளர்களுக்காக மகஇக பொதுக் கூட்டம்

தொழிலாளர் போராட்டம் எது நடந்தாலும் ஓட்டுச் சீட்டுக் கட்சிகள், அதிலும் குறிப்பாக எதிர்க்கட்சிகள், ஓடோடி வந்து தமது 'தார்மீக' ஆதரவைத் தெரிவித்து விடுவார்கள்; அறிக்கையாவது விடுவார்கள். இத்தகைய ஆதரவுகளால் 5 காசுக்குப் பயன் கிடையாது என்றாலும், இத்தகைய 'வாயுபசார' ஆதரவு கூடக் கிடைக்காத ஒரு போராட்டம் உண்டென்றால் அது சினிமா தொழிலாளர் போராட்டம்.

இந்நிலையில் திரைப்படத் தொழிலாளர் போராட்டத்தை ஆதரித்து மக்கள் கலை இலக்கியக் கழகமும், புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணியும் இணைந்து, சென்னை - கோடம்பாக்கம் அம்பேத்கர் சிலை அருகில் ஜூலை - 25 அன்று ஒரு பொதுக்கூட்டம் நடத்தினோம். ஆயிரக்கணக்கில் தொழிலாளர்கள் கூடிவிட்டதனால் கோடம்பாக்கம் - கே.கே. நகர் சாலையையே தடுப்பு வைத்து மூட வேண்டிய நிலைக்கு காவல்துறை ஆளானது.



முதலாளிகள் அணிக்குத் தலைமை தாங்கி, கருங்காலி சங்கம் அமைக்க வேலை செய்யும் பாரதிராஜாவை அம்பலப்படுத்திப் பேசினார் ஆண்டிப்பட்டி செல்வராசு (வி.வி.மு). தென் மாவட்டங்களில் சாதித்திமிரைத் தூண்டிவிட்டதில் 'படைப்பாளி' பாரதிராஜாவின் பங்கைத் தோலுரித்தார். 'யதார்த்த சினிமா' எடுப்பதற்காக தங்கள் ஊர்க் கிழவியை கிழக்குச் சீமையிலே படத்தில் நடிக்க வைத்துவிட்டு, சொன்னபடி காசு கொடுக்காமல் ஏமாற்றிய கதையையும், அந்தக் கிழவி பாரதிராஜாவைத் தேடியலையும் சேதியையும் மதுரைத் தமிழில் விவரித்தார். பேச்சு முழுவதும் தொழிலாளர்கள் கைதட்டி ஆர்ப்பரித்தனர்.

மலையாள இயக்குநர் அப்பச்சன் வீட்டில் 2 கோடி ரூபாய் கறுப்புப் பணம் கைப்பற்றப்பட்டதாக அன்றைய நாளிதழ்களில் வந்த செய்தியை மேற்கோள் காட்டித் தன் பேச்சைத் துவக்கிய தோழர். காளியப்பன், (மாநில இணைச் செயலர், ம.க.இ.க) திரையுலகின் நெருக்கடிக்கு உண்மையான காரணம் யார் என அம்பலப்படுத்தினார். படைப்பாளிகள் என்று தங்களை அழைத்துக் கொள்வோர் அதற்குத் தகுதியானவர்கள்தானா என்ற கேள்வியை எழுப்பினார்.

தலைமையுரையாற்றிய தோழர். தங்கராசு (பு.ஜ.தொ.மு.), படைப்பாளிகள் கூட்டமைப்பு வெளியிட்டுள்ள சங்க விதிமுறைகளைச் சுட்டிக் காட்டி, கருங்காலிகள் சங்கம் என்பதற்கு அவையே நிருபணமாக இருப்பதை எடுத்துக் காட்டினார்.

இறுதியாக ம.க.இ.க. கலைக்குழுவின் கலைநிகழ்ச்சி நடைபெற்றது. தொழிலாளியின் நலனுக்கு எதிராகப் போகிறவன் படைப்பாளியே அல்ல என்பதையும், இந்தப் 'படைப்பாளிகளின்' சினிமாக்கள் தமிழ்ப் பண்பாட்டைச் சீரழிப்பதையும் கலைநிகழ்ச்சி அம்பலப்படுத்தியது. 'படைப்பாளி'களைக் கேலி செய்து எழுதப்பட்ட பாடல் பெரும் வரவேற்பைப் பெற்றது.

வேலையும், வருவாயும் இல்லாத நிலையிலும் கூட்டச் செலவுக்காகப் பெருமளவில் நிதியளித்தார்கள் தொழிலாளர்கள். சினிமாத் தொழிலாளர் போராட்டத்தின் நியாயத்தை விளக்கி ம.க.இ.க. சார்பில் கொண்டு வரப்பட்ட ''திரைப்படத் தொழிலாளர் போராட்டத்தை ஆதரிப்போம்'' என்ற சிறு வெளியீடு நூற்றுக்கணக்கில் விற்பனையானது.

ஜூலை - 25, பொதுக்கூட்டத்தின் விளைவு என்ன? அதுவரை பெப்சியின் போராட்டத்தை எதிர்த்து வந்த மார்க்சிஸ்டு கட்சியினர், ஜூலை - 27-ம் தேதி ஃபெப்சி நடத்திய உண்ணாவிரதத்தில் வாழ்த்துரை வழங்க ஆஜராகி விட்டனர்!

www.padippakam.com

# வாணம் விட்டவரை விடுதலை செய்! யாகம் வளர்த்தவனை கைது செய்!

தஞ்சை பெரிய கோவில் யாகசாலை தீ விபத்தில் 60க்கும் மேற் பட்டோர் பலியாகிய சுவடுகூட மறைய வில்லை. இரண்டு நாட் கள் கழித்து நடந்த குட முழுக்கு விழாவில் லட் சம் பேர் கலந்து கொண் டனர்.

வாண வேடிக்கை விட்ட அப்பாவிகளை கைது செய்த போலீசு உண்மையில் சங்கராச் சாரி, யாகம் வளர்த்த சிவாச்சாரிகள் மற்றும் குடமுழுக்கு விழாக் கமிட்டியைத்தான் சிறையிலடைத்து விசா ரித்திருக்க வேண்டும்.

கலசங்களுக்கு குடமுழுக்கு, பஞ் சமூர்த்திகள் திருவுலா, குருக்களின் வேத கோஷம், பக்தர்களின் பரவசம், மருத்துவமனையில் மட்டும் அவலக்கு ரல். இறந்தவர்களும் பக்தர்கள்தான் என்பதைக்கூட மறந்துபோன மதநம் பிக்கை மனித குலத்திற்கு அளித்திருக் கும் நாகரிகம் இதுதான்.

தீ விபத்திற்குக் காரணம் என்ன? திட்டமிடாத நிர்வாகம், போலீசின் மெத்தனம், நீரில்லாத தீயணைப்பு வண்டிகள், ஆகமவிதி தவறிய மதச் சடங்குகள்... அடுக்குகிறார்கள் பக்தர் கள்.

இறை அருள் வேண்டி அணிவ குக்கும் பக்தர் கூட்டம் பலியாவதற்கு மனிதர்கள் எப்படிக் காரணமாக முடி யும்?

நாள், நட்சத்திரம் பார்த்து குடமு முக்கு விழாவிற்கான கால அட்ட வணை முதல் ஏனைய சடங்குகளை யும் தீர்மானித்தது காஞ்சி சங்கராச் சாரி. 60 பேரை பரலோகம் அனுப்பிய மோசமான நாளைத் தெரிவு செய்த சங் கராச்சாரி குற்றவாளி இல்லையா? ஜாதகம் பார்த்து செய்த திருமணத்தில் கணவன் திடீரென்று இறந்தால், என் னடா பொருத்தம் `பார்த்தாய் என்று தெருக்கோடி ஜோசியனை உதைக்கி றோமே, அந்த நீதி சங்கராச்சாரிக்குப் பொருந்தாதா?

டெல்லி உபஹார் திரை யரங்கில் ஏற்பட்ட தீ விபத் தில் 57 பேர் இறந்து போனார் கள். உரிமையாளரைக் கைது செய்து விசாரிக்கிறது போலீசு. விபத்தை ஆய்வு செய்யும் கமிட்டியினர் திரை யரங்கில் தீ தடுப்பு சாதனங் கள் இருந்தனவா, அவசர வாயில், அவசர விளக்கு, பெரிய கட்டிடங்களுக்கிடை யான இடைவெளி, தீய ணைப்புத் துறையிடமிருந்து சான்றிதழ் பெற்றிருப்பது, கட் டிடமே விதிகளின்படி கட்டப் பட்டிருக்கிறதா போன்றவை யெல்லாம் கணக்கிலெடுத்து எதிர்காலத்தில் தீ விபத்து ஏற்படாமல் இருக்க முயற்சி செய்கிறார்கள்.

தஞ்சை யாக சாலையில் தீ பற்றிய தும் 3 மணி நேரம் போராடி தீயை அணைத்து பக்தர்கள் பலரைக் காப் பாற்றிய தீயணைப்புத் துறையை மனம் போன போக்கில் குற்றம் சாட்டும் பக் தர்களைக் கேட்கிறோம்: யாக சாலை அமைத்த விதம் சரிதான் என்று தீய ணைப்புத் துறையிடம் சான்றிதழ் பெற் றீர்களா? டெல்லி தீ விபத்திற்கு திரைய ரங்கம் குறித்த கட்டுமான விதிகளை ஆய்வு செய்யும்போது, தஞ்சை விபத் திற்கு யாகசாலை அமைக்கப்பட்டது குறித்து ஆராயக்கூடாதா? கோவி லுக்கு ஒரு நீதி, தியேட்டருக்கு ஒரு நீதியா?


பல லட்சம் செலவில், எரிவதற்கு தோதான அலங்காரங்களுடன் அரண் மனை வடிவில் யாகசாலையை உரு வாக்கியவர் சினிமாக்காரர் 'தோட்டா தரணி. கொளுத்தும் வெயிலில் சருகா கிப் போன பந்தல் ஓலைகளின் கீழ் நெருக்கமாக 122 யாக குண்டங்கள். அதில் டன் கணக்கில் கொட்டப்பட்ட நெய்யின் மூலம் பற்றியெரியும் யாகத் தீ. சிறு பொறி பட்டாலும் பந்தல் பஸ்ப மாகிவிடும் என்பது 5 ம் வகுப்பு மாண வனுக்கும் தெரிந்த உண்மை, ஆச்சாரி யர்களுக்கு தெரியாமல் போனது ஏன்? மடையர்கள் என்பதினாலா?

குடமுழுக்கு விழாவின் ஏற்பாடுக ளில் கடுகளவும் தொடர்பில்லாத அர சுத் துறைகளைக் குற்றம் சாட்டி நுணுகி ஆராயும் மதவாதிகள் தங்களையும் விசாரணைக்குட்படுத்துவதை மூர்க்க மாக மறுக்கிறார்கள். காரணம் அவை ஆன்மீகம் தொடர்பானதாம்.

இதில் பழம் பெருமை வேறு. சோமசுந்தரக் கடவுள் தமிழுக்கு சங்கப் பலகை தந்தார், தமிழ் ஏடு வைகையை எதிர்த்துச் சென்றது, சம்பந்தர் வேதை யில் கதவைத் திறந்தார், அப்பர் கல் லோடு மிதந்தார், நரி பரியாயிற்று, எலும்பு பெண்ணாயிற்று - ரீல் விடும் சைவப் பதர்களுக்கு கேவலம் ஒரு பந் தல் தீயை அணைக்க வக்கில்லாமல் போனது ஏன்?

தீயைத்தான் அணைக்கவில்லை. சிக்கிய பக்தர்களையாவது காப்பாற்றி னார்களா? யாக குண்டங்களைச் சுற்றி 3 நாட்கள் வேதகோஷம் முழக்கிய 250 சிவாச்சாரியர்களில் ஒருவர்கூட தீவி பத்தில் சாகவில்லை. தீ பற்றியதுமே புனிதக் கலசங்களும், புனிதப் பார்ப் பன குருக்களும் பாதுகாப்புடன் அழைத்துச் செல்லப்பட்டார்கள்.

வேடிக்கை பார்த்த மக்கள் யாகத் தீயில் விழுந்தபோது தங்களை மட்டும் காப்பாற்றிக் கொண்ட இந்த சுயநல பிண்டங்கள் ஆத்ம சுத்தியோடு உச்ச ரித்த மந்திரம்தான் என்ன? லுங்கி கட் டிய சாதாரண மனிதர்கள் எரிந்து கொண்டிருக்கும் பக் தர்களைக் காப்பாற்றிய போது, வெள்ளை பஞ்சகச் சம் உடுத்திய பதர்கள் தப்பி நின்று வேடிக்கை பார்த்தன.



அடுத்து பக்தர்கள் வீசும் அஸ்திரம் ஆகம விதி. தெய்வ குற்றம் இருப்பதாக மதுரை ஆதீனமும், ஆயிர மாண்டு பழமை வாய்ந்த கோவிலின் குடமுழுக்கு விழாவில் ஆகம விதிகள் முறையாகப் பின்பற்றாத தால் விபத்து ஏற்பட்டதாக சட்டசபை த.மா.கா. கட்சித் தலைவர் பாலகிருஷ்ணனும் கூறுகிறார்கள்.



படிப்பகம்

www.padippakam.com

யாரும் புகுந்து ஆராய முடியாத வருணாசிரம விதிகளின் கீழ் வரும் ஆகம விதியை அவர்கள் வாதப்ப டியே ஆராய்வோம். அக்னி பக வானை ஒழிப்பதை நோக்கமாகக் கொண்ட தீயணைப்பு வண்டிகள் யாக சாலை அருகே நிறுத்தப்பட்டது, சினி மாக்காரர் பந்தல் செட் போட்டது, பிரம் மாண்ட மின்னேற்றிகள், கருவறையில் ஒலி - ஒளி சாதனங்கள், இதெல்லாம் ஆகம விதிப்படி சரியா?

உண்மையில் பள்ளர் - பறையர், சூத்திர இழிசாதி மக்களெல்லாம் கோவிலுக்கு உள்ளே நுழைவதே ஆகம விதிப்படி தவறு. அதிலும் குடமு ழுக்கு விழாவில் கலந்து கொண்டது கொடிய குற்றமாகும்.

தீண்டாமையை அமல்படுத்த தவ றியதால் விபத்து ஏற்பட்டதாக ஆகம விதியின் பெயரால்கூறும் பார்ப்பன இந்து மதவெறியர்களை தீண்டாமை வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின்கீழ் ஏன் கைது செய்யக்கூடாது?

யாகசாலை கொலை வழக்கில் நாம் குற்றம் சாட்டும் அடுத்த நபர் மராத்திய அரச பரம்பரை இளவரசர் ராஜா போன்ஸ்லே. விபத்து ஏற்பட்ட தும் (துளியூண்டு காயம்கூட படாமல்) அதிர்ச்சியுற்று சிகிச்சை பெறும் இவர் தான் பெரிய கோவில் உட்பட வட்டா ரத்தின் 88 கோவில்களுக்கும் பரம் பரை அறங்காவலர். ஜவுளி ஏற்றுமதி, பல்லாயிரம் ஏக்கர் நிலங்களுக்கு உரி மையாளர், ஆண்டு வருமானம் 50 லட் சம், வசிக்கும் அரண்மனையின் ஒரு பகுதியை 5 நட்சத்திர விடுதியாக உரு வாக்குவது உட்பட உண்மையான இரா சாவாக வாழ்ந்து வருகிறார்.

இவர் தலைமையிலான விழாக் குழுவினர் குடமுழுக்கு பெயரால் 1 கோடிக்கும் மேல் வசூல் செய்தனர். கமிட்டியில் இடம் பெற இயலாததால் வசூலில் பங்கு பறிபோன வேறு சில பிரபலங்கள்தான் விபத்திற்கு காரணம் என பங்கு கிடைத்த சில பிரபலங்கள் கூறுகிறார்களாம்.

ஊழல் வழக்கோடு, விழாவிற்கு அயராமல் 'உழைத்த' ராசா தலைமை யிலான கமிட்டியினர்தான் 60 பக்தர் கள் கொல்லப்பட்டதற்கும் பதில் சொல்ல வேண்டும்.

ஆனால் இவர்கள் செய்த குற்றத் திற்கு அரசு பதில் சொல்கிறது, பணமும் கொடுக்கிறது. இறந்தவர்களுக்கு 1 லட் சம். காயமடைந்தவர்களுக்கு 50 ஆயி ரம். குடமுழுக்கு விழாக் குழுவின ருக்கு 5 லட்சம். மொத்தத்தில் ஒரு கோடி. அள்ளிக் கொடுக்க இது யார்

**டெல்லி தீ விபத்திற்கு திரை யரங்கம் குறித்த கட்டுமான விதிகளை ஆய்வு செய்யும் போது, தஞ்சை விபத்திற்கு யாகசாலை அமைக்கப் பட்டது குறித்து ஆராயக் கூடாதா? கோவிலுக்கு ஒரு நீதி, தியேட்டருக்கு ஒரு நீதியா?**

வீட்டுச் சொத்து மு.க. அவர்களே?

சாதிக் கலவரங்கள் நடக்கும் போது உடன் செல்லாத கருணாநிதி தீ விபத்தின் மறுநாளே தம்பதி சகிதமாய் சோகத்தோடு போஸ் கொடுக்கிறார். நட்ட ஈடு தருகிறார். இருந்தும் இந்து முன்னணிப் பார்ப்பனர்களிடம் நல்ல பெயர் கிடைக்கவில்லை என்பது வேறு விசயம்.

நாள் குறித்த சங்கராச்சாரி, யாகம் வளர்த்த பார்ப்பனர்கள், அறங்காவலர் ராஜா தலைமையிலான விழாக் குழுவி னர் இவர்கள்தான் இறந்துபோன அப் பாவி பக்தர்களுக்கு நட்ட ஈடு கொடுக்க வேண்டியவர்கள். இவர்களி டம் வசூல் செய்வதற்குப் பதில் அரசு மக்கள் பணத்தை அள்ளி வீசுவது எந்த விதத்தில் சரி?

சிங்கள இராணுவம் சுட்டுக் கொல்லும் தமிழக மீனவர்களுக்கு வெறும் 25 ஆயிரம்; நீரின்றி பயிரோடு தானும் சேர்ந்து வாடும் விவசாயிக்கு கடன் இல்லை. ஆனால் சிவ - தரகர்கள் நடத்திய கொலைக்கு 1 லட்சம். அப்பு றம் என்ன மதச்சார்பின்மை வெங்கா யம்.

இறுதியாக குற்றவாளிகளை மொத்தமாய்க் காப்பதற்கு களத்திற்கு வருகிறார் 'இந்துக்களின் தளபதி' இராம. கோபாலன்.

***நாள் குறித்த சங்கராச்சாரி, யாகம் வளர்த்த பார்ப்பனர்கள், அறங்காவலர் ராஜா தலைமை யிலான விழாக் குழுவினர் இவர்கள்தான் இறந்து போன பக்தர்களுக்கு நட்ட ஈடு கொடுக்க வேண்டியவர்கள். இவர்களிடம் வசூலிப்பதற்குப் பதில் அரசு, மக்கள் பணத்தை அள்ளி வீசுவது எந்த விதத்தில் சரி.***

''விபத்து தற்செயலானதல்ல, நக் சலைட்டுகளும், ம.க.இ.க.வைச் சேர்ந் தவர்களும் திட்டமிட்டு நடத்தியது, வாண வேடிக்கையை விபத்திற்கு கார ணமாய் சொல்லும் கருணாநிதியின் போக்கு கண்டனத்திற்குரியது, தெய்வ பக்தியுள்ள நீதிபதியை வைத்து விசா ரணை நடத்தினால் உண்மைகள் வெளி வரும்,'' என்கிறார் இராம. கோபாலன்.

ஏற்கனவே வெளிவந்த உண்மை என்ன?, ''அயோத்தியில் ராமபிரான் பிறந்தார் என்பதை, கோடானுகோடி இந்துக்களின் நம்பிக்கையை எந்த நீதி பதியும், நீதிமன்றமும் பரிசீலித்து தீர்ப் புக் கூற முடியாது,'' என்று பாபர் மசூதி பிரச்சனையின்போது சங்க பரிவாரங் கள் முழங்கியதை மறந்து விட்டாரா இந்து தளபதி.

பாசிச ஜெயாவும், உடன்பிறவா சசிகலாவும் குளிப்பதற்காக, கும்பகோ ணம் மகாமகத்தில் போலீஸ் நடத்திய தடியடியால் நூற்றுக்கணக்கானோர் நெரிசலில் சிக்கி இறந்தார்கள். ஜெயா நடத்திய இந்தக் கொலையை தமிழ கமே காறித் துப்பியபோது, மேல் - கீழ் வாய்களைப் பொத்திக் கொண்டு இது வரை ஜெயாவைப் போன்ற ஒரு இந்து முதல்வரை தமிழகம் கண்டதில்லை என்று சான்றிதழ் கொடுத்த இராம. கோபாலனை நாங்கள் மட்டுமல்ல தமி ழக மக்களும் மறக்கவில்லை.

மதத்தின், மூட நம்பிக்கையின் மகிமைகளை மதவாதிகள் பிரச்சாரம் செய்கிறார்கள். அதனால் ஏற்படும் துய ரங்கள், விபத்துக்களில் இருந்து மதத் தின் புனிதம் காக்க மதவெறியர்கள் முயலுகிறார்கள்.

சும்மாவா சொன்னார்கள் போபா லில். யாக குண்டங்களில் இடப்படும் புனித சமிதிகளினால் வரும் புகை, வாயு மண்டலத்தில் நச்சுக் கிருமிகளை அழிக்குமாம். போபால் விச வாயு விபத்தின்போது யாகம் நடந்த வீட்டில் யாரும் சாகவில்லை என அன்று பார்ப் பனர்கள் விளக்கினார்கள்.

இன்று தஞ்சை யாகத் தீயில் நெருப்பினால் இறந்தவர்களைவிட புகையில் வெளியான கார்பன் மோனாக்சைடு வாயுவினால் இறந்த வர்கள் அதிகம் என்கின்றனர் மருத்து வர்கள். செத்தவர்கள்தான் காற்றுமண் டலத்தில் அகற்றப்பட வேண்டிய நச்சுக் கிருமிகளா? இந்தக் கொடுமைகளுக் கும் மடத்தனத்திற்கும் விடிவு எப் போது?

மதவாதிகளும், மத வெறியர்க ளும் இணைந்து பக்தர்களைக் கொன்ற சமீபகால பட்டியலைப் பாருங்கள்.

www.padippakam.com

மெக்காவின் பாலைவனத் தீயில் 200 பேர்; அமர்நாத்தின் பனிப்புயலில் 300 பேர்; ஜெயாவின் மகாமகத்தில் 60 பேர்; ஒரிஸ்ஸாவின் ஆன்மீக மாநாட்டுத் தீயில் 200 பேர்; தஞ்சை யாகசாலைத் தீயில் 60 பேர்.

செத்துப் போனவர்களை கிள்ளுக் கீரைகளாக, சொர்க்கம் சென்ற புண்ணியவான்களாக மதங்கள் நினைக்கலாம். நாம் நினைக்க முடியாது; மறக்கவும் முடியாது.

'பொது ஒழுங்கு, நலவாழ்வு மற்றும் ஒழுக்க நெறி ஆகியவற்றின் அடிப்படையில் மதச் சுதந்திரத்தை முறைப்படுத்தும்' உரிமை அரசுக்கு இருப்பதாக சட்டப் பிரிவு - 25 (1) கூறுகிறது. இந்தப் பிரிவைப் பயன்படுத்தி பல்லாயிரம் பேர் கூடும் மதவிழாக்களை கறாரான விதிகளுக்குட்படுத்தி முறைப்படுத்தலாம். மீறினால் தடை செய்யலாம். ஆனால் மதத்தின் ஒழுக்க நெறியே அரசின் ஒழுக்க நெறியாக இருப்பதால் இந்த சட்டப்பிரிவை எந்த அரசாங்கமும் ஏறெடுத்தும் பார்ப்பதில்லை.

தஞ்சை விபத்து குறித்து விசாரணை செய்த உயர்நிலைக் குழு தனது அறிக்கையை சமீபத்தில் அரசிடம் அளித்துள்ளது. எளிதில் தீ பற்றக் கூடிய பந்தல் அமைப்பு, யாகத்தின் வெப்பம் - புகை வெளியேற வழியின்மை காரணமாக வாண வேடிக்கையின் போது விழுந்த தீப்பொறியினால் எளிதில் தீ பரவியதாக அறிக்கை கூறுகிறது.

மேலும் '1997 பந்தல்கள் நெறிமுறைச் சட்டம்' ஒன்றை ஏற்படுத்தி அதில் பந்தல் அமைப்பதற்கான விதிகள் ஏற்படுத்துதல்; மீறுகின்ற அதிகாரிகள், விழாக் குழுவினர் மீது நடவடிக்கை, தண்டனை மற்றும் இழப்பீடு பெறுதல்; பந்தல் அமைக்க உரிமம் வழங்கும் அலுவலராக மாவட்ட ஆட்சியரை நியமித்தல் போன்ற ஆலோசனைகளையும் அறிக்கை கூறுகிறது.

அரசு இதைச் சட்டமாக்குவதோடு, நடைமுறையில் மதவாதிகளுக்கு அஞ்சாமல் பயன்படுத்தவும் வேண்டும். இல்லையென்றால், மக்களைக் கொல்லும் மத நிகழ்ச்சிகளை நாங்கள் நடத்த விட மாட்டோம்.

வேதம், பைபிள், குர் ஆன் மூன்றும் உலகம் அழிவதை ஒற்றுமையாகக் குறிப்பிடுகின்றன. மதவெறியர்களின் உலகத்தை ஒழிக்கப் போவது வேறு யாருமல்ல, நாங்கள்தான். எங்களுக்கு கம்யூனிஸ்டுகள் என்று பெயர்.

■ இளநம்பி

## கேட்டீரா சேதி!

## ரஜினி உள்றார் நீதிபதி விளக்குறார்

'டேய் அநாதைப் பயலே' என்று ரஜினியை அருணாச்சலம் திரைப்படத்தில் வடிவுக்கரசி அழைக்கிறார். இதனால் ரசிகர்கள் இவரை தொலைபேசியில் மிரட்டுகிறார்களாம். வெளியூர் செல்லுமிடங்களில் மன்னிப்பு கேட்கச் சொல்லி வற்புறுத்துகிறார்களாம். தற்போது 'இமேஜ்' சரிந்து 5 படங்கள் ரத்தாகி விட்டதாக நடிகை குமுறுகிறார்.

தெரிந்தே திமிர்காட்டும் இந்த ரசிகர்களை உதைத்துத் திருத்த முடியும். ஆனால் ரஜினி என்ற 'காப்பியக் கழிசடை நாயகனை' ஊதிப் பெருக்கி கொள்கைக் குன்றாக மாற்றிய பத்திரிகைகள், தொலைக்காட்சி, தேசிய - திராவிடத் தலைவர்கள் இன்னபிற பால்கனி வர்க்கத்தை என்ன செய்வது?

சென்ற தேர்தலின் தொலைக்காட்சிப் பிரச்சாரத்தின்போது ரஜினி, 'அ.தி.மு.க.வினர் பணம் கொடுத்தால் வாங்கிக் கொண்டு அவர்களுக்கு வாக்களிக்காதீர்கள்' என்றார். எனவே இது லஞ்சம் வாங்குவதைத் தூண்டுவதாக ஒருவர் வழக்குப் போட்டார். ஒரு வரியில் வழக்கைத் தள்ளுபடி செய்வதற்குப் பதிலாக உயர்நீதிமன்ற நீதிபதி - பக்கம் பக்கமாக 'ரஜினி அப்படிப் பேசவில்லை, இன்ன பொருளில் பேசவில்லை, நல்லெண்ணத்தில் பேசினார் என்றெல்லாம் ஊழல் எதிர்ப்பு போராளியாக் சித்தரித்து விட்டார்.

உளறும் ரஜினிக்கு விளக்கும் நீதிபதி இருக்கும்போது பெஞ்சு டிக்கெட் ரசிகர்களைக் குற்றம் சொல்லி என்ன பயன்?

## ஜப்பானைப் பார்!

கழிசடைக் கலாச்சாரத்தில் ஜப்பான் செய்துவரும் சாதனைகள் அதனுடைய பொருளாதார சாதனைகளை சாதாரணமாக்கிவிட்டது என்றால் மிகையில்லை.

பள்ளி மாணவிகளின் பழைய உள்ளாடைகள், அவர்களது புகைப்படத்துடன் 50 டாலருக்கு விற்கப்படுகிறது. இதை வாங்குவது என்பது வளர்ந்து வரும் புதிய நாகரீகம். 93 ல் மட்டும் 10,000 மாணவிகள் உள்ளாடைகளை விற்றார்கள்.

டோக்கியோ நகரின் 155 பள்ளிகளைச் சேர்ந்த மாணவிகள் விபச்சாரத் தகவல் பரிமாற்ற கிளப்புகளில் உறுப்பினர்கள். நகரில் இப்படி 364 கிளப்புகள் இயங்குகின்றன.

'விபச்சாரத்தின் மூலம் தினசரி 1000 டாலர் சம்பாதிக்கிறேன். இது என் தந்தையின் மாத வருமானத்தைவிட அதிகம். என் தொழில் பெற்றோருக்கு தெரியாமல் நடக்கிறது' என்கிறார் 22 வயது டாசயசிபானா என்ற பெண்.

'இந்நிலை நீடித்தால் ஜப்பான் விரைவில் ஆன்மீகப் பாலைவனமாகி விடும்' என்கிறார் இச்சிரோ அசாலா என்ற எதிர்க்கட்சித் தலைவர்.

'சோம்பேறி இந்தியர்களுக்கு' உழைப்பால் முன்னேறிய ஜப்பானைச் சுட்டிக்காட்டும் ரோட்டரி கிளப் இந்தியர்கள் இனி என்ன சொல்வார்கள்?

## கையெழுத்து மோசடி

மகுடீஸ்வரன். தமிழ்நாட்டில் பிரபலமாகப் போகும் 'கையெழுத்தியல்' நிபுணர். உங்கள் கையெழுத்தை வைத்தே தலையெழுத்தைக் கண்டு சொல்லும் திறன் பெற்றவர்.

ஒருவரின் கையெழுத்து என்ன அளவு, வரிகள் - எழுத்துக்களுக் கிடையிலான இடைவெளி, எத்தனை கோணத்தில் சரிந்திருக்கிறது போன்ற நுணுக்கமான விபரங்களை ஆராய்ந்து அவரது குணநலன், திறமை, உடல்கூறு, முக்கியமான நோய்கள் இன்ன பிறவற்றையெல்லாம் கச்சிதமாகச் சொல்லுவார்.

ஏற்கனவே அமலில் உள்ள சோதிடம், ஜாதகம், எண் சோதிடம், கணிப்பொறி சோதிடம் வரிசையில் நவீன வரவு கையெழுத்தியல். மேலை நாடுகளில் பிரபலமான இத்துறை ஆசிய நாடுகளில் இன்னும் முன்னேறவில்லையாம்.

என்றாலும் பண வரவு (பல ஆயிரம் என்ற அளவில்) இவருக்கு மோசமில்லை. தன் மனைவியையே அவரது கையெழுத்தை வைத்துத்தான் தேர்ந்தெடுத்தார் என்றால் பார்த்துக்கொள்ளுங்களேன்.

நம்பிக்கையில் உள்ள மூடம் புதிய வடிவில் வருவதில் யாருக்கு நட்டம்? தனது பெண் திருமணத்திற்கு 108 வழிகளில் பொருத்தம் பார்க்க ஆயிரக் கணக்கில் செலவழித்து லோல்படும் நடுத்தர வர்க்கம் இனி கையெழுத்துதியல் பொருத்தமும் பார்க்க வேண்டும்.

■


படிப்பகம்

www.padippakam.com

# துரோகத்தின் விழா
# தியாகத்தின் கனவு

"இந்த ஸ்தாபனம் (காங்கிரஸ்) முதன்முதலாக ஒரு ஆங்கிலேயரால்தான் ஏற்படுத்தப்பட்டதென உங்களிடம் கூறுகையில் நான் அளவிலா ஆனந்தமடைகிறேன். காங்கிரஸ் மகாசபைக்கு ஆலன் ஆக்டேவியன் ஹீயும் என்ற ஆங்கிலேயர் தகப்பனாக விளங்கினார்.''

— லண்டன்: இரண்டாவது வட்ட மேசை மாநாட்டில் காந்தியின் உரையிலிருந்து.

''என் சொந்த தேசத்தை விடுதலை செய்ய சாகத் தயார். அது பற்றிக் கவலையில்லை. நான் இறந்தாலும் எனக்குப் பதிலாக என் தேச மக்கள் பல்லாயிரக் கணக்கில் வந்து கொண்டே இருப்பார்கள். அசிங்கம் பிடித்த பிரிட்டீஷ் நாய்களான உங்களை அடித்து விரட்டுவார்கள், தேசத்தை மீட்பார்கள.''

— தூக்கிலிடப்பட்ட பஞ்சாப் இளைஞர் உத்தம்சிங், லண்டன் நீதிமன்றத்தில் ஆற்றிய உரையிலிருந்து.

யார் இந்த உத்தம்சிங்? முதல் வகுப்பு முதல் ஆய்வுப்படிப்பு வரை காந்தி, நேரு... வகையறாக்களை சுதந்திரப் போராட்ட போராளிகளாக பார்த்துப் பழகிய இந்தியர்களுக்கு தெரியாத பெயர்.

இன்று குண்டுகள் துளைத்த சுவடேதும் இல்லாமல் பூங்காவனமாகப் பூத்துக் குலுங்கும் ஜாலியன் வாலாபாக் ஏப்ரல் 13, 1919-இல் எப்படி இருந்தது? இன்றைய தடா சட்டத்தைப் போன்று கேள்வி கேட்பாரின்றி அடக்கு முறைகளைக் கட்டவிழ்த்து விட்ட ரௌலட் சட்டத்தைக் கண்டித்து 20,000-த்திற்கும் அதிகமாக மக்கள் கூடியிருக்கின்றனர்.

90 போலீசுகளுடன் மைதானத்தில் நுழைந்த ஜெனரல் டயர் சுடுகிறான். ரவை தீரும்வரை 10 நிமிடம்; 1650 சுற்றுக்கள். ஆயிரம் பேர் இறக்க, ஏனையோர் காயமுற மனிதக் கசாப்புக் கடையாக மாறியது மைதானம்.

படுகொலைக்குச் சில நாட்கள் முன்னர் நடந்த அமிர்தசரஸ் காங்கிரஸ் மாநாட்டில் பஞ்சாப் மக்களின் வன்முறைப் போராட்டத்தைக் கண்டிக்காவிட்டால் மாநாட்டை விட்டு வெளியேறுவதாகக் கூறிய காந்தி ஜாலியன் வாலாபாக் படுகொலையை அரசியல் முதலீடாக மாற்றிக் கொண்டார்.

அதே சமயம் டயர், ஆங்கில அரசின் உத்தரவுக்குக் கட்டுப்பட்ட அதிகாரி என்பதால் பழியை அவன் மீது சுமத்த விரும்பவில்லை எனவும் டயர் தண்டிக்கப்படக்கூடாது என்று வக்காலத்தும் வாங்கினார் இந்த தேசப்பிதா.

வெள்ளையனின் பயங்கரவாதத்தை அகிம்சாவாதி காந்தி பச்சையாக ஆதரித்தது துரோகம் என்றால், வெள்ளையனை வெஞ்சினம் கொண்டு அழிக்கக் கிளம்பிய வீரப் பரம்பரையும் அன்று இருந்தது. பகத்சிங், ஆசாத் வழியில் புரட்சியின் மூலம் நாட்டை விடுவிக்க நினைத்த நூற்றுக்கணக்கான போராளிகள்தான் வரலாற்றில் இருட்டடிப்பு செய்யப்பட்டவர்கள். அவர்களில் ஒருவர் உத்தம்சிங்.

படுகொலை நடத்திய டயர் பரிசு, பாராட்டு, பதவி உயர்வு பெற்று லண்டன் திரும்பி, பின்னர் வாத நோயால் இறந்தான். இவனது மேலதிகாரியும், வெறியாட்டம் போட்ட பஞ்சாபின் கவர்னருமான மைக்கேல் டயரை இங்கிலாந்தில் 1940 மார்ச் 13-ல் சுட்டுக் கொன்றார் உத்தம்சிங்.

சில நாட்களுக்குப் பின்னர் உத்தம் சிங் தூக்கிலேற்றப்பட்டார். பஞ்சாப் படுகொலைக்கு வெஞ்சினம் தீர்த்த அந்த சிங்கத்தை பஞ்சாப் மக்கள் என்றும் மறக்க மாட்டார்கள்.


உத்தம் சிங்

இதே மார்ச் மாதம், 1931-ம் வருடம், 23-ம் தேதி பகத்சிங், ராஜகுரு, சுகதேவ் தூக்கிலிடப்பட்டனர். இந்தப் போராளிகளை விடுதலை செய் என நாடே குரல் கொடுத்த போது 'இது பற்றி இர்வினிடம் (அன்றைய ஆங்கிலேய ஆளுநர்) பேச முடியாது' என்றார் காந்தி. மட்டுமல்ல ''அவர்களை தூக்கிலிடுவது என்று முடிவு செய்தால் கராச்சி காங்கிரஸ் மாநாட்டுக்கு முன்னரே தூக்கிலிடுவது தான் நல்லது'' என்று இர்வினிடம் காந்தி கூறியதை காங்கிரஸ் வரலாற்றை எழுதிய பட்டாபி சீதாராமய்யா குறிப்பிடுகிறார். கராச்சி மாநாட்டுக்கு வருகை தந்த காந்தி, படேலை எதிர்த்து 'பகத்சிங்கை கொன்றவரே திரும்பிப் போ' என்று மக்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

இப்படிப் போராளிகளைக் காட்டிக் கொடுத்த காங்கிரசு துரோகிகள் அவர்களே நடத்திய போராட்டங்களில் மக்கள் தன்னெழுச்சியாக போராடிய போது கை கழுவி நட்டாற்றில் விட்டார்கள். அப்படிக் கொல்லப்பட்ட, ஆயுள் சிறை அனுபவித்த ஆயிரக்கணக்கான மக்களின் வரலாறும் நமக்குத் தெரியாது. அதில் ஒன்று சௌரி சௌரா.

காந்தியின் தலைமையில் காங்கிரசு ஒத்துழையாமை இயக்கத்தை நடத்தி வந்த காலம். 1922 பிப்ரவரி 4-ஆம் தேதி வங்கத்தின் சௌரி சௌராவில் விவசாயிகள் அமைதியாக ஊர்வலம் சென்ற போது போலீசு அவர்களைத் தாக்கி துப்பாக்கியால் சுட்டது. கோபம் கொண்ட மக்கள் திருப்பித் தாக்கி போலீசு நிலையத்திற்கு தீ வைத்ததில் 23 போலீசார் இறந்தனர்.

காத்திருந்த காந்தி மக்கள் வன்முறையில் இறங்கியதாகக் கூறி ஒத்துழையாமை இயக்கத்தை வாபஸ் வாங்கினார். பிப்ரவரி 12-இல் கூடிய காங்கிரஸ் காரியக் கமிட்டி விவசாயிகளைக் கண்டித்தது. போலீசாரைக் கொன்றவர்களை சரணடைய வற்புறுத்துமாறு மாவட்ட கமிட்டியை காந்தி கேட்டுக் கொண்டார்.

பின்னர் நடந்த விசாரணையில் கோரக்பூர் செசன்சு நீதிபதி 19 பேருக்கு தூக்கும், 110 பேருக்கு ஆயுள் தண்டனை விதித்தும் தீர்ப்புக் கூறினார்.

கொல்லப்பட்ட போலீசுக்கு ஆங்கில அரசு நினைவுச் சின்னம் எழுப்பியது. 47-க்குப் பின்னர் துரோகிகள் அரசு அதைப் புதுப்பித்தது. ஆனால் தூக்கிலிடப்பட்ட தியாகிகளுக்கு 72-ல் மக்கள் தான் தனியாக நினைவுச் சின்னம் எழுப்பினர்.

நாட்டையும், மக்களையும், போராளிகளையும், போராட்டங்களையும் காட்டிக் கொடுத்த காங்கிரஸ் - காந்தி பரம்பரைக்கு நாடு முழுவதும் நட்டு வைத்த சிலைகள் - சின்னங்கள். தேசத்தை விலை பேசிய துரோகிகளின் ஆகஸ்ட் 15 துரோக தினத்திற்கு 50-ஆம் ஆண்டு பொன் விழா.

பகத்சிங், உத்தம்சிங், சௌரி சௌரா விவசாயிகளின் குரல் வளையை தூக்குக் கயிறு நெறித்த போதும், தேங்கிய கனவை உறைந்து போன கண்கள் சொன்னது — 'சுதந்திர இந்தியாவைப் படைக்க வேண்டும்'. அது படுக்கையில் ஒருக்களித்துப் படுக்கும் கவிஞனின் கனவல்ல. பகத்சிங்கின் கனவு. தியாகிகளைக் கொன்ற தூக்கில் துரோகிகளை ஏற்றி, ஏகாதிபத்தியங்களிடமிருந்து நாட்டை விடுவிக்கும் வரை அந்தக் கனவு நம்மைத் தூங்க விடாது. ■

படிப்பகம்

www.padippakam.com

# மௌனம்



"அய்யோ அஞ்சும்
பொண்ணாப் போச்சே..."
என்னை மௌனத்தில்
பெறவில்லை என் தாய்.

•

பல்லாங்குழியும், பம்பரமும்
ஏரிக்கரையில் எந்நேரமும்,
கல்லாங்காய் மட்டுமல்ல,
கவேட்டி (கபடி) கூட
கழனி மேட்டில் ஆடுவேன்
சுட்டையனுடன்.

பையன் பொண்ணுன்னு
பாராத நேரம்.
மௌனத்திரை மனதை
சிறைபிடிக்காத காலம்.

பட்டனு அறுந்ததால,
பனநாரால் கட்டின
மேல் சட்டையைக் காட்டி,
"பொட்டக் கழுதைக்கி
பொத்தான் எங்கடி போச்சு?
முளைக்கும் போதே
மூட மாட்டேன்னுது"
மூடச் சொன்னார்
மூணாங்கிளாஸ் வாத்தியார்.

மூடிய குரலிடுக்கில்
முளைத்தது மௌனம்.

•

அந்த நாள்...

'நீ பெரிய மனுசியாயிட்டடி பீட'
பங்காளி, பயித்தாளியும்
பந்தல் போட்டு நின்றார்கள்.
நொச்சிலயும், வேப்பிலையும்
வெட்டியாந்தார் பீலிகுட்டி.
தாய்மாமன் தென்னங்கீத்தை
தட்டியாய் முடைந்து தந்தார்.

கட்டினார்கள்...
இருக்கின்ற குடிசையினுள்
இன்னொரு குடிசையை.

தலைத் தண்ணீர் விட்டார்கள்,
புட்டு சுட்டுப் போட்டார்கள்
புதுத்துணி கொடுத்தார்கள்.
பொழுதும் புலர்ந்தது

நான் மட்டும்,
மௌன இருட்டில்.

"மாராப்பு போட்டு
மறைக்காம,
மதம்புடிச்ச தேவ்டியாளுவ,
போறாளுவ பாரு
பொலிகாளை மாரி."
என்றார்
கிட்டுவூட்டு கிழவர்.

'ஒரு பல்லு இருக்காது...
ஆம்பளையாண்ட இன்னாடி
அப்படியிளிப்பு,'
என்றாள் தாய்.

'வச்சிருக்க கூடாதுய்யா
வயசுக்கு வந்தவள
கூனோ குருடோ
தள்ளி வுட்டுடணும்
வந்தவன் கிட்ட,'
என்றார் தாய்மாமன்

உதட்டை ரசித்தவன்
சொற்களை ரசித்தானா?
'வீங்கி விடும் கன்னம்'
— என்றான் கணவன்.

பெற்ற மகனிடம்
வாய் திறந்த போது,
'இன்னாமா
பொம்பளையா லட்சணமா
போவ மாட்டியா கம்முனு,'
— மூடிக் கொண்டேன்.

மௌனச் சேற்றில்
புதையுண்ட குரல்வளையின்,
விசும்பல் மட்டும்
வெகு காலமாய்...

நீங்களுமா என்னைப் போல,
மௌனமாய்
மரிக்க வேண்டும்?

■ நிதி கோமேதகம்

சென்னையி
ஒரு வியாழ
தரித்த தன்னா
ஐவர் கற்சி
'வன்முறை
மௌன
வெண்
கொ

போராட்டத்
பாலஸ்
- இன்

வன்மு
நாடுகளை
- ஆப்
உள்
கருப்

நா

உ



படிப்பகம்

www.padippakam.com

# தீர்ப்பு

□
காவிரிக்கரையின்
கழிமுகப் பகுதி.
வண்டலும் சேறும்
வழிந்து நழுவும்.
நெற்களின் பூக்கள்
நெஞ்சத்தில் கமழும்.
தக்காளி வெண்டை கத்தரியும்
காய்த்துக் குலுங்கும்
கண்கள் குளிரும்.

அந்த
உழைப்பின் சொந்தக்காரன்
ஊருக்கு வெளியே
சேரியில்...

□
தாமிரபரணி சென்றேன்.
தரையும் சிவந்திருந்தது
சுடலை நாற்றம் சுழன்றடிக்க,
ஈக்கள் மொய்த்த எலும்பும்
தோலும்...
இத்தனை பெரிய சுடுகாடா!
இல்லை... இல்லை...
ஓரிருவரின் நடமாட்டம்
ஊர்தான் என உணர்த்தியது.

காணுமிடமெல்லாம்
கல்லறையின் சுவடுகள்...
காரணம் என்னவோ...?


'கொட்டாச்சியில் கூழ்வாங்கி
கும்பிடு போட்டு
குடிச்சவனெல்லாம்
என்னமா திமிறுறான்...
எவனோ சுந்தரலிங்கமாம்
பள்ளனின் பேரால் பேருந்து ஓட
பார்த்து நிற்போமோ தெருவில்?'

'தூரத்து தேசத்தானா,
தொலஞ்சி போறான்னு விடலாம்,
கண்ணுக்கெதிரே
கைகட்டி நின்னவனெல்லாம்...'
மனுதர்மம் மறுபடியும் பேசியது.
மேடு - பள்ளம்
உயர்வு - தாழ்வு
ஆதிக்கம் - அடிமை
திருமகனார் - சுந்தரலிங்கம்.

'எமக்கு ஒரு கண்ணா...
பரவாயில்லை
எதிரிக்கு இரண்டும் போகட்டும்.
பேருந்துகளுக்குப் பெயர் மாற்றம்'

தீர்ப்பளித்தார்
மனுநீதிச் சோழன்.

■ மு. துரை



றிப்பு:
திரில்
உடை
ண்கள்
றவாறு
கிற்கான
ம்' என்ற
பிடித்துக்
ணி நேரம்
மௌனப்
னி என்ன?
னயில், பூத
ண்கள் மீது
ம் பாலியல்
ண்டித்து இரு
ண்கள் 1991
ருசேலத்தில்
பி நகரில் கூடி
த்தி மௌனப்
நடத்தினார்கள்.
தொடர்ந்து சில
ந்த தன்னார்வக்
பண்கள் கருப்பு
பியாழன் தோறும்
னப் போராட்டம்
டத்துகிறார்களாம்.

www.padippakam.com

# மகிழ்ச்சியின் தருணங்கள்

சமீபத்தில் சாதி மறுப்பு - மறுமணம் ஒன்றை ம.க.இ.க.வின் சார்பில் நடத்தி வைத்தோம். இரு வீட்டாருக்கும் இதில் உடன்பாடு இல்லை. எனினும் நண்பர்களும், தோழர்களும், ஆதரவு காட்டும் ஒரு சில உறவினர்களும் திரண்டிருக்க மண விழா இனிதே நடந்தேறியது.

தாலி, சடங்கு, வரதட்சிணை, சாதி ஆகியவற்றை மறுத்து மணங்கள், மறுமணங்கள் பலவற்றை ம.க.இ.க. நடத்தியிருந்தபோதும், கண்ணீர்க் கடலைக் கடக்காமல் அநேகமாக எதுவும் 'இனிதே' கரையேறுவதில்லை.

கண்ணீர், முறையீடுகள், தற்கொலை முயற்சிகள் ஆகிய அனைத்து ஆயுதங்களும் இந்த மணமக்களுக்கு எதிராகவும் பயன்படுத்தப்பட்டன. சாதி ஆதிக்கமும், ஆணாதிக்கமும் அரிவாள் தூக்கும் சந்தர்ப்பங்களைக் காட்டிலும் தூக்கு மேடையில் நிற்கும்போது தான் அபாயகரமாகக் காட்சியளிக்கின்றன.

பெற்றோரும் உற்றாரும் ஆதிக்கம் செய்யும் நிலையில் இருக்கும் போது நம் உடலை மட்டுமே கட்டுப்படுத்துகிறார்கள். அவல நிலையிலோ உள்ளத்தைக் 'கொள்ளை' கொண்டு விடுகிறார்கள்.

சாதி, மதத்தை மறுத்து பல காதல் திருமணங்கள் சமூகத்தில் நடக்காமல் இல்லை. அவர்களும் இத்தகைய பிரச்சினைகளைச் சந்திக்காமலும் இல்லை. இருப்பினும் உணர்ச்சிபூர்வமான முடிவுக்கும், உணர்வுபூர்வமான தெரிவுக்கும் பாரிய வேறுபாடு இருக்கிறது.

காதல் திருமணங்கள் பலவற்றின் 'புரட்சி' மணமேடையுடன் முடிவடைகிறது. ''கடன் வாங்காதே, சிக்கனமாக இரு, சேமித்துக் கொள், வீடு கட்டு, அளவோடு பெற்றுக்கொள், பிள்ளைகளைப் பெரிய படிப்பு படிக்க வை, இருந்தாலும் வயதான காலத்தில் பிள்ளைகளை நம்பியிராதே'' - என்ற வகையில் வாழ்த்துரை வழங்கப்பட்ட மணமக்கள் சராசரிகளின் உலகத்தில் சங்கமமாகிறார்கள்.

புரட்சிகர மண விழாவிலோ - சரியாகச் சொன்னால் - மணமேடையிலிருந்துதான் 'புரட்சி' துவங்குகிறது. ''தன் வீடு, தன் பிள்ளை, தன் சுற்றம்'' என்ற இழிந்த வாழ்க்கை வாழமாட்டோம் என்றும், மக்கள் நலனுக்கும், சமூக விடுதலைக்கும் உளப்பூர்வமாகப் பாடுபடுவோம்'' என்றும் மணமக்கள் உறுதியேற்கிறார்கள்.

இந்த உறுதிமொழியை அமல்படுத்த முனையும்போது குடும்பத்தின் 'அமைதி' கெடுகிறது; அற்ப விசயங்கள் என்று இதுகாறும் கருதப்பட்டவையெல்லாம் அன்றாடத் தலைவலிகளாகின்றன.

கணவன் மனைவியிடையேயான 'புதிய' வேலைப் பிரிவினை, மனைவி பொதுவாழ்வில் ஈடுபடுவதால் 'இயல்பாகவே' பல சங்கடங்களுக்கு உள்ளாகும் கணவன், 'இயல்பாகவே' பொதுவாழ்வில் ஈடுபடத் தயங்கும் மனைவி, அவ்வாறு ஈடுபட மறுப்பது அவள் உரிமையா, ஈடுபடுத்துவது தன் கடமையா என்று தடுமாறும் கணவன், இதற்கிடையில் மகிழ்ச்சியையும், புதிய தலைவலிகளையும் ஒரேநேரத்தில் கொண்டு வரும் குழந்தை, இந்த எதிர் நீச்சலின் வேதனையை தொடர்கதை படிக்கும் ஆர்வத்துடன் கவனிக்கும் அண்டை வீட்டுக்காரர்கள்! தெரிந்த தீர்வுகளை அமல்படுத்துவதில் தயக்கம், தீர்வு காணவேண்டிய பிரச்சினைகளை எண்ணியோ ஆயாசம்! - மொத்தத்தில், மகிழ்ச்சிக்காகத் தெரிவு செய்த மணவாழ்க்கை மகிழ்ச்சியையே காவு கேட்பதுபோலத் தோன்றுகிறது.

சாதி, மதம், ஆணாதிக்கம், சுயநலம், பிழைப்புவாதம் ஆகியவற்றை ஒழிக்க வேண்டுமென்பதைக் கொள்கையளவில் கூட ஏற்கமறுக்கும் நபர்களைப் பற்றி நாம் இப்போது பேசவில்லை. முற்போக்கான புதிய ஒழுக்க விழுமியங்களை சமூகம் முழுமைக்கும் பரப்ப வேண்டும் என்பதைக் கொள்கையளவில் ஏற்றுக் கொண்டவர்களைப் பற்றித்தான் பேசுகிறோம்.

ஏனென்றால் தங்கள் கொள்கை, நடைமுறைக்கு உதவாது என்பதைத் தம் சொந்த அனுபவத்திலிருந்தே நிரூபிக்கும் 'ஆற்றல்' இவர்களுக்குத்தான் உண்டு.

• • •

''மகிழ்ச்சி என்றால் என்ன?'' என்ற கேள்விக்கு போராட்டம் என்று பதிலளித்தார் கார்ல் மார்க்ஸ். கருத்தியல் துறையிலும், அரசியல் துறையிலும் அவர் நடத்திய போராட்டங்கள் ஒருபுறமிருக்கட்டும். குடும்ப வாழ்வில் அவர் சந்தித்த வறுமை, பட்டினி, உடல்நலக்கேடு, குழந்தையின் மரணம் போன்ற பல துன்பங்கள் 'போராட்டம்' என்ற அந்தச் சொல்லுக்குள் உறைந்திருக்கின்றன.

போராட்டமே வாழ்க்கை என்றெல்லாம் பேசினாலும், போராட்டம் என்ற சொல் மகிழ்ச்சியின் எதிர்ச்சொல்லாகவே நடைமுறையில் பொருள் கொள்ளப்படுகிறது. மகிழ்ச்சிக்குத் தேவையான இன்ப நுகர்ச்சி அல்லது பயன்பாடு அதில் என்ன இருக்கிறது? என்ற கேள்வி எழுப்பப்படுகிறது.

விஞ்ஞானி டார்வினின் ஒரு அனுபவத்தை இங்கே குறிப்பிடுவது பொருத்தமானது. தனது ஆய்வுகளின் போது ஒரு புராதனப் பழங்குடி இனத்தைச் சந்தித்தார் டார்வின்.

வழக்கமாக மனித மாமிசம் தின்னாத அவர்கள் பஞ்ச காலத்தில் மட்டும் தங்கள் இனத்தைச் சேர்ந்த வயது முதிர்ந்த கிழவிகளையே கொன்று தின்கிறார்கள். தாங்கள் தின்றது மட்டுமின்றி, தங்கள் வேட்டை நாய்களின் பசியைத் தீர்ப்பதற்காகவும் கிழவிகளைக் கொன்றார்கள்.

> **சமூக மாற்றத்தையும், புரட்சியையும் நேசிக்கும் ஒரு நபர், சமூக உணர்வற்றும் சமூக விரோதமாகவும் சிந்திக்கும் குடும்ப உறுப்பினர்களை எங்ஙனம் நேசிக்க இயலும்? லட்சியப் பிடிப்பின் அடிப்படையில் உணர்வுபூர்வமாகத் தெரிவு செய்து கொள்ளும் உறவுகளைக் காட்டிலும் இத்தகைய இரத்த உறவுகள் மேன்மையாகி விடுவதில்லை.**

www.padippakam.com

அதிர்ச்சியுற்ற டார்வின் ''நாய்க்கு மனிதனைத் தீனியாக்குகிறீர்களே'' என்று கேட்டபோது அவர்கள் இரண்டே வரிகளில் பதில் சொன்னார்கள்: ''நாய்கள் வேட்டைக்குப் பயன்படும்; கிழவிகள் பயன்பட மாட்டார்கள்''.

தன்னைக் கொல்ல வரும் எதிரியாகவோ அல்லது தன்னால் கொன்று தின்னப்படவேண்டிய உணவாகவோ சக மனிதனைக் கண்டு கொண்டிருந்த விலங்கு நிலையிலிருந்து, மனிதன் உருவாகிக் கொண்டிருந்த காலம் அது. தனது பசி, தாகம், உறக்கம், வேட்கை ஆகியவற்றைத் தீர்த்துக் கொள்வதற்காக எதையும் செய்யலாம் என்றெண்ணிய காலம் அது. இதைத்தான் செய்யலாமென்ற ஒழுக்கம், மதிப்பீடுகள் போன்றவை தோன்றாத காலம்.

இன்று நாம் வெகுதூரம் வந்து விட்டோம். எனினும் நுகர்வும், பயன்பாடும் மட்டுமே மகிழ்ச்சியைத் தீர்மானிக்கிறது என்று 'நுகர்வியல் பண்பாடு' தான் இன்று கோலோச்சுகிறது.

உண்பதிலும், உடுத்துவதிலும், அழகியல் ரசனையிலும் இன்னபிற நடவடிக்கைகளிலும் பல அன்றாட மகிழ்ச்சிகள் இருக்கத்தான் செய்கின்றன. ஆனால் அவைதான் அறுதியான மகிழ்ச்சிகளா?

பிற மக்களின் துன்பங்கள், ஆசைகள், விருப்பங்கள் ஆகியவை பற்றி அக்கறையில்லாமல், தனது மகிழ்ச்சி ஒன்றே லட்சியமாக இருக்க எவ்வளவுதான் ஒரு மனிதன் முயன்றாலும், அவை அவனது வாழ்க்கைக்குள் தலைநுழைத்தே தீரும். எந்த வம்பும் வேண்டாமென்று எவ்வளவு தான் நடைபாதையில் ஒதுங்கி, ஒதுங்கிச் சென்றாலும், எங்கிருந்தோ பறந்துவரும் போராட்டக்காரர்களின் கல் ஒன்று தலையைப் பிளக்கும். ''சமுதாயத்தில் இருந்து கொண்டே அதிலிருந்து சுதந்திரமாக இருக்க முடியாது'' என்ற உண்மையை நேரடியாக மண்டையில் உறைக்க வைக்கும்.

உயர்ந்த லட்சியங்களைக் கொண்டிருப்பது, அந்த லட்சியங்களை நிறைவேற்றுவதற்கான முயற்சியில் ஏற்படும் துன்பங்களை - அவை உடல்ரீதியானவையோ, உளரீதியானவையோ - சந்திப்பது, இரண்டிலொரு முடிவு காணவேண்டிய தடுமாற்றம் அளிக்கும் தருணங்களில், நாம் கொண்டிருக்கும் கொள்கைக்கு நேர்மையாக நடந்து கொள்வது - இவைதான் மகிழ்ச்சியின் தருணங்கள்.

தனது பலவீனங்கள், அற்ப ஆசைகள், பழக்கங்கள், சுயநலம் ஆகியவற்றுக்கும் தான் கொண்டிருக்கும் லட்சியம் கோருகின்ற மதிப்பீடுகளுக்குமிடையே முரண்பாடு வரும் சந்தர்ப்பங்களில் அவற்றை வென்று வெளிக்கிளம்பும் ஆற்றலில்தான் மகிழ்ச்சி இருக்கிறது.




**உழைப்பதிலா, உழைப்பைப் பெறுவதிலா - இன்பம் உண்டாகும் எங்கே சொல்! என் தோழா!**
**உழைப்பவரே, உரிமை பெறுவதிலே - இன்பம் உண்டாகும் என்றே சொல் என் தோழா!**

''மகிழ்ச்சி என்பது போராட்டம்'' என்று கூறுவதன் பொருள் இதுதான்.

ஆனால் சமூகப் பணிகளில் மனமுவந்து ஈடுபடுவதற்கு 'மகிழ்ச்சியான' குடும்பம் ஒரு முன் நிபந்தனை என்று பலரும் கருதுகின்றனர். ஆனால் மகிழ்ச்சி குறித்த உங்கள் கண்ணோட்டமும் குடும்ப உறுப்பினர்களின் கண்ணோட்டமும் ஒத்துப்போகாதவரை குடும்பத்தில் மகிழ்ச்சி இருக்காது; அல்லது உங்களிடம் மகிழ்ச்சி இருக்காது.

எதைப் பற்றியும் கவலைப்படாத எப்போதும் மகிழ்ச்சி ததும்பும் குடும்பம் - ஹார்லிக்ஸ் குடும்பம் மட்டும் தான். இத்தகைய குடும்பங்களை உருவாக்குவது நமது நோக்கமல்ல என்பதுடன், இத்தகைய 'மகிழ்ச்சியை' ஒழித்துக் கட்டுவதுதான் நம் நோக்கம் என்பதையும் தெளிவுபடுத்திவிடுவோம்.

சமூக மாற்றத்தையும் புரட்சியையும் நேசிக்கும் ஒரு நபர், சமூக உணர்வற்றும் சமூக விரோதமாகவும் சிந்திக்கும் குடும்ப உறுப்பினர்களை எங்ஙனம் நேசிக்க இயலும்? லட்சியப் பிடிப்பின் அடிப்படையில் உணர்வுபூர்வமாகத் தெரிவுசெய்து கொள்ளும் உறவுகளைக் காட்டிலும் இத்தகைய இரத்த உறவுகள் மேன்மையாகி விடுவதில்லை. அவை தங்கள் கீழ்மையை அவ்வப்போது நிரூபிக்காமலும் இருப்பதில்லை.

நிலாவைக் காட்டித் தன் பிள்ளைக்குச் சோறூட்டும் தாய்மை, பசியுடனும் ஏக்கத்துடனும் அதைப் பார்க்கும் தெருப் பிள்ளையைக் கண்டு முகம் திருப்பிக் கொள்கிறதே, அந்த இரக்கமின்மையின் அருவெறுப்பைக் கொண்டாடவா முடியும்?

ஆளும் வர்க்கங்களை முறியடிக்க ரத்தம் சிந்த வேண்டியிருக்கும் போது, அவர்களது பண்பாட்டை கண்ணீர்கூடச் சிந்தாமல் முறியடித்துவிட முடியுமா என்ன?

சரி. கண்ணீர் சிந்தலாம்; ரத்தமும் சிந்தலாம்; ஆனால் எத்தனை காலம்? ''என்றோ நடக்கக்கூடிய ஒரு புரட்சிக்காக இன்றைய இளமையையும், வாழ்க்கையையும் பலிகொடுக்கிறோமே என்று உங்கள் தோழர்கள் கருதுவதில்லையா?'' என்று ஒரு நிருபர் என்னிடம் கேட்டார்.

இது அந்த நிருபரின் கேள்வி மட்டுமல்ல; கொள்கையில் உடன்பாடும் அதை நடைமுறைப்படுத்துவதில் 'சில சிக்கல்களும்' உடைய பலரின் கேள்வியும் இதுதான். 'ரயில் வரும்போது தொத்திக் கொள்ளலாம்' என்பதைப் போல 'புரட்சி வரும்போது கூட்டத்தோடு சேர்ந்து விடலாம்' என்று கணக்குப் போட்டு அதுவரை ஒதுங்கியிருக்கும் மதியூகிகளின் மனதிலிருக்கும் கேள்வியும் இதுதான்.

புரட்சியும், சமூக மாற்றமும் என்று நடக்கும் என்ற தேதி உத்தேசமாகவாவது தெரிந்துவிட்டால், அந்தத் தேதிக்குப் பிறகு மகிழ்ச்சியாக இருக்கலாம் என்ற நம்பிக்கையில் இன்று துன்பங்களைச் சந்திக்கத் தயாராகலாம் என்பது அவர்கள் கணக்கு.

www.padippakam.com

தேர்வுக்குப் பின் வரவிருக்கும் விடுமுறைக் காலத்தின் இன்பத்தை எண்ணியபடியே, கண்விழித்துப் படிக்கும் மாணவனைப் போன்றது இவர்களது சிந்தனை.

போராட்டம் என்பது துன்பம் - அது முடிந்தபின் இன்பம் என்ற கண்ணோட்டத்திற்கு இதைவிடச் சிறந்த உதாரணம் தேவையில்லை.

அப்படியானால் நிச்சயமில்லாத எதிர்கால மகிழ்ச்சிக்காக, உயிர்த் துடிப்புள்ள நிகழ்காலத்தின் மகிழ்ச்சியை இழக்க வேண்டுமா? யாரோ சில அதிர்ஷ்டசாலிகள் .(அதாவது நம்முடைய சந்ததியினர்) நோகாமல் வாழ்வதற்காக நாம் துன்புற வேண்டுமா? - இது அவர்களுடைய அடுத்த கேள்வி.

'நம்முடைய சந்ததிக்காக' என்றால் கேள்வி எழுப்புபவர்கள் 'தம்முடைய சந்ததிக்காக' என்று வரும்போது கேள்வி எழுப்புவதில்லை.

தன் பிள்ளைக்காகப் பட்டினி கிடப்பதை ஒரு தாய் துன்பமாகக் கருதுவதில்லை; தன் மகனைப் படிக்க வைப்பதற்காக அதிகப்படியான நேரம் உழைக்க தந்தை சுணங்குவதில்லை. அவையெல்லாம் இயல்பானவை. துன்பமான இன்பங்கள்!

சமூகத்திற்காக எனும் பொழுது ஒவ்வொரு இழப்பும் துன்பம் தருகிறது. நிகழ்காலம் — எதிர்காலம் என்ற தத்துவ விசாரமெல்லாம் வருகிறது.

'பலியிடுவதற்கு' ஒரு மகிழ்ச்சியான வாழ்க்கையும், இழப்பதற்கு ஒரு 'உயிர்த்துடிப்புள்ள' நிகழ்காலமும் கிடைக்கப்பெறாத பெரும்பான்மை மக்களின் கண்ணோட்டத்திலிருந்து பரிசீலிக்கும்போதுதான் இந்த அற்பத்தனத்தின் முழுப் பரிமாணத்தையும் புரிந்து கொள்ள முடியும்.

அந்தப் பெரும்பான்மை மக்களுக்கு, தங்கள் உழைப்பின் பயனைப் பறிகொடுத்த மக்களுக்கு. உழைப்பே இல்லாமல் 'பயன்' அளிக்கும் பரலோகத்தை வாக்குறுதியாகத் தருகிறது மதம்.

உழைப்பு கிடையாது; நாள் முழுவதும் ஓய்வு. மது, மங்கை, களியாட்டம், உல்லாசம்... இன்னபிற. சுருங்கக் கூறின், உழைப்பின் பயனைத் திருடும் ஆளும் வர்க்கங்கள் பூவுலகில் எதை அனுபவிக்கிறார்களோ, அந்தச் சிற்றின்பங்கள் அனைத்தும் உழைக்கும் மக்களுக்கு பரலோகத்தில் உத்திரவாதம் செய்யப்படுகிறது - பேரின்பம் என்ற பெயரில்.

எனினும், பரலோகத்தை உடனடி லாட்டரி முறியடித்துவிட்டது. கைக்கெட்டும் தூரத்தில் இருக்கும் சொர்க்கம், கண்ணுக்கெட்டாத தொலைவில் உள்ள பரலோகத்தை ஒழித்துக் கட்டியதில் வியப்பில்லை.

ஆனால் கம்யூனிசம் உழைப்பின்றி உல்லாசம் தரும் பரலோகமுமல்ல; தேதி சொல்லி குலுக்கல் நடத்தும் பம்பர் பரிசுச் சீட்டும் அல்ல.

உழைப்பின் பயனை உறுதி செய்வது பொதுவுடைமை; உழைப்பை துன்பமாகவும், ஓய்வை இன்பமாகவும் கருதும் நிலை மாற்றி உழைப்பையே இன்பமாக்கும் வாழ்க்கை நெறிதான் பொதுவுடைமை. எனவே, இன்று போராட்டம், நாளை ஓய்வு என்ற இன்பக் கனவு அபத்தமானது.

வெட்டியெடுத்துத் துண்டாக நிறுத்தப்பட்ட நிகழ்காலம் என்று ஒன்று இல்லை. கடந்த காலம் தோற்றுவிக்கும் உணர்ச்சிகள் நெஞ்சில் வாழும்வரை அது இறந்தகாலமாகி விடுவதில்லை; எதிர்காலம் குறித்த சிந்தனைகள் தலையில் தோன்றும்வரை அது வெறும் கனவாகி விடுவதில்லை. இவையிரண்டையும் சுமந்து முன்செல்லும் வாழ்க்கை தான் நிகழ்காலம்.

இதை விளங்கிக்கொண்ட முன்னணியாளர்கள் தங்கள் லட்சியத்திற்காகக் கொடுக்க வேண்டியிருக்கும் 'விலை'தான் துன்பம், தியாகம். இது நோக்கமற்ற ஒழுக்கவாதமல்ல; இதுதான் வாழ்க்கை.

இத்தகைய இடைவிடாத போராட்டங்களினூடாகத்தான் மனித குலம் தனது வாழ்க்கையையும், மதிப்பீடுகளையும், பண்பாட்டையும் செழுமைப்படுத்திக் கொள்கிறது; உன்னதமாக்கிக் கொள்கிறது.

**"புதியதன் இளம் குருத்துக்கள் பால் நாம் மிகுந்த கவனம் செலுத்த வேண்டும். அவற்றில் சில தவிர்க்க முடியாதபடி மடிந்து விடலாம். ஆனால் அது அல்ல விவகாரம். புதியதன் குருத்துக்களை ஒன்று விடாமல் பேணி வளர்ப்பதே இங்குள்ள விவகாரம். இவற்றுள் நிலைத்து வாழ்ந்தனவற்றை வாழ்க்கை தெரிந்தெடுத்துக் கொள்ளும்"**

**- லெனின்**



அடுத்த கணமும் எதிர்காலம்தான்; அடுத்த நூற்றாண்டும் எதிர்காலம் தான். எனவே எதிர்காலத்திற்கெதிராக நிகழ்காலத்தை நிறுத்துபவர்கள், புரியும்படி சொன்னால், கடைந்தெடுத்த சுயநலவாதிகள் அல்லது ஆளும் வர்க்கத்தின் கைக்கூலிகள்.

போராட்டமே மகிழ்ச்சி என்று புரிந்து கொண்டாலும், தங்கள் வாழ்க்கையை அவ்வாறு தகவமைத்துக்கொள்ள முடியாததால் வருந்துபவர்கள் இருக்கிறார்கள்; குற்றவுணர்வுக்கு ஆட்படுபவர்கள் இருக்கிறார்கள்.

"தன்னால் முடியாததால் யாராலும் முடியாது" என்று பிரகடனம் செய்யும் 'தத்துவஞானி'களும் இருக்கிறார்கள். அறிவும், புலமையும் கொண்ட என்னாலேயே கேளிக்கைகளைக் கைவிட முடியாத போது, குடும்பத்தின் எதிர்காலம் குறித்த கவலையிலிருந்து விடுபட முடியாதபோது, பொது வாழ்வில் குடும்பத்தை ஈடுபடுத்த முடியாதபோது, மற்றவர்களால் எப்படி முடியும் என்று மடக்குகிறார்கள்.

அத்தகைய வாழ்க்கை முறையைக் கடைப்பிடிப்பவர்கள் 'வாய்ப்புக் கிடைக்காததால் யோக்கியர்கள்' அல்லது இரட்டைவேடம் போடுவோர் என்று தூற்றுகிறார்கள்.

முரணற்ற வாழ்க்கை வாழ முயற்சி செய்வோரை வறட்டுவாதிகள் என்றோ, ஒழுக்க விதிகளுக்கு அஞ்சி நடக்கும் முட்டாள்கள் என்றோ

www.padippakam.com

ஏளனம் செய்கிறார்கள்.

போராட்ட வாழ்க்கையில் யாரேனும் தடுமாறுவதாகவோ, தடுக்கி விழுந்துவிட்டதாகவோ தகவல் கிடைத்தால் இவர்கள் உடனே அங்கு தோன்றிவிடுகிறார்கள்; ''பயப்படாதே, நான் உன்னுடன் இருக்கிறேன்'' என்று ஆறுதல் சொல்கிறார்கள். ''அப்பவே சொன்னேனே கேட்டியா'' என்று கடிந்து கொள்கிறார்கள்.

''போராட்ட வாழ்க்கையில் யாரேனும் தடுமாறுவதாகவோ, தடுக்கி விழுந்து விட்டதாகவோ தகவல் கிடைத்தால் இவர்கள் உடனே அங்கு தோன்றி விடுகிறார்கள்; பயப்படாதே நான் உன்னுடன் இருக்கிறேன் என்று ஆறுதல் சொல்கிறார்கள். 'அப்பவே சொன்னேனே கேட்டியா' என்று கடிந்து கொள்கிறார்கள்.''



போராட்ட வாழ்க்கையில் சோர்வுற்றவர்களையும், சலிப்புற்றவர்களையும், தள்ளாடுபவர்களையும், சறுக்கி விழுந்தவர்களையும், புறமுதுகு காட்டியவர்களையும் காணும்போதெல்லாம் தங்கள் 'கட்சி' வென்று வருவதை எண்ணிக் குதூகலிக்கின்றார்கள்.

அதே நேரத்தில் ரசியாவிலும், சீனாவிலும் சோசலிசம் தோற்றுப்போனது குறித்தும், இந்தியப் புரட்சி முன்னேறாதது குறித்தும் பெரிதும் வருந்துபவர்களும் இவர்கள்தான் என்பதைக் குறிப்பிடாமல் இருக்க முடியாது. ஆனால் கவலை தோய்ந்த அந்தக் கண்களுக்கு உள்ளே ஒளிந்திருக்கும் குதூகலத்தை எக்ஸ் ரே எடுத்துப் பார்த்தாலும் உங்களால் கண்டுபிடிக்க முடியாது.

கடந்த காலத்தின் ஒழுக்க நெறிகளையும், காலாவதியாகிப்போன மதிப்பீடுகளையும் சேர்த்துச் சுமந்து கொண்டிருக்கும் இன்றைய சமூகத்தில் புதிய விழுமியங்களுக்காகப் போராடுவதும் அதையே வாழ்க்கையாகக் கொள்வதும் வேடிக்கையல்ல.

கம்யூனிஸ்டுகள் கொண்டுள்ள நம்பிக்கைகளை ''மலர்க் கோப்பையில் நட்ட இலவம் பஞ்சு மரம்'' என்று கேலி செய்யும் அறிவுத் துறையினர் புரட்சிக்கு ஏற்படும் இன்னல்களையும், இடர்ப்பாடுகளையும் கண்டு ஆர்ப்பரித்து அகமகிழ்வதைச் சுட்டிக்காட்டுகிறார், லெனின்:

''இயற்கையிலும் சமூக வாழ்விலும் இப்படித்தான். புதியதன் இளங்குருத்துக்களின் வலுவின்மையைக் கேலி செய்தலும், அறிவுத் துறையினரின் கீழ்த்தரமான ஐயுறவு மனப்பான்மையும்... சோசலித்துக்கெதிராய் முதலாளித்துவத்தைப் பாதுகாப்பதே ஆகும்.''

''புதியதன் இளம் குருத்துக்கள் பால் நாம் மிகுந்த கவனம் செலுத்த வேண்டும்... அவற்றில் சில தவிர்க்க முடியாதபடி மடிந்து விடலாம்... ஆனால் அதுவல்ல விவகாரம். புதியதன் குருத்துக்களை ஒன்றுவிடாமல் பேணி வளர்ப்பதே இங்குள்ள விவகாரம். இவற்றுள் நிலைத்து வாழ்ந்தனவற்றை வாழ்க்கை தெரிந்தெடுத்துக் கொள்ளும்.''

''மேக நோயை ஒழித்துக் கட்டும் பொருட்டு 605 மருந்துத் தயாரிப்புகளை சோதித்துப் பார்த்து குறிப்பிட்ட தேவைகளுக்கு உகந்தபடி 606 - வது தயாரிப்பை உருவாக்கும் பொறுமை ஒரு ஜப்பானிய விஞ்ஞானிக்கு இருந்ததென்றால், இதனினும் கடினமான ஒரு பணிக்கு, முதலாளித்துவத்தை ஒழித்துக் கட்டுவது என்ற பிரச்சினைக்குத் தீர்வு காண விரும்புவோர்... ஆயிரக்கணக்கில் புதிய போராட்ட முறைகளையும், வழிகளையும், ஆயுதங்களையும் சோதித்துப் பார்க்கும் விடாமுயற்சி உடையோராய் இருக்க வேண்டும் அல்லவா?'' என்று கேட்டார் லெனின்.

இருக்க வேண்டும். அத்தகைய முயற்சிகளில் மகிழ்ச்சியும் காண வேண்டும். தான் கொண்டிருக்கும் சமூகப் பொறுப்புணர்வின் அளவுக்கே ஒரு மனிதன் சுதந்திரமானவனாக இருக்கவியலும்.

சமூகப் பொறுப்பின்மையை (சுயநலத்தை) சுதந்திரமாகவும், பொறுப்புணர்வை கட்டுப்பாடாகவும் (சுதந்திரமின்மை) பார்க்கும் தலைகீழ்ப் பார்வைக்கு இது பிடிபடாத புதிராகத்தானிருக்கும்.

கம்யூனிச ஒழுக்க நெறிகளும், அதனடிப்படையிலான விதிமுறைகளும் மகிழ்ச்சியாக வாழும் உரிமைக்கு எதிராக விதிக்கப்பட்ட தடைகளாகத்தான் இத்தகைய பேர்வழிகளுக்குத் தோன்றும்.

எனினும் புரட்சியின் ஒழுக்க நெறிகளும், விழுமியங்களும் விதிமுறைகளால் வார்த்தெடுக்கப்படுபவை அல்ல. அவை ஒரே மனிதனுக்குள் உறைந்து கிடப்பவையும் அல்ல. மாறாக, அவை சுதந்திரமான மனிதர்களின் தனித்தன்மையினால் வளர்த்தெடுக்கப்படுபவை.

போராட்டமே மகிழ்ச்சி என்று வாழும் போராளிகள் ஒவ்வொருவரும் ஒரு கலைஞனைப்போல வாழ்க்கையின் புதிய பரிமாணங்களை, புதிய அழகுகளைப் படைத்துக் காட்டுகிறார்கள்.

தூக்குமேடையில் உயிர் துறந்த போராளிகள் ஏராளம். பகத்சிங்கும் தூக்கு மேடையில் நிறுத்தப்பட்டிருந்தான். கால்களின் கீழிருந்து பலகை இழுக்கப்படுவதற்கு முன் அவனுடைய கடைசி ஆசையைக் கேட்டபோது, ''என் கண்களை மறைத்திருக்கும் கருப்புத் துணியை அவிழ்த்து விடு; என் தாய் மண்ணைப் பார்த்தபடியே நான் மறைகிறேன்'' என்றான்.

அது மரணத்திற்கு முன் அவன் தந்த படைப்பு; அவன் சொன்ன கவிதை.



''தனது பலவீனங்கள், அற்ப ஆசைகள் பழக்கங்கள், சுயநலம் ஆகியவற்றுக்கும், தான் கொண்டிருக்கும் லட்சியம் கோருகின்ற மதிப்பீடுகளுக்கு மிடையே முரண்பாடு வரும் சந்தர்ப்பங்களில் அவற்றை வென்று வெளிக்கிளம்பும் ஆற்றலில்தான் மகிழ்ச்சி இருக்கிறது.

■ மருதையன்



படிப்பகம்

www.padippakam.com

# மாதா, பிதா, குரு ■ டி.வி. ■

அம்மா சாயல், அப்பா சாயல் என்பது மாதிரி இப்பொழுது எல்லாக் குழந்தைகளும், டி.வி. சாயலில் போய்க் கொண்டிருக்கிறார்கள். தான்பெற்ற குழந்தை ''ஐயம் எ காம்ப்ளான் பாய்... கோர்'' என்று கணீரென நடித்துக் காட்டும்போது ஈன்ற பொழுதைவிடப் பெரிதுவந்து போகிறார்கள் பெற்றோர்கள்.

பிறகென்ன டி.வி.க்கும் குடும்பத்திற்குமான உறவு சுமுகமாக இருக்கிறதே என மகிழ்ச்சியடையலாம் என்கிறீர்களா? அதுதான் இல்லை. இந்த இன்பக் கேணி இப்படியே ஊறிக் கொண்டே இருப்பதில்லை.

பிள்ளைகளின் மதிப்பெண் பட்டியலில் மதிப்பெண் குறையும்பொழுது, குடும்பத்தின் வருமானச் சக்திக்குமீறிய பொருட்களைக் கேட்டு அடம் பிடிக்கும்போதும், கலக்கத்தோடு ''டி.வி.ய பார்த்து பசங்க ரொம்ப கெட்டுப் போச்சு'' என்று பொரும ஆரம்பித்து விடுகிறார்கள்.

தொலைக்காட்சியின் அலைவரிசைகளைப் பற்றி விமரிசனப்பூர்வமாக முணுமுணுத்தால் கூட ''சும்மா ஒரு பொழுதுபோக்கு சார், இத போயி சீரியஸா பாக்கக் கூடாது'' என்பவர்கள் கூட பிள்ளைகள் தொலைக்காட்சியிடமிருந்து கற்றுக்கொண்டதை வீட்டில் அமுல்படுத்தத் தொடங்கும்போது படு சீரியஸாகி டி.வி. மேல் பழியைப் போட்டுவிட்டு தனது பங்களிப்பை மறைத்துக் கொள்கிறார்கள்.

வெளியூரிலிருந்து சென்னையில் குடியேறிய ஒரு நடுத்தர வர்க்க நண்பர் டி.வி. வாங்கியதற்கான காரணமாக ஒன்று சொன்னார், ''பசங்கள வெளியவுட்டா நல்ல பழக்கமே வராது சார், வோத்தா, வொம்மான்னு பேச கத்துக்கிடும், அதான் வூட்டோட கெடங்கன்னு ஒரு டி.வி.ய கடனோட கடனா வாங்கினேன்'' என்றார்.

வீட்டுக்குள் டி.வி. யிலிருந்து அவர் பையன் கற்றுக் கொண்ட நல்ல வார்த்தை எது தெரியுமா? ''ஜிங்சானக்கடி ஜிங்சானக்கடி ஜினுக்குத்தான்... உன் ஜீன்ஸ் பேண்ட்டு மேலே ஒரு கணக்குத்தான்''. இப்படிப் பெற்றோர்களே, உங்கள் டி.வி. தெருவை அல்ல, உலகச் சந்தையையே உங்கள் பிள்ளைகள்முன் கடை விரித்துக் காட்டும்போது நீங்கள் தெருவுக்குத் தாழ்ப்பாள் போட்டு என்ன பயன்?

உண்மை என்னவென்றால், பிள்ளைகள் மட்டுமல்ல, பெரியவர்களே இந்த ஈரேழு சானல்லோகத்தில் மயங்கிக் கிடக்கிறார்கள் என்பதுதான் நிலைமை.

நிலாவைக் காட்டி சோறூட்டிய தாய்மார்கள் இன்று டி.வி.யைக் காட்டி ''தோ பாரு அக்கா, தோ பாரு பாப்பா'', என்று டி.வி.யை உறவாக்கி சாப்பிட வைப்பதும், அடம்பிடிக்கும் பிள்ளையிடம் ''தோ பாரு பூம் பூம் பாரு'' என்று வளர்க்கும்போதே தொலைக்காட்சியை அறிமுகப்படுத்துவதும், ருசி காட்டுவதும் பெற்றோர்கள்தான் என்பதை யாரும் மறுக்க முடியாது.


குழந்தைகள் அலைவரிசைகள் வழி பார்த்ததைக் கேட்டு அடம்பிடிக்கும்போது பெற்றோர்கள் டி.வி.யோடு முரண்படுவது விக்கிரமாதித்தன் கதை போல விசித்திரமாக இருந்தாலும், திரும்பவும் வேதாளம் முருங்கை மரத்துக்கும், குடும்பம் டி.வி.க்கும் தாவுவதுதான் நடப்பது.

வீட்டுக்கு நண்பர்களோ, உறவினர்களோ வந்தால், வந்தவர்களிடம் நலம் விசாரித்து அளவளாவுவதற்குப் பதிலாக டி.வி. பக்கமே முகத்தைத் திருப்பிக் கொண்டு வந்தவர்களை அவமதிப்பதாக பெரியவர்களின் டி.வி. தாக்கம் உள்ளது.

'இல்லறமே நல்லறம்', என்று வக்கணை பேசும் வீடுகளில்கூட பிள்ளைகள் ''அம்மா பசிக்குது'' என்று அழைத்தால்கூட ''அங்கதான் கெடக்கில்ல, எடுத்துப்போட்டுத் தின்னா என்ன? ஒரு நாடகத்தகூட ஒழுங்கா பார்க்கவிடாதுங்க'' என்று குமுறும் தாய்க்குலங்கள் முதலில் தன்னை மீட்பது பற்றிப் பரிசீலித்தால்தான், பின்பு குழந்தைகளின் டி.வி. மோகத்தைக் கலைப்பது பற்றி யோசிக்க முடியும்!

தன்னைப் பார்த்து பிள்ளையும் குடிக்க ஆரம்பித்துவிடும் என்று சிகரெட்டை விட்டுவிடுகின்ற தந்தை, குழந்தைக்கு மாந்தம் வந்துவிடும் என்று வாயைக் கட்டி பத்தியம் இருக்கும் தாய் இவர்களால் குழந்தைக்கு டி.வி.யும் சானல்களும்தான் கேடு என்று தெரிந்தால் அதை ஒதுக்கித் தள்ள வேண்டாம், ஒழுங்குபடுத்தக் கூட முடிவதில்லையே ஏன்?

கோயிலில் சுண்டல் கொடுத்தால், பிள்ளைகள் வரிசையில் நிற்பார்கள், பெரியவனாய் ஒருவன் திடீரென வந்து ''டேய் அங்க நில்லு, இங்க நில்லு'' என்று அதிகாரமாய்ப் பேசிக்கொண்டு கூட்டத்தை ஒழுங்குபடுத்துவதுபோல, முன்னாலே சென்று தான் ரெண்டு கையிலும் சுண்டலை வாங்கிச் செல்வான். பார்த்துக் கொண்டிருக்கும் குழந்தைகள் ''ஓ'' என கத்த ஆரம்பிக்கும் இது ஊரில். வீட்டில் ''ஓ'' என அழுகின்ற குழந்தைகள்.



பெரும்பாலான குடும்பங்களில் குழந்தைகளை டி.வி.யிலிருந்து நெறிப்படுத்துவது போல ''வா படி பொழுதன்னைக்கும் என்ன டி.வி.'' என்று பிள்ளைகளை ஓரங்கட்டிவிட்டு, பெற்றவர்கள் டி.வி.யில் கலப்பதுதான் நடக்கிறது.

''சாந்தி இந்தவாரம் பாத்தியா, டெலிகாஸ்ட்ல அத பாத்தியா, இத பாத்தியா''


படிப்பகம்

www.padippakam.com

என்று பக்கத்து வீடுகள் பொறி பறக்கப் பேசும்போது, தனது 'சமூக' உணர்வைப் பகிர்ந்து கொள்ள திரும்ப வும் டி.வி.யே சரணாகதியாகிறது. இது தான் நுகர்பொருள் கலாச்சாரத்தின் வெறி.

நாலு மணியானால் ஒரு காபி குடிக்கவில்லை என்றால் மண்டை வெடித்துவிடும் எனத் தவிப்பவர்க ளைப் போல, நேரப்படி, வரிசைப்படி யான நிகழ்ச்சிகளின் மூலம் மக்களைத் தனக்கு நுகர்வோராக்குவதில் தொலைக்காட்சி - தனியார் அலைவரி சைகள் வெற்றி பெற்றுள்ளன.

> **குழந்தைப் பருவம் கள்ளங் கபடமற்றது என்கிறார்களே, இல்லை பார்ப்பவற்றை அப்படியே ஏற்றுக் கொள் ளும் பருவம் அது. கள்ளம், கபடத்தையும் கலந்து கொடுத்தால் இன்னதென்று அறியாமல் ஏற்கும் மன நிலை அது. திருவிழாவில் பஞ்சு மிட்டாயை வேடிக்கை பார்த்தபடி போய் விடுகிற மாதிரி குழந்தைகள் டி.வி.யின் பின்னாலே போய்க் கொண் டிருக்கிறார்கள். கூடவே பெரியவர்களும் தான்.**

டி.வி.யின் சேட்டைகளுக்கு பெரி யவர்களே இரையாகிப் போயிருப்பது தான் நிகழ்காலம். ஏனென்றால் டி.வி. அனைவரையுமே குழந்தைகளாக்கி விட்டது. குழந்தைகளை மட்டுமல்ல குடும்பத்தையே கூட்டி வைத்து கதை அளக்கின்றன அலைவரிசைகள். குழந் தைகளோடு பெரியவர்களும் அதிலி ருந்து கற்றுக்கொள்கிறார்கள். 'பிரஸ் டீஜ்' கணவன், 'காட்பரிஸ்' தந்தை, பாரம்பர்யம் கலந்த 'டாடா' என நீளும் காட்சிகள் கடைசியில் ''இந்த கதை யோட நீதி மெல்லுங்கள் டபுள் மிண்ட் கம்'' என்று காட்சி மாறும்போது, பூண்டு, வெங்காய குடும்பங்கள் வெறும் வாயை மென்று விரக்தியுறு கின்றன. சூழ்நிலையை மறக்க தண்ணி யடிப்பவனைப்போல மீண்டும் ஆசை களில் முக்குளிக்க சின்னத் திரையே வீட்டை அழைக்கிறது.

தமது குடும்ப நிலைமை என்ன வாழ்நிலை என்ன என்பதை குழந்தைக ளுக்கு உணர்த்த வேண்டிய பெற்றோர் களே தன்னிலை மறந்து டி.வி. போதை யில் ஆழந்து அமிழும்போது பிள்ளை களை நெறிப்படுத்துவது எப்படி?

வீட்டைவிட்டு வெளியே அனுப் பும் பிள்ளைகளுக்கு இன்னாரோடு பழகு, இவரோடு சேராதே என்று கற் றுக் கொடுப்பதில் குறியாய் இருக்கும் பெற்றோர்களுக்கு வீட்டுக்குள் இருக் கும் தொலைக்காட்சியை எப்படி பயன் படுத்துவது? இதில் எது உண்மை, நல் லது (அப்படி ஏதும் இருந்தால்...) என பழக்குவதற்கு கண்ணோட்டம் இன்றி... பிள்ளைகளின் வளர்ப்பு முறை பாதிக்கப்படும் போது கையறு நிலையில் தவிக்கையில்தான் ''இந்த டி.வி.யையே ஒழிச்சுக்கட் டலாமான்னு தோணுது'' என்று புலம்புகிறார்கள்.


இனி டி.வி.யை ஒழித் துக் கட்டவும் முடியாது, அதுவும் பிரச்சினையைத் தீர்த்துவிடாது. தான் பயன் படுத்துகின்ற வீட்டு உப யோகப் பொருள்களிலி ருந்து, அணிகின்ற விசயங் கள் வரை ஒரு பயன்பாட்டு அறிவைப் பெற்றிருப்பது போல, தொலைக்காட்சி யைப் பற்றியும் ஒரு பயன் பாட்டு அறிவின்றி, அப்ப டியே அதை ஏற்றுக் கொள் வதுதான் முதல் கோணல்.

கையில்தான் நிறைய சானல்கள் இருக்கிறதே, எது நல் லதோ, தேவையோ அதை பார்க்கும் சுதந்திரம் நம் கையில்தான் என்று பேசு பவர்களும் உண்டு. இருக்கிற சுரண் டல் கட்சிகளுக்குள் எதையாவது ஒன்றை தேர்ந்தெடுக்கிற உரிமைதான் தேர்தல் முறை என்பதுபோல, பொத் தானைத்தான் நீங்கள் மாற்றலாம் நிகழ்ச்சிகளை நீங்கள் தீர்மானிக்க முடி யாது, ஏற்கனவே ''இதைத்தான் காட்ட வேண்டும்'' என்பதுதான் தொலைக் காட்சி ஜனநாயகம்.

''முதலாளித்துவ உலகம் எல்லா அறிவியல் கண்டுபிடிப்புகளையும் தனக்குச் சேவை செய்ய வைக்கும்...'' என்றார் காரல் மார்க்ஸ்.

தொலைக்காட்சியும் அதற்கு விதி விலக்கல்ல. இன்று அது இருப்பதோ முதலாளிகளின் கையில், அவர்களின் சந்தையை நோக்கித் திருப்பும் தார்குச் சியாகத்தான் அதுவும் செயல்படும். இதற்கு முரண்படுகிற நபர்களை சரிக் கட்டவும், ஆசைகாட்டியுந்தான் அலை வரிசைகள் விளம்பரமாய், கதைக ளாய், காட்சிகளாய் மக்களைப் பற்றிப் படர்கின்றன. பெரியவர்களே இதைப் புரிந்து கொள்ளாத போது, குழந்தை களை எப்படி நெறிப்படுத்துவது? இப் போது பிரச்சனையே பெரியவர்களை நெறிப்படுத்துவதுதான்.

இந்த நிகழ்ச்சியை வழங்குபவர் கள் ''அமுல், பெப்சோடெண்ட், பார்லே ஜீ'' என்று விளம்பரம் பார்க் கும்போது குறிப்பிடுவது குழந்தைகள் மட்டுமல்ல, பெரியவர்களும்தான். இப்படி வாழ்க்கையையே விளம்பரதா ரர் வழங்கும் நிகழ்ச்சியாக மாற்றுவது



தான் நுகர்பொருள் கலாச்சாரத்தின் இலக்கு. இதற்கு டி.வி. ஒரு வழிகாட்டி.

குழந்தைப் பருவம் கள்ளங்கபட மற்றது என்கிறார்களே, இல்லை, அது தெள்ளத்தெளிவற்றதும்கூட. பார்ப்ப வற்றை அப்படியே ஏற்றுக்கொள்ளும் பருவம் அது. கள்ளம், கபடத்தையும் கலந்து கொடுத்தால் இன்னதென்று அறியாமல் ஏற்கும் மனநிலை அது. திருவிழாவில் பஞ்சு மிட்டாயை வேடிக்கை பார்த்தபடி போய்விடுகிற மாதிரி குழந்தைகள் டி.வி.யின் பின் னாலே போய்க் கொண்டிருக்கிறார்கள். குழந்தைகள் மட்டுமா? கூடவே பெரி யவர்களும்தான்.

என்ன உங்களையும் ஏதுமறியாத குழந்தைகள் என்றால் கோபம் வருகி றதா? அதோ உங்கள் வீட்டு டி.வி. சொல்கிறது உங்களது உண்மை நிலையை ''இப்பவாவது பெரியவங் களா ஆயிடுங்க!''.

■ சுடர்விழி

www.padippakam.com

# சிறுகதை:

# மலடு

தூரத்தில் என்னைக் கண்டதுமே சின்னம்மாவின் முகத்தில் மகிழ்ச்சி பொங்கியது. சாணி தட்டிக் கொண்டிருந்த கையை வெடுக்கென்று உதறிக் கொண்டு எழுந்தாள். "ஏய் ராமு யாரு வர்றா பாரு" உவப்போடு குரல் நீண்டது. "ஓடியா போயி பைய வாங்கிட்டு வா" எதிர்வீடு, பக்கத்து வீட்டுக்காரர்களும் திண்ணை பக்கம் வந்து புருவத்தை நெருக்கி கவனித்தனர். என் முகம் நினைவுக்கு வர விசாரித்து வரவேற்றனர்.

"என்ன சின்னம்மா கையில சந்தனத்தோட வரவேற்குற போல இருக்கு". "ஆங்... இதான் நாட்டு சந்தனம், வா, வா...", சாணிக் கையை ஒட்ட வழித்துக் கொண்டே முகம் முழுக்க பூரித்தாள். ஆட்களைக் கண்டு விட்டால் வரும் முகமலர்ச்சியும், உள்ளொன்று வைக்காத இந்தச் சிரிப்பும் காணுந்தோறும் கிராமத்து அதிசயமாய்ப் படும்.

"ஏன் சின்னம்மா சித்தப்பா எங்க?"

"மாயாரம் போயிருக்குது, செகரட்டரி வூட்டுக்கு மாடு புடிக்கணும்னு காலைல எழுந்து தரகு ஆளோட போச்சுது. ராத்திரிதான் வரும், சரி நீ கடுதாசி கண்டவுடனேயே காப்பு கட்டறப்போ வரக்கூடாது திருவிழா முடியற நேரத்துல வர்றியே இந்த வாட்டி அலங்காரம், வாண வேடிக்கை கண்ணு கொள்ளலை போ".

"எப்படியோ பயிறு எடுத்த காச சனங்க பாழாக்கிட்டாங்கன்னு சொல்லு."

"ஊஹீம் நீதான் சாமி இல்ல, பூதம் இல்லேம்பே உங்கிட்ட போயி சொல்றேன் பாரு. நேத்து கூட சாமி வர்றப்ப மூணாவது வூட்டு லெட்சுமி இல்ல உன் பேச்சு தான் பேசிச்சு. சாமிய பத்தி வம்பு வளப்பேன்னு."

"லெட்சுமி அக்கா நல்லா இருக்காங்களா. அவங்க புருசன் 'தண்ணி' வண்டி இப்ப எப்படி?"

"அது சென்மத்தோட வுட்டா தான். இத ஏன் கேக்குற நீ மிதிக்கிறேன்னு ஓடி தீக்குளியிலே வுழுந்து ஆசுபத்திரியிலே கெடக்குறான். பாவம் அந்த பொண்ணு கை கொழந்தையையும் வச்சிகிட்டு ஆசுபத்திரிக்கும் வூட்டுக்குமா அலையுது. தண்ணிய அடிச்சிட்டு ஓடியிருப்பான் போலருக்கு."

"இந்த வெயில் காலத்துல தீக்குளியிலே ஓடுனா மயக்கம் வந்து விழாம வேற என்ன நடக்கும்?"

"பாத்தியா ஏகடியம் பண்ற, மகமாயி மன்னிச்சிடு புள்ளைய.. நான் வேண்டிக்குறேன்."

அடக்க முடியாமல் எனக்கு சிரிப்புதான் மேலிட்டது.

"ஏன் சின்னம்மா, ரெண்டாவது வூட்ல தையக்காரு இருந்தாரே போன வாட்டி வந்தப்ப கூட நல்லா பேசுனாரே.." சின்னம்மா தலையை பிராண்டியபடி யோசித்தாள்.

"அதான் அவுரு பொண்டாட்டி கூட காலு தாங்கி தாங்கி நடப்பாங்களே, இல்லையா அவுங்க?"

"ஓ! பொன்னம்மாவா, பாவம் ஊரோட போயிட்டாங்க. இங்க இவன் மாசம் முழுக்க துணி தைக்கிறான். முன்ன மாறி வயல்ல வேலையும் இல்ல. புள்ளக்குட்டிய வச்சிகிட்டு என்னத்த பண்ணுவா? நம்ப பந்தநல்லூர் தாண்டி மரத்துறை இல்லை அதான் அவங்க ஊரு அங்கேயே போயி டீக்கடை வச்சிட்டாங்க. ந்தா காபிய குடி."

"ஏன் சின்னம்மா கடைல போயி வாங்கியாந்தியா? நீ வீட்ல போடுற வெல்லம் போட்ட டீ போல டேஸ்ட்டா இல்லியே!"

"வெறகு இல்ல, செத்ததான் கெடக்கு, அதுல போட்டா புகையடிச்சு போயிடும் அதான்."

"தையக்காரு வீடு காலி பண்ணிட்டாங்கன்னே ஆளுங்க இருக்குற மாதிரில்ல தெரிஞ்சுது."

"ஓ! அதுவா அங்க புதுசா ஒண்ணு குடி வந்துருக்கு" சொல்லுகிற தொனியிருந்தே சுமுகமான பழக்கமில்லை என பட்டது.

"ஏன் சின்னம்மா ஒரு மாதிரி சொல்ற."

"அதுவா சரியான குதிரை. ரப்பு ராங்கி சாஸ்தி. பம்படிக்கு வந்தா கூட பட்டு, பட்டுன்னு தண்ணிய தூக்கிட்டு, யாருகிட்டேயும் பேசாம பெரிய இது மாதிரி போகும், பாத்து நீ கூட மத்தவங்ககிட்ட பேசுற மாதிரி அதுகிட்ட பேச்சு குடுத்துடாத எடக்கா பேசிபுடுவா அதுவும் நீ புதுசு. தெருக்காரங்ககிட்ட பேசுற மாதிரி வாய வுட்டுடாத ஆமாம்.. சரி சரி நீ போயி தூங்கி எழுந்திரு. ராத்தி சாமி வரும் வேடிக்கை பார்க்கலம்."

"வேடிக்கை பாக்குற வயசா எனக்கு".

"இன்னைக்கு தெருவுல பாரேன் எவ்ளோ சனம் சாமி பாக்க வருமுன்னு.. நீ ஒரு தூக்கம் போடு சாயங்காலம் பேசிக்கலாம்.

★☆★

அந்த வீட்டுக்கார பெண்ணிடம் பேசாதே என்று சின்னம்மா சொல்லிச் சென்றது அவர்களைப் பற்றி அறியும் ஆவலை அதிகமாக்கியது. சின்னம்மா பெரும்பாலும் யாரையும் வேண்டாதவர்கள் என சொல்லியது கிடையாது. ஒருவேளை பகட்டான ஆளாயிருக்குமோ?! கேள்விகள் கிளைவிட்ட மனத்துடன் கயத்து கட்டிலில் தலை சாய்த்ததுதான் தெரியும். வேப்பங்காற்றின் அரவணைப்பு சுவாசத்தைத் தவிர அனைத்தையும் ஈர்த்துக் கொண்டது. கண்விழித்த போது மடையான்கள் கூடு திரும்பிக் கொண்டிருந்தன. மரக்கிளைகளில் தவிட்டுக் குருவிகள் அந்திராகத்தை கிறீச்சிட்டு சகாக்களுக்கு சமிக்ஞை தந்து கொண்டிருந்தன.

"அப்பா எவ்ளோ நேரம் தூங்கியாச்சு" அவசரமாக எழுந்து வாசல் பக்கம் பாக்க திண்ணையில் தவிட்டுக் குருவிகள் போல சின்னம்மாவோடு தெருவாசிகள் சிலரும் வாயசைப்பது தெரிந்தது. பெரும்பாலும் சாயங்கால வேளை அவர்கள் கூடி பேசும் பேச்சில் வம்பைத் தவிர வேறேதும் இருக்காது. மாரியம்மன் கோயிலின் ஒலிபெருக்கி நாலா பக்கமும் கத்திக் கொண்டிருந்ததால் அவர்களின் குசு குசுப்பு பேச்சு வழக்கத்திற்கு மாறாக சத்தம் கூடியிருந்தது.

"இப்புடி ஒருத்தர பத்தி ஒருத்தர் பேசி என்னதான் தீரப் போகுதோ தெரியல. பொருமல்தான் மிச்சம், பார்த்து சின்னம்மா வாயை குடுத்து வம்புல மாட்டிக்காத."

எத்தனை முறை கூறினாலும், "ஊகூம் நீ எல்லாத்துக்கும் குத்தம் கண்டுபிடிப்ப, நாங்க பாட்டுக்கும் திண்ணைல தான் பேசறோம். அதுவும் இப்ப எல்லாம் முன்ன மாதிரி பேச்சுக்கே ஆளு இல்ல" அலுத்துக் கொண்டாள் சின்னம்மா.

"முன்னெல்லாம் பார்வதி பார்வதின்னு பேசிப்பீங்க, இப்ப யாரு உங்க


படிப்பகம்

www.padippakam.com



பேச்சுல மாட்டிக்கிட்டது? அந்த புதுசா வந்த பொண்ணா?''

''நல்ல ஆளுதான் நீ கரெக்ட்டா சொல்றியே காத குடுத்த மாதிரி. ஒனக்கு தெரியாது அவ லேசுபட்ட ஆளு கெடையாது. என்னா எடக்கு பேசுவா தெரியுமா?'' பொறுமினாள் ராசம்மா.

ரேணுகா இன்னும் ஒரு படி மேலே போய் எரிந்து தள்ளினாள், ''நீ புதுசு உனக்கு தெரியாது ஒரு நாளும் பம்படியில் வயசுல சின்னவளாச் சேன்னு நல்லாதாண்டி நியாயம் பேசுறேன்னு சொல்லிட்டேன், அதுக்கு அவ பெரியவன்னு கூட பாக்காம, நீ யாருடி கேக்கன்னுட்டா, அதுக்குத்தான் வயத்துல ஒரு புழு, பூச்சி கூட வைக்காம மலட்டு நாயா திரியுது.''

''இவ்வளோ பேசறீங்க அந்தாளு யாரு? நாராயணனா? அவன் சைக்கிள்ல போறப்பவே, பொண்ணுங்கள கண்டா பெல்ல அடிச்சு என்னாடி புருசன் வூட்ல இருக்கானான்னு கேட்டுட்டு போறானே அதுக்கு கோவம் வருதா உங்களுக்கு?''

''நீ வேற. எதையும் பேசி வச்சிடாத, அது இந்த ஊர்ல சின்ன புள்ளைலேர்ந்தே எல்லாருக்கும் பழக்கம், யாரும் கோவிச்சிக்க மாட்டாங்க. அந்த மலட்டு சிறுக்கிய பத்தி உனக்கென்ன தெரியும். பாரேன் பம்படிக்கு அவ வந்தா இப்படி ஊரு பொச்சரிப்பு வச்சாக்கா வயத்துல எதுவும் வைக்குமா, தெரியாமலா சொன்னாங்க ஊரோடு பகை வேரோடு கொல்லும்னு'' சின்னம்மாவும் சேர்ந்து கொண்டாள்.

''யக்கா தண்ணி வந்துடுச்சி'' ராசம்மா குரல் கொடுக்க திண்ணை காலியானது.

எதிர்த்த வீட்டு வேம்பு குடத்தோடு பம்படிக்குப் போன கையோடு வீட்டுப் பக்கம் திரும்ப ஓடினாள்.

''ஏன் சின்னம்மா திரும்பி வர்றீங்க?''

''உள்ளார வா'' கதவைச் சாத்துவதில் குறியாய் இருந்தாள்.

''ஐயோ! அந்த பொல்லா பய நாராயணன் வர்றாம்ப்பா. அவன் தண்ணி போட்டுட்டா, பொம்பளைங்க தெருவுல நிக்க முடியாது. வாய்க்கு வந்ததை பேசிட்டு வம்பளந்து தகராறு பண்ணுவான்.''

''அயோக்கியத்தனமா இருக்கே ஊர்ல யாரும் கேக்க மாட்டாங்களா?''

''போத இருக்குற வரைக்கும் தாம்பா, தெளிஞ்சோன்ன யக்கா கோவிச்சிக்காத, அண்ணே மன்னிச்சிடுன்னு கொழைவான். நீயும் உள்ளாற வந்துடு''.

பம்படிக்குப் போன எல்லோருமே வீட்டுப் பக்கம் திரும்பியிருந்தனர். ஒருத்தி மட்டும் பம்படியிலேயே குடத்தைக் கழுவிக் கொண்டிருந்தாள்.

மீசையைத் தடவிக் கொண்டு தெருவில் அங்குமிங்கும் கலைந்து நடந்தபடி வந்தவன் உளறலோடு பாடினான், ''மாமன் வரான் கதவத் திற; மாமரத்து பசுங்கிளியே... ஏய் யார் நீ பம்புல கொஞ்சம் தண்ணி ஊத்து'' கோவமாய் அவனை ஏறிட்டவள், குடத்தை ஒதுக்கி நின்றாள்.

''என்னாடி தண்ணி ஊத்துன்னா மொறைக்குற, ஊத்துடி''.

''யோவ் மரியாதையா பேசு, என்னா? பொண்டாட்டிய கூப்புடற மாதிரி கூப்புடற, மரியாத கெட்டுடும் ஆமாம்.''

''என்னாடி ஏய் தண்ணி ஊத்துன்னா எகித்து பேசுற யாரு வூட்டு கழுதை என்னா இப்ப மாமான்னுதான் வச்சிக்கியேன்..''

அவன் சொல்லி முடித்ததுதான் தாமதம், சீற்றத்துடன் அவள் பரபரத்து போனாள் அதுக்கு வேற ஆள பாருடா நாயே. அவள் கையில் இருந்த செப்புக் குடம் மாறி, மாறி அவன் முகத்தில் மோதி சிவப்பானது.

''ஏய்... ஏய் என்னையே நீ.. நிலை கொள்ள முடியாதவனாய் இரைச்சலுடன் சேற்றில் விழுந்தான்.

''பாத்தியா பாத்தியா ஒரு ஆம்பளைய அடிச்சி போட்டுட்டு அவ போற வேகத்த. நாளைக்கு என்ன நடக்கப் போகுது பாரேன்.'' அதிர்ச்சியோடு முணுமுணுத்த வண்ணம் ராசம்மாவும், பார்வதியும் சின்னம்மாவின் திண்ணையிலிருந்தபடியே ஜாடை காட்டினார்கள்.

சின்னம்மாவும் சேர்ந்து கொண்டாள். ''என்னதான் இருந்தாலும் ஒரு ஆம்பளைய கைய நீட்டி அடிக்கலாமா? அதுவும் அவன் தண்ணி போட்டா நிலையா நிக்க மாட்டான்னு ஊருக்கே தெரியும். பாத்தியா நாங்க சொன்னப்ப வக்காலத்து வாங்கினியே.''

எனக்கோ இன்ப அதிர்ச்சியானது, ''அட இவங்கள போயா மலட்டுச் சிறுக்கின்னு திட்டுனீங்க.''

''பின்னே நாங்களா மலட்டுச்சிறுக்கி, நல்லா கேக்குற நீ'' எரிச்சலோடும் வியப்போடும் என்னைப் பார்த்தார்கள்.

■ துரை. சண்முகம்

# சாதியம்: எதார்த்தம் எழுப்பும் சில கேள்விகள்!

கொடியங்குளம் தொடங்கி கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக தென் மாவட்டங்களில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எதிராக நடந்து வரும் சாதிவெறியாட்டம் மதுரை - மேலூர் அருகே உள்ள மேலவளவு படுகொலையோடு உச்சகட்டத்தை எட்டியுள்ளது. இல்லை! இதுவரை ஒரு நூறு உயிர்களுக்கும் மேலாகக் காவு கொண்டுவிட்ட "சாதிக் கலவரங்கள்" இன்னும் கொடூரமாகி மேலும் பல உயிர்களைப் பலி கொள்ளலாம்.

மேலவளவுப் படுகொலையோடு ஒப்பிடும் போது கொடியங்குளம் தாக்குதல் உட்பட தொடர்ந்து நடந்தவை சாதாரணமானவையாகவே தெரியும். இதற்கு முந்தைய "சாதிக் கலவர சம்பவங்க"ளுக்கெல்லாம் பல்வேறு காரணங்களைத் தேடி அலசி ஆராய்ந்து கொண்டிருக்கின்றனர், "அறிஞர்" பெருமக்களும், அரசு நியமித்த விசாரணைக் குழு அதிகாரிகளும், அரசியல் கட்சிகளும் செய்தித் தொடர்பு அமைப்புகளும்.

அதற்கான அவசியம் எதுவுமே இல்லை என்று எல்லாவற்றையும் அம்மணமாக எடுத்துக் காட்டிவிட்டது மேலவளவு படுகொலை. தாழ்த்தப்பட்ட மக்கள் மீதான சமூக, அரசியல் ஆதிக்கத்தை மீண்டும் உறுதிப்படுத்த ஆதிக்க சாதியினர், குறிப்பாக முக்குலத்தோர் நடத்தும் வன்முறை வெறியாட்டம்தான் எல்லாவற்றுக்கும் அடிப்படைக் காரணம். இதை அறிவிருந்தும் அயோக்கியர்களாக உள்ள ஓட்டுக் கட்சிக்காரர்கள், ஆதிக்க சாதிவெறியர்கள், சாதி சமரச போலி முற்போக்குவாதிகள் தவிர அனைவருமே ஒப்புக் கொள்ளுகிறார்கள்.

தென் மாவட்டங்களில் மட்டுமல்ல, வடக்கே உத்திரப் பிரதேசம், பீகார் மற்றும் மராட்டிய மாநிலங்களில் தீவிரமாகி இருக்கும் சாதி ஒடுக்குமுறைகளும் தாழ்த்தப்பட்டவர்களின் பதிலடிகளும் இதையே காட்டுகின்றன.

இப்போதும் எரிகிற வீட்டில் பிடுங்கியது ஆதாயம் என்கிற சுயநலத்தோடுதான் சாதிப் பிரச்சினைகளை ஓட்டுக் கட்சிகள் பயன்படுத்துகின்றன. சாதி அடிப்படையில் ஓட்டு வங்கிகளை வளைத்துப் போடும் நோக்கத்தோடு சாதி சங்க அமைப்புகளை நிறுவுவது; அரசு நிறுவனங்களுக்கு சாதிப் பிரமுகர்களின் பெயர் வைப்பது, சிலைகள் - நினைவுச் சின்னங்கள் வைப்பது; சாதி பார்த்து எம்.எல்.ஏ., எம்.பி.க்கள், அமைச்சர்களைத் தெரிவு செய்வது; சாதி சங்கங்களின் கோரிக்கைகளை ஏற்று சலுகைகளை வழங்குவது ஆகிய வழிகளில் சாதி அமைப்பைக் கட்டிக்காக்கவும் சாதிவெறியைத் தூண்டவும் ஓட்டுக்கட்சிகள் காரணமாக உள்ளன.

இதையே உக்கிரமாகவும் வக்கிரமாகவும் கடைப்பிடித்த பாசிச எம்.ஜி.ஆர்., ஜெயா - சசி கும்பல் உட்பட இந்த ஓட்டுக்கட்சிகள் தென் மாவட்ட சாதிச் சண்டைகளுக்கு எதிராக முதலைக் கண்ணீர் வடிக்கின்றன. சமபந்தி விருந்து, சாதி சமத்துவம், சமத்துவபுரம் என்றெல்லாம் நாடகமாடுகின்றன. பார்ப்பனியத்தையும், அது ஏற்படுத்தியுள்ள சாதிய அமைப்பின்படி ஆதிக்கம் செலுத்தும் முக்குலத்தோரையும் இனங்காட்டாமல் பொதுவில் சாதிய அமைப்பு முறையின் அநியாயங்களைப் பேசிப் பித்தலாட்டம் செய்கின்றன, போலிக் கம்யூனிஸ்டு கட்சிகள்.

இதே வகையிலான சமாதானம், சமத்துவம், மனிதாபிமானம், வன்முறை எதிர்ப்பு, உயிரிழப்புகளைக் காட்டிப் பல உபதேசங்களைப் பார்ப்பன பத்திரிக்கைகளும் வானொளி - வானொலியும் கூட செய்கின்றன.

இதையெல்லாம் கூட தாழ்த்தப்பட்ட மக்கள் வெகு விரைவாகவும் எளிதாகவும் புரிந்து கொண்டுள்ளனர். சாதி அடக்குமுறை கண்டஞ்சி ஒடுங்கி விடாமல் தாமே எதிர்த் தாக்குதல் தொடுப்பதன் மூலம் அவர்கள் இதைத் தெளிவு படுத்திவிட்டார்கள். ஆகவே, ஓட்டுக்கட்சிகளின் நிலைப்பாடுகள், செயல்பாடுகள் பற்றி அதிகம் பேசுவதால் பயனேதும் இல்லை.



மேலவளவு படுகொலை

இப்போது தாழ்த்தப்பட்ட மக்களின் அக்கறை, எதிர்பார்ப்பு, தேவையெல்லாம் தீண்டாமை - சாதி ஒழிப்பை சாதிக்கவல்ல புதிய, மாறுபட்ட, சரியான உண்மையான தீர்வும் திட்டமும் தலைமையும் வழிகாட்டலும்தான். தற்போதுள்ள எந்தெந்த அமைப்புகளிடம் தாழ்த்தப்பட்ட மக்கள் அத்தகைய நம்பிக்கையை வைக்க முடியும்?

குறைந்தபட்சம், தற்போது தென் மாவட்டங்களில் நடைபெறும் சம்பவங்களை சாதிக் கலவரங்களாகப் பார்க்காது, தாழ்த்தப்பட்ட மக்கள் மீதான ஆதிக்க சாதிகளின், குறிப்பாக முக்குலத்தோரின் சாதிவெறி படுகொலைகளாகக் கருதி தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் தமது ஆதரவைத் தரும் அமைப்புகளிடம்தான் தாழ்த்தப்பட்ட மக்கள் தமது எதிர்பார்ப்பை, நம்பிக்கையை வைக்க முடியும். இந்த வரிசையில் இப்போது இடம்பெறும் அமைப்புகள் - குழுக்கள் ஏராளமாக உள்ளன. எனினும் அவற்றை மூன்றாக வகைப்படுத்த முடியும்.

1. தீண்டாமை - சாதி ஒழிப்பு என்பதே தமது இலட்சியம், முழுமுதற் கடமை என பிரகடனப்படுத்தி உள்ள தாழ்த்தப்பட்ட சாதியினர் மட்டுமே உறுப்பினராகக் கொண்டுள்ள அமைப்புகள் - குழுக்கள்.

2. தேசிய இன விடுதலை, தனித் தமிழ்நாடு அல்லது தன்னுரிமைக்கு முன்னுரிமைத் தரும் இயக்கத்தோடு இணைத்துத் தீண்டாமை - சாதி ஒழிப்பு நோக்கத்தையும் அறிவித்துள்ள திராவிட, தமிழ் இன அமைப்புகள் - குழுக்கள்.

3. விவசாயிகளின் விவசாயப் புரட்சியை சாராம்சமாகக் கொண்ட புதிய ஜனநாயகப் புரட்சியின் ஓரங்கமாக தீண்டாமை - சாதி ஒழிப்பைக்

www.padippakam.com

கொண்டுள்ள மார்க்சிய - லெனினிய அமைப்புகள் - குழுக்கள்.

இவற்றில் மார்க்சிய - லெனினிய அமைப்புகளைப் பொறுத்தவரை அம்பேத்கார், பெரியாரை சமுதாய சீர்திருத்த - ஜனநாயகத் தலைவராக அங்கீகரித்தாலும் அம்பேத்காரியம், பெரியாரியம் என்பதை ஏற்பதில்லை. மார்க்சியம் - லெனினியம் மாவோ சிந்தனையை மட்டுமே தமது சித்தாந்தமாக கொண்டுள்ளனர்.

தாழ்த்தப்பட்டவர் மற்றும், திராவிட - தமிழ் இன குழுக்களைப் பொறுத்தவரை அம்பேத்காரியம், பெரியாரியம், மார்க்சியம் ஆகியவற்றை வெவ்வேறு அளவுகளில் கலந்து தமது சித்தாந்த வழிகாட்டுதலாக அறிவித்துள்ளன. அதை மண்ணுக்கேற்ற மார்க்சியம் என்றோ, தலித்தியம் என்றோ அழைத்துக் கொள்கின்றனர்.

இந்த அமைப்புகள் அனைத்தினதும் கோட்பாட்டு ஆய்வுகள், முடிவுகள், திட்டங்கள், கொள்கைப் பிரகடனங்கள் என்னவாக இருந்தாலும் அவை அனைத்தையும் உரசிப் பார்க்கும் உரைக் கற்களாக அமைந்துள்ளன தென்மாவட்டச் சம்பவங்கள். இந்த அமைப்புகளும் குறைந்தபட்சம் அடிப்படை அறிவு நாணயம் உள்ளவையாக இருப்பின் தாம் தீண்டாமை - சாதி ஒழிப்புக்கு முன்வைத்த கோட்பாட்டு முடிவுகள், ஆய்வுகள், திட்டங்களை இந்த சமயத்தில் அவசியம் செயல்படுத்த முனைய வேண்டும். அல்லது குறைந்தபட்சம் அவை எந்த அளவுக்கு சரியானவை என்று தென்மாவட்ட சம்பவங்களின் ஒளியில் பரிசீலினை செய்து நேர்மையாக முன்வைக்க வேண்டும்.

அதை விடுத்து சம்பவங்களின் பின்னே வால் பிடித்து வருபவர்களை, அல்லது சம்பவங்களுக்குப் பிறகு வியாக்கியானங்களும் ஆய்வுகளும் நடத்திக் கொண்டிருப்பவர்களை, தாழ்த்தப்பட்ட மக்கள் மதிக்கவும் மாட்டார்கள்.

பாட்டாளி வர்க்கத் தலைமையிலான புதிய ஜனநாயகப் புரட்சியைத் திட்டமாகக் கொண்டுள்ள மார்க்சிய - லெனினிய அமைப்புகள், தேசிய இனத் தன்னுரிமைக்கு முன்னுரிமை தரும் திராவிடத் தமிழினக் குழுக்கள் ஆகிய இரண்டு வகை அமைப்புகளையும் விட தாழ்த்தப்பட்டவரை மட்டுமே உறுப்பினராகக் கொண்ட, தாழ்த்தப்பட்ட மக்களின் நலனுக்கானவை என்று வலிந்து கூறிக்கொள்ளும் ''தலித்'' அமைப்புகள் - குழுக்களின் செயல்பாடுகள், நிலைப்பாடுகளே இப்போது கூடுதலான பாரிய பரிசீலனைக்குரியவை.

ஏனென்றால் முன்னிருவகையும் தமது நீண்டகாலத் திட்டத்தின் ஒரு பகுதியாக தீண்டாமை - சாதி ஒழிப்பைக் கொண்டுள்ளன. இந்த அமைப்புகளும் சாதிப் பிரச்சினையில் தமது உடனடிப் பணிகள் - கடமைகளை ஆற்றும் பொறுப்பு வாய்ந்தவைதாம். என்றாலும் தீண்டாமை - சாதி ஒழிப்பே தமது முழுமுதற் பணியாகவும் இலட்சியமாகவும் அறிவித்துள்ள அமைப்புகள் - குழுக்களின் மீது அதிக எதிர்பார்ப்பு வைப்பது இயல்புதான்.



பம்பாய், அம்பேத்கர் சிலை அவமதிப்புக் கலவரத்தில் போலீசால் கொல்லப்பட்டவர்களின் இறுதி ஊர்வலம்.

தமிழ்நாட்டின் வடமாவட்டங்களின் ஆதிதிராவிடர்கள் (பறையர்), மேற்கு மாவட்டங்களில் அருந்ததியர் (சக்கிலியர், மாதாரி), தென் மாவட்டங்களில் தேவேந்திர குல வேளாளர் (பள்ளர்) பெரும்பான்மையாகக் குவிந்துள்ளனர். மத்திய, கிழக்கு மாவட்டங்களில் ஆதிதிராவிடரும் தேவேந்திரரும் ஏறக்குறைய சமஅளவிலும் உள்ளனர்.

தலைநகர் சென்னையை அடுத்த மாவட்டங்களில் அதிகமாக இருப்பதால் ஆங்கிலேயர் காலத்தில் இருந்தே இரட்டை மலை சீனிவாசன், அயோத்தி தாச பண்டிதர், எம்.சி. ராஜா ஆகியோரின் முயற்சியால் ஆதி திராவிடர் ஓரளவு அரசு சலுகைகள் பெற்று முன்னேற முடிந்தது.

இதைத் தொடர்ந்து வடமாவட்டங்களில் அம்பேத்கரின் பெயர் பரவி குடியரசுக் கட்சியும், அது பிளவுபட்டு மூன்று பிரிவுகளும் தோன்றின. அவற்றின் தலைமைகளது பிழைப்புவாதப் போக்கால் விரக்தியுற்ற இளைஞர்களின் முயற்சியால் ஆங்காங்கே பல அம்பேத்கர் மன்றங்கள், பேரவைகள், முன்னணிகள் உருவாகின. நூற்றுக்கும் மேற்பட்ட இந்த அமைப்புகளோ, குடியரசுக் கட்சிப் பிரிவுகளோ களத்தில் இறங்கி சாதி ஒடுக்குமுறையை சமீபகாலம் வரை எதிர்த்துப் போராடியதே கிடையாது.

பிற மாவட்டங்களுக்கு அம்பேத்கர் அரசியல் பரவவில்லை. தாழ்த்தப்பட்ட மக்கள் தங்களின் தனித்துவ அடையாளமாக அம்பேத்கர் சிலைகளை மட்டும் பல இடங்களில் நிறுவிக் கொண்டனர். தென் மாவட்டங்களில் தேவேந்திர குல வேளாளர் அமைப்பு ரீதியாகத் திரளாவிட்டாலும் சாதி ஒடுக்குமுறைகளுக்கு எதிராக அவ்வப்பொழுது பல எழுச்சிகளை நடத்தியுள்ளனர். ஆனால் அரசியல் செல்வாக்கின்றி பின்தங்கியே உள்ளனர். மத்தியிலும் கிழக்கிலும் உள்ள தாழ்த்தப்பட்ட மக்கள் வாழும் பகுதிகளில் பொதுவுடைமை மற்றும் பெரியார் இயக்கங்களினால் சாதி ஒடுக்குமுறை ஓரளவு குறைந்திருக்கிறது. இருப்பினும் இங்கும் நீறு பூத்த நெருப்பாகவே சாதிப் பிரச்சினை நிலவுகிறது. மேற்கு மாவட்டங்களில் வேளாளக் கவுண்டர்கள், நாயுடுக்களின் ஆதிக்கத்தினால் கடையோரிலும் கடையோராய் அருந்ததியினர் ஒடுக்கி வைக்கப்பட்டுள்ளனர். எவ்வித சீர்திருத்தமும் இவர்களை எட்டாமல் மூச்சுத் திணறிக் கொண்டிருக்கின்றனர்.

மொத்தத்தில், தமிழ்நாட்டில் மரபுவழிப்பட்ட அம்பேத்கரியம் அதன் தனித்த வடிவில் முளைவிடும் போதே ஓட்டுக் கட்சிகளின் பிழைப்புவாதத்துக்குள் ஐக்கியமாகி வீரியமிழந்து போய் விட்டது. ஆனால் சமீப ஆண்டுகளில், சாதி ஆதிக்கத்துக்கு எதிராக போர்க்குணமிக்க சவால்களுடன், தாழ்த்தப்பட்ட மக்களின் வெவ்வேறு பிரிவுகளின் நலன்களைப் பிரதிநிதித்துவப் படுத்துவதாகக் கூறிப் பல அமைப்புகள் தோன்றியுள்ளன. திருமாவளவன் - சந்திரபோசு தலைமையிலான கூட்டமைப்பு, கிருஷ்ணசாமி தலைமையிலான கூட்டமைப்பு, பூவை மூர்த்தி

www.padippakam.com

**கடந்த 75 ஆண்டுகளில், தீண்டாமை - சாதி ஒழிப்பில் வர்க்க ரீதியில் அல்லாது, சாதி ரீதியில் ஒடுக்கப்பட்ட மக்களை அணிதிரட்டிச் சமுதாயப் புரட்சி நடத்துவதில் அம்பேத்கர் - பெரியார் இயக்கங்கள் சாதித்தது தான் என்ன?**

தலைமையிலான கூட்டமைப்பு ஆகியவையும், ஜான்பாண்டியன், இளைய பெருமாள் போன்றவர்களின் தலைமையில் பல உதிரி அமைப்புகளும் உள்ளன.

இவர்களுக்கெல்லாம் சித்தாந்த வழிகாட்டிகள் என்று பாவித்துக் கொண்டு சில "தலித்" பார்ப்பனர்களை முன்னிறுத்தி தலித் அல்லாத ஒரு மேட்டுக்குடிக் கும்பலும், நூற்றுக் கணக்கிலான தன்னார்வத் தொண்டு நிறுவனங்களும் "தலித் விடுதலை" - "தலித்தியம்" - என்பதைப் பிரசவித்துள்ளன.

பிழைப்புவாதத்தில் மூழ்கிப் போய்விட்ட மரபுவழி அம்பேத்கரிய வாதிகள், சித்தாந்தம், கோட்பாடு, கொள்கை பற்றியெல்லாம் அவ்வளவாக அலட்டிக் கொள்வதில்லை. தற்போது "தலித் அரசியலை" முன்வைத்துக் கிளம்பியுள்ள அமைப்புகள் - குழுக்கள், தமிழினவாதிகளுடன் சேர்ந்து கொண்டு ஒரு கருத்தை விடாப்பிடியாகப் பிரச்சாரம் செய்து வருகின்றனர். அதுதான், "கம்யூனிச இயக்கம் என்பது இந்த நாட்டில் தோல்வி அடைந்துவிட்டது; மார்க்சியத்தை விட, அம்பேத்கரியமும் பெரியாரியமுமே மண்ணுக்கேற்ற மார்க்சியம் என்ற தன்மையுடையதாக உள்ளது," என்கிற வாதம்.

போலிக் கம்யூனிசக் கட்சியை மட்டுமல்ல. சாதி நீக்கம் செய்து கொள்ளுவதையும், கிராமப்புறங்களில் தாழ்த்தப்பட்ட - பழங்குடி மக்களைத் திரட்டுவதையே முதன்மைப் பணியாகக் கொண்டு இயங்கும் மார்க்சிய - லெனினிய இயக்கத்தினருக்கும் தீண்டாமை - சாதி ஒழிப்பில் அக்கறை இல்லை என்றும், தமது அமைப்பு நலன்களுக்காக மட்டுமே தாழ்த்தப்பட்ட மக்களை பழங்குடியினரை அணிதிரட்டுகிறார்கள் என்றும், இவர்களிடம் சாதிப் பிரச்சினைக்குத் தீர்வு இல்லை என்றும் அவதூறு செய்கின்றனர்.

சரி! அது அப்படியே இருக்கட்டும். இந்த இயக்கம் சாதிப் பிரச்சினைக்குத் தீர்வு காணத் தவறிவிட்டதாகவே வைப்போம்.

கடந்த 75 ஆண்டுகளில், தீண்டாமை - சாதி ஒழிப்பில் வர்க்க ரீதியில் அல்லாது, சாதி ரீதியில் ஒடுக்கப்பட்ட மக்களை அணிதிரட்டிச் சமுதாயப் புரட்சி நடத்துவதில் அம்பேத்கர் - பெரியார் இயக்கங்கள் சாதித்தது தான் என்ன?

அம்பேத்கரும் - பெரியாரும் கனவு கண்டதுக்கு நேர்மாறாக தீண்டாமை - சாதி வெறி பன்மடங்கு பெருகி இருக்கிறது; அவர்களது இறுதி இலட்சியமாகிய பார்ப்பனிய சனாதன ஒழிப்பு, இந்துத்துவம் என்கிற பெயரில் புதுப்பிக்கப்படுகிறது; "ஒடுக்கப்பட்ட மக்கள்" ஓரணியில் திரண்டு பார்ப்பன ஆதிக்கத்தை எதிர்ப்பதற்குப் பதில் எதிரெதிர் முகாமாகப் பிரிந்து நின்று ஒருவரை ஒருவர் வெட்டிச் சாய்த்துக் கொள்கின்றனர் - இதைத் தானே தென்மாவட்ட சாதிச் சண்டைகள் காட்டுகின்றன. இது ஏன்? எப்படி?

கம்யூனிஸ்டுகள் மீதான அம்பேத்கரிய, பெரியாரிய, "தலித்திய" விமர்சனமே பொருளாதார ரீதியிலான மாற்றம் மட்டுமே அரசியல், சமூக, பண்பாட்டு மாற்றங்களைக் கொண்டு வந்துவிடும் என்கிற தோரணையில் செயல்படுகிறார்கள் என்பதுதான். ஆனால் பெரியார், அம்பேத்கர் இயக்கங்களின் கோரிக்கையும் தீர்வும் இடஒதுக்கீடு போன்றவை மூலம், தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களின் பொருளாதார முன்னேற்றம், அரசியலில் பங்கேற்பு, தாழ்த்தப்பட்ட மக்களின் மத மாற்றம் ஆகியவை மூலம் சாதி இழிவைப் போக்கிக் கொள்வது என்பவை தாம்.

இவற்றில் மதமாற்றம் பெரிய அளவில் தாழ்த்தப்பட்ட மக்களாலேயே ஏற்றுக் கொள்ளப்படவில்லை. அரசியலுக்குப் போனவர்களில் பலர் சந்தர்ப்பவாத, பிழைப்புவாதப் போக்குகளுக்குப் பலியாயினர். இட ஒதுக்கீடு, நலவாரியங்களின் காரியங்களால் (தொழில் மயமாதல், நகர மயமாதல் போன்றவற்றாலும்) ஆதிக்க சாதியினரின் நேரடி பொருளாதாரக் கட்டுபாடுகளில் இருந்து தாழ்த்தப்பட்ட மக்கள் சிறுக, சிறுக விடுபட்டார்கள். இது ஒரு சிறுபான்மையினருக்குத் தான் பொருந்தும் என்றாலும் இம்மக்கள் சமூக, அரசியல், பண்பாடு ரீதியாக ஆதிக்க சாதியினரின் ஒடுக்குமுறையில் இருந்து விடுபடவில்லை.

பொருளாதார ரீதியிலான முன்னேற்றத்துக்குப் பொருத்தமான அளவுக்கு சமூக, அரசியல், பண்பாட்டு உரிமைகள் பெறுவதற்கான அனைத்து விழைவுகளும் மேலும் கடுமையான, கோரமானமுறையில் ஒடுக்கப்படுகின்றன. இந்த உரிமைகளைத் தாழ்த்தப்பட்ட மக்கள் பெறுவதற்கான திட்டமோ குறிப்பான வழிவகைகளோ எதுவுமே அம்பேத்கரியத்திலும் பெரியாரித்திலும் கிடையாது. மதமாற்றம், வன்கொடுமைத் தடுப்புச்சட்டம், இரட்டை வாக்குரிமை போன்ற வழிகளில் அத்தகைய உரிமைகளைப் பெற முடியுமா? அல்லது "தலித்திய"க் கண்டுபிடிப்புகளான கட்டவிழ்ப்புகள், எதிர்க் கலாச்சார நடவடிக்கைகள் மூலம் தான் பெறமுடியுமா?

அதாவது அம்பேத்கரியமும், பெரியாரியமும் தீண்டாமை - சாதி ஒழிப்புக்கு முன்மொழிந்த தீர்வுகளின் நடைமுறைப்போக்கு மேற்கண்டதொரு கட்டத்தில் தவிர்க்கவியலாத இந்தத் தேக்கத்தை - சிக்கலை எதிர்கொண்டு முட்டிக்கொண்டு நிற்கிறது. மேலும் இந்தக் கட்டத்தில் தாழ்த்தப்பட்ட மக்களின் நட்பு சக்தியாக அம்பேத்கர் - பெரியாரால் கருதப்பட்ட பிற்படுத்தப்பட்ட சாதிகளே பகை முரண்பாட்டுடன் எதிரிகளாக நிற்கின்றன. இந்த முரண்பாட்டைத் தீர்த்து, தேக்கத்தையும் சிக்கலையும் முறியடித்து இந்தக் கட்டத்தை தாழ்த்தப்பட்ட மக்கள் கடந்து செல்வது எப்படி? தென்மாவட்ட சாதிச் சண்டைகள் எழுப்பியிருக்கும் இந்தக் கேள்விக்கு அம்பேத்காரியமும் பெரியாரியமும் அவற்றின் உரையாசிரியர்களும் என்ன பதில் சொல்கிறார்கள். உண்மையில் அவர்கள் தீர்வு சொல்ல மறுக்கிறார்கள் - கண்ணை மூடிக்கொள்கிறார்கள்!

• தொடரும் •

### அறிவிப்பு

*அன்பார்ந்த வாசகர்களே!*

*நீண்ட இடைவெளிக்குப் பின் இவ்விதழ் வெளிவருகிறது. எமது பொருளாதாரச் சுமையை குறைக்கும் வண்ணம் இவ்விதழ் 4 பக்கங்கள் அதிகரிக்கப்பட்டு, விலை ரூ. 5 ஆக உயர்த்தப்படுகிறது. மாதந்தோறும் இதழை எதிர்பார்க்கும் வாசகர்களிடம் எமது மன்னிப்பைக் கோருவதோடு, இனி மாதந்தோறும் புதிய கலாச்சாரம் வெளிவர எம்மால் ஆன அனைத்தையும் செய்கிறோம் என உறுதி கூறுகிறோம். தொடர்ந்து ஆதரவளிக்கவும்.*

— ஆசிரியர் குழு


படிப்பகம்

www.padippakam.com

# வாசந்தித் திமிர்

தேசிய இனங்களைக் கேவலமாகப் பார்ப்பதிலும், பாட்டாளி வர்க்கத்தைக் கொச்சைப் படுத்துவதிலும், 'வர்ணாசிரமத்தை உயர்த்திப் பிடிப்பதிலும் இந்தியா டுடே வாசந்தியின் எழுத்துக்கள் ஒளிந்து கொள்வதில்லை.

வன்மம் கொண்ட அவரது கட்டுரைகளில் இருந்து சில 'திமிர்கள்'.....

**தமிழ்க் குரோதம்**

• ஏப்ரல் 5 '96 இதழில் அமைச்சர் தமிழ்க்குடிமகனிடம் கேட்ட கேள்வி.

''உலகம் சுருங்கிப் போன கால கட்டுத்துல இன்ஜினீயரிங், மெடிக்கல் போன்ற ப்ரொபஷனல் கல்லூரிகளிலே கூட தமிழ்ல பாடம் நடத்தலாம்னு சொன்னா அண்டை மாநிலங்களில் கூட போய் பேசிப் பழக தமிழன் தடுமாறப் போறான்.''

■ காவிரிப் பேச்சு வார்த்தையை தமிழில் தான் நடத்தவேண்டும் என்று எவரும் கேட்கவில்லை. ஆனால் கர்நாடகம் நீர் தர மறுப்பது ஏன்? இந்தி - மராத்தி தெரிந்த பம்பாய்த் தமிழர்களை சிவ சேனா ரௌடிகள் விரட்டியது எதனால்?

இங்கெல்லாம் இந்தியும், ஆங்கிலமும் தமிழனைக் காப்பாற்றவில்லை. தமிழகத்தில் 90 பொறியியற் கல்லூரிகள் ஆங்கிலத்தைப் பயிற்று மொழியாகக் கொண்டிருக்கும் போது ஒரே ஒரு கல்லூரி தமிழில் வரப் போகிறது என்றவுடன் வருந்தும் வாசந்திக்கும், நனைகின்ற ஆட்டிற்காக அழும் ஓநாய்க்கும் என்ன வேறுபாடு?

**வர்ண சாணக்கியம்**

• ஜூன் 5 '97 இதழில் தென்மாவட்ட சாதிக் கலவரம் குறித்து வாசந்தியின் நேரடி அறிக்கையிலிருந்து:

''...முந்தைய நாள் பிராமணத் தெருவில் 18 வருஷமாக அமைதியாக வாழ்ந்து வந்திருக்கும் ஆதிதிராவிட பிரிவைச் சேர்ந்தவரும் அரசு மருத்துவமனையில் பணியாற்றுபவருமான டாக்டர் எம். மனோகரின் வீடும் கிளினிக்கும் இன்னும் இரண்டு வீடுகளும் சூறையாடப்பட்டிருந்தன.'

■ பிற்படுத்தப்பட்ட சாதிகளைப் போல் பார்ப்பனர்கள் தாழ்த்தப்பட்டோரை ஒடுக்குவதில்லை, தீண்டாமையையும் கடைபிடிப்பதில்லை என்பதை சொல்லாமல் நுணுக்கமாகப் பதிவு செய்யும் கலை யாருக்கு வரும்? சென்னை, தில்லி, அமெரிக்கா என குடியிருப்பை மாற்றி விட்ட அக்கிரகாரம், தான் காலி செய்த கிராமங்களில் ஒரு தாழ்த்தப்பட்ட டாக்டர் வசிப்பதைப் பற்றி கவலைப்படாது. அக்கிரகாரம் - ஊர் - சேரி என மனு தர்மத்தின் மூலம் 'அமைதி' காத்த பார்ப்பனர்கள் இன்று சாதிக் கலவரங்கள் குறித்து தீர்ப்புக் கூறுகிறார்கள்.

**புதிய சசிகலா**

• ஜூலை 16 '97 இதழில்.

''முதலமைச்சர் தான் பூணூல் போடாதவன் என்பதற்காக பிராமண பத்திரிகைகள் தன் ஆட்சியைக் கவிழ்க்க சதி செய்வதாக கூறியது எனக்கு மிகுந்த அதிர்ச்சியளிக்கிறது. அநியாயக் குற்றச்சாட்டு என்று மனம் பதைக்கிறது. பிராமணக் குலத்தில் பிறந்த ஜெயலலிதாவை எந்த பிராமணப் பத்திரிகை கண்டிக்காமல் விட்டது?''

■ ஒரு வழியாக பத்திரிகைகளில் பிராமணப் பத்திரிகைகள் உண்டு என்பதை அவர் ஒத்துக் கொண்டதற்கு நன்றி

5 ஆண்டுகள் உயிர்த் தோழியோடு தமிழகத்தை மொட்டையடித்த பாப்பாத்தி ஜெயலலிதா தேர்தலில் படுதோல்வி அடைந்ததை ''பிராமண குலத்தில் பிறந்த வாசந்தி'' எப்படிப் பார்த்தார்?

• ஜூன் 5 '96 இதழில் 'நல்லதோர் வீணை செய்தே' என்ற தலைப்பில்,

''அவரது (ஜெயலலிதா) வாழ்வில் எல்லாமே அசாதாரணம். இஷ்டமில்லாத வேடங்களை அணிய வேண்டிய நிர்ப்பந்தங்கள். இந்த நிர்ப்பந்தங்களுக்கிடையே இருந்த அறிவுத் தாகம், அதை விடாமல் துரத்திய முனைப்பு. நிஜ வாழ்வில் சந்தித்த ஏமாற்றங்கள். அது ஏற்படுத்திய அவ நம்பிக்கை. அதை சந்திக்க போட்டுக் கொண்ட ஆணவம் என்ற கவசம். அதுவே அவரது இயல்பாகிப் போன சோகம்.''

> வீசியதைக் கவ்விக் கொண்டு விசுவாசமாக வாலாட்டுகின்ற கலை இலக்கிய-அறிவு ஜீவிக் கும்பல்கள் தான் வாசந்தி மாபெரும் மனித நேய அறிவாளியாக உலா வர பல்லக்கு தூக்குகின்றனர்.

■ சசிகலா மட்டுமல்ல, வாசந்தியும் ஜெயலலிதாவின் ஆருயிர்த் தோழி தான்.

**நந்தனுக்கு நண்பனாக**

• ஆகஸ்ட் 13 '97 இதழில்.

''எல்லாருக்கும் சம உரிமை என்பது திராவிட சுயமரியாதை இயக்கத்தின் ஒரு அங்கமாக இருந்தும், தமிழின உணர்வு என்கிற கோஷம் முக்கியத்துவம் பெற்றுவிட சமூக நீதி பின்னுக்குத் தள்ளப்பட்டபோது தாழ்த்தப்பட்ட சமூகம் விளிம்புக்கு அப்பால் நின்றுவிட்டதை யாரும் கவனிக்கவில்லை. பிராமண ஆதிக்கத்தை எதிர்த்த பகுதியினருக்கே இன்று தாழ்த்தப்பட்டவர்களின் எதிர்ப்புக் குரலைச் சந்திக்கும் சகிப்புத் தன்மை இல்லை''.

■ ஊர் இரண்டு பட்டால் மாமிக்குத் தான் கொண்டாட்டம். அன்று பிராமண ஆதிக்கத்தை திராவிட இயக்கம் எதிர்த்த போது பார்ப்பனர்கள் சகித்துக் கொண்டார்களா? கல்லெறி பட்டுக் கொண்டு தானே பெரியார் களத்தில் நின்றார். இன்று பார்ப்பனியக் கருத்துடன் ஆதிக்க சாதியினர் தாழ்த்தப்பட்ட மக்களை ஒடுக்குவது உண்மையே. அதற்காக சங்கர மடமும், பிராமண சங்கமும், வாசந்திகளும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நண்பர்களா?

**வாலாட்டும் அறிவு ஜீவிகள்**

• ஆகஸ்ட் 13 '97 இதழில்.

''வெற்று கோஷங்களைக் கண்டு வெறுத்த அறிவு ஜீவிக் கும்பலின் கோஷம் - 'தலித் மக்களுக்கு எந்த சுதந்திரமும் இல்லாத இந்த நாட்டில் சுதந்திரப் பொன்விழா கொண்டாடுவது கேலிக் கூத்து. அதை கருப்பு தினமாகக் கொண்டாடுவோம்....''

''...ஆக்கப்பூர்வமான இயக்கம் நடத்த அறிவுஜீவிகளுக்குமா தெரியவில்லை. படித்தவர்களுக்கும் பார்வையில்லாமல் போனதற்காக, நானும் அனுசரிக்கப் போகிறேன். கருப்பு தினத்தை.''

■ தலித் அறிவு ஜீவிகளுக்கு பார்வையில்லை என்பதற்காக, வாசந்தி சுதந்திர தினத்தை கருப்பு தினமாக அனுசரிக்கிறாரா? என்ன அயோக்கியத்தனமான ஏமாற்று வேலை என்று நீங்கள் நினைக்கலாம். ஆனால் அந்த அறிவு ஜீவிகள் அப்படி நினைப்பதில்லை.

சர்வதேச அளவில் வலைப் பின்னல் கொண்ட தரகு முதலாளிகளின் சக்தி வாய்ந்த இந்தியா டுடே என்ற மாபெரும் செய்தி ஊடகத்தின் பளபளப்புத் தாளில் தங்கள் படைப்புக்கள் இடம் பெறுவது என்றால் சும்மாவா? கலை இலக்கியவாதிகளுக்கு ஒரு மலர், திராவிட இலக்கியத்துக்கு ஒரு மலர், தலித் இலக்கியத்திற்கு ஒரு மலர், எதிர்ப்பு இலக்கியத்திற்கு ஒரு மலர் - என எலும்புகளை அள்ளி வீசுகிறார் வாசந்தி.

வீசியதைக் கவ்விக் கொண்டு விசுவாசமாக வாலாட்டுகின்ற கலை இலக்கிய - அறிவுஜீவிக் கும்பல்கள்தான் வாசந்தி ஒரு மாபெரும் மனித நேய அறிவாளியாக உலா வர பல்லக்கு தூக்குகின்றனர். ■

ஆசிரியரும் வெளியிடுபவரும்: வி. வல்லபேசன், 3 செகந்நாதபுரம், நான்காவது தெரு, சேத்துப்பட்டு, சென்னை - 600 031.
அச்சிடுபவர்: எழில் பிரிண்டர்ஸ், 110, இரண்டாவது மாடி, 63, ஆற்காடு சாலை, சென்னை - 600 024.

படிப்பகம்

# ஏழுமலை வாசா உன்னைத் தேடி வந்தா எய்ட்ஸா!



ஸ்ரீமுகம் பெறுதல்:
ஸ்ரீ ஜகத்குரு, சங்கரமடம்,
காஞ்சிபுரம்.

ஜகத்குரு ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகளின் பாதா ரவிந்தங்களுக்கு மயிலாப் பூர் சுப்புணி நமஸ்காரம்.

கொஞ்சகாலமாவே இந்து மதத்துக்கும், இந்து தர் மத்துக்கும் சோதனையாவே வந்துண்டுருக்கு.

வெறுப்போட நியூஸ் பேப்பர எடுத்துப் படிச்சா ஒரு சேதிய படிச்சிட்டு திகைச்சுப் போயிட்டேன். மத்தவா பேப்பரா இருந்தா தேமேன்னு போயிருப்பேன், நம்ப தினமணியிலேயே போட்டிருக்கா, "திருப்பதி யில கத்தியால மொட்டை அடிச்சா எய்ட்ஸ் வந்துரு மோன்னு பிளேடு வாங்க உலக சுகாதார நிறுவனத்தி டம் தேவஸ்தானம் உதவி கேட்கிறது" 'ன்னு.

என்ன கிரகச்சாரமோ கலி முத்தி டுத்து. காமாசோமான்னு இத டீல் பண் ணாம், தெய்வீக காணிக்கை விஷ யத்தை இப்படி பப்ளிக்கா போட்டா மத்தவா என்ன நெனைப்பாள்.

அதுவும் இந்த கம்யூனிஸ்டு பட வாள், கம்யூனிஸ்டுன்னா இந்த சி.பி. எம். நம்பூதிரிபாடு வகையறா இல்லே, அவா நம்ப தேவஸ்தான அம்பிகள வச்சே தொழிற்சங்கம் கட்ற அளவுக்கு ஒத்து வந்துட்டாள்.

புதுசா சில கம்யூனிஸ்டு படவாள் லாம் சேர்ந்துண்டு "நாட்டையே மொட்டை அடிக்கிற வங்கிட்ட போயி நம் பள மொட்டை அடிக்கி றதுக்கும் பிளேடு கேக் குற அளவுக்கு நாடு போகுது எல்லாம் வெங்கடாஜலபதிக்கே வெளிச்சம்னு" கேலி பேசறாள். அப்படியே அறஞ்சுட லாம்னு ஆத்திரம் வர்றது.

ஏற்கனவே சொவரெல்லாம் "எய்ட்ஸ் தடுக்க ஆணுறையை பயன்ப டுத்துங்'கோன்னு எழுதித் தள்ளிருக் காள். திருப்பதி பூரா "எய்ட்ஸைத் தடுக்க பிளேடைப் பயன்படுத் துங்கள்"னு எழுதத் தொடங்கிட்டா என்ன பண்றது? யாருக்கு அவமா னம்? எல்லாரும் பகவான நம்பி வர்ற எடத்துல பிளேட நம்பச் சொன்னா பரிகசிக்கமாட்டாளா? இந்த விஷயத் துலயும் பெரியவா தலையிட்டே ஆக ணும்.

எவ்வளவோ சிரத்தை எடுத் துண்டு தூர்தர்ஷன் வரைக்கும் போய் காரியம் பண்ணி ஏழுமலையான் மகி மையைப் பத்தி 'பாலாஜின்னு' சீரியல் காட்டிண்டு இருக்கறச்சே, ஜனமான ஜனம் ஏழுமலையான வேண்டிண்டு இருக்றச்சே, ஏழுமலையான் தேவஸ் தானம், கேவலம் பிளேடுக்கு பாவா டைப் பாதிரிமார் நாட்டுண்ட்ட போயி கையேந்தறது கெடுதலா படறது.

மேலும் பாரம்பரியமா யூஸ் பண்ண கத்திய விட்டுட்டு பிளேடு யூஸ் பண்ண ஆகம விதியில எடமிருக்கா ன்னு குழப்பமும் மிஞ்சறது. இதுவும் பெரியவா தெளிவுபடுத்தனும்.

அப்படி பிளேடுதான் தோதுன்னா, நம்ப மியூசிக் அகடாமி டி.டி. வாசுகிட்ட சொன்னா நிரோத் உறை புராடக்ட் பண்றதவிட பிளேடை யும் பண்ணுடான்னு பெரியவா சொன்னா கேப்பன்.

எதுக்கும் பொள்ளாச்சி மகாலிங் கத்துகிட்ட கூட இது சம்பந்தமா பேசினா இந்து மதத்த விட்டுக் கொடுக் காம தலையாட்டுவாம், பெரிய வாளுக்கு தெரியாதது இல்ல, இருந்தாலும் நேக்கு ஆதங்கம் தாங்கல.

எதுவும் தோதுபட லேன்னா, நம்ம சுதேசி மஞ்ச், ஆர்.எஸ்.எஸ். போல தேசபக்தி அமைப்புல உள்ள சூத்ராள வச்சி திருப்பதியில ஷிப்ட்டு போட்டு மொட்டை அடிக்கலாம்.

பெரியவா சொன்னா கேக்க சூத்ராள்ள ஆளா இல்ல, எதுக்கு பொறத்தி யார்கிட்ட கையேந்தி அவ மானப்படணும்?

வருஷத்துக்கு 70 லட் சம் மொட்டை போடறாள்; புதுசா திட்டம் கட்ட 20 கோடி ரூபா ஒதுக்கறாள். ஏழுமலையான் பூஜை, புனஸ்காரத்த இண்டர் நெட்ல வேற காட்டறாள், மொட்டை அடிக்க பிளேடு வாங்க மட்டும் காசில்லை யான்னு காதுபடவே பேசிக்கறது சகிக் கல்ல.

எதுக்கும் மேலிடத்துல சொல்லி வைங்கோ இண்டர்நெட்ல இங்கி லீஷ்ல போட்டா பரவால்ல, வேதத்த சூத்திர பாஷைல சொல்லி நீசத்தனம் பண்ணிடப்போறா.

கடைசியா ஒரு விஷயம் பெரி யவா கவனமா இருங்கோ; வழக்கம் போல பெரியவாளுக்கு நம்பளவா சகலச் சேவையும் பண்ணாலும், பெரி யவாள்க்கு மொட்டை அடிக்கற பரி யாரி மேலே ஒரு கண்ணா இருங்கோ, கண்ட கத்தியும் போட்டு ஏதாவது ஏடா கூடமா ஆச்சுன்னா அப்புறம் 'சங்கராச்சா ரிக்கு எய்ட்ஸ்னு' இந்த சண்டாளப் பசங்க மானத்த வாங்கிடு வான், பெரியவாளுக் குத் தெரியாதது இல்ல, இருந்தாலும் மனசு கெடந்து பதர்றது.

எதுக்கும் பிளேடு பாக்கெட்ட மொத்தமா வாங்கி வச்சுண்டா நல்லது.

இதிலெல்லாம் பெரியவாதான் நேரா தலையிடணம்னு இல்ல, நம்ப இராமகோபாலனை உசிப்பி விட் டாலே உசிதம்னு தோணறது. சகல க்ஷேமத்துக்கும் பெரியவா பொற்பா தம் பணியும்,

**சுப்புணி அய்யர்,**
**மயிலாப்பூர், மெட்ராஸ் - 4.**